
# ஹஸ்ரத் மஸீஹ் ஈசப்னு மர்யம் (அலை) அவர்களின் மரணம்

## (அபூ அப்தில்லாஹ்வின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்)



நாம் மர்யமுடைய மகனையும் அவருடைய தாயையும்
ஓர் அடையாளமாக்கினோம். அவ்விருவருக்கும்
தங்குவதற்கேற்றதும் நீரூற்றுகளைக் கொண்டதுமான
ஓர் உயர்ந்த இடத்தில் தஞ்சமளித்தோம். (திருக்குர்ஆன் 23:51)

*A.P.Y. Abdul Qadir M.A.*

# ஹஸ்ரத் மஸீஹ் ஈசப்னு மர்யம் (அலை) அவர்களின் மரணம்

## (அபூ அப்தில்லாஹ்வின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில்)

A.P.Y. அப்துல் காதிர் M.A.

வெளியிடுவோர்
தமிழக புத்தக வெளியீட்டுக் குழு (தென் மண்டலம்)
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்
ஆசூரா கீழத் தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி - 627 005.
Ph : 0462 - 2352456

Copyrights Reserved

First Edition 2012

Copies : 1000

**Hazrat Masih Esabnu Maryam (Alai) Avargalin Maranam**
**(Abu Abdullahvin Kutrachattugalukku Badhil)**

Written by
**A.P.Y. ABDUL QADIR M.A.**

Published by
**Book Publishing Committee**
Tamil Nadu (South Zone)

Type-set by
**A. Muhammad Nisar**

Printed by
**Ajantha - Sivakasi**

for
**NAZARAT NASHR-O-ISHA ATH**
Sadr Anjuman Ahmadiyya, Qadian, Punjab - 143 516

**ISBN No. : 978-81-7912-361-4**

Price :

# உள் பக்கம்...


1. முன்னுரை 6

2. திருக்குர்ஆன் ஈஸா நபி உடலோடு உயர்த்தப்பட்டதாகக் கூறவில்லை 8

3. திருக்குர்ஆனில் கூறப்படாததை கூறும் அபூ அப்தில்லாஹ் 11

4. தவஃப்பீ என்றால் ரூஹ் -ஐ கைப்பற்றுதல் என்பதுதான் அல்லாஹ் மற்றும் ரஸூலின் தீர்ப்பு 15

5. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை தோற்றுவித்த வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அறைகூவல் 21

6. இறந்தவர் மீண்டும் உலகிற்கு வர முடியாது 25

7. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் உடலோடு உயர்த்தவில்லை என்று கூறுகிறான் 30

8. மிஃராஜ் பயணம் ஒரு ஆத்மீக் காட்சியே! 40

9. ஆதம் (அலை) அவர்கள் வாழ்ந்த பூவுலக சொர்க்கம் 46

10. தவஃப்பீ என்றால் ரூஹ் -ஐ கைப்பற்றுதல் என்றே பொருள் 49

11. ஈஸா நபியை வானத்திற்கு உயர்த்தாமல் அல்லாஹ்வால் காப்பாற்ற முடியாதா? 53

12. திருக்குர்ஆனின் 3:55 வசனத்திற்கு விளக்கம் 55

13. 5:75, 3:145 வசனங்களுக்கு அபூ அப்தில்லாஹ் தரும் தவறான விளக்கம் 61

14. எந்த தூதருக்கும் உணவு உண்ணாத உடலை அல்லாஹ் கொடுக்கவில்லை 69

15. மர்யத்தின் மகன் உவமையாகக் கூறப்பட்டதற்கு அபூ அப்தில்லாஹ்வின் கூச்சல் 78

16. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் திரும்பி வரமாட்டார் 81

17. ஈஸா நபி (அலை) செய்த அற்புதங்களும் பிறர் செய்த அற்புதங்களும் 82

18. இரு ஈஸா நபிமார்களின் இரு வேறு தோற்றங்கள் 86

19. சிலுவை முதல் காஷ்மீர் வரை 88

20. ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் ஹிஜ்ரத் 93

21. ஆதம் நபி மட்டுமன்று மனித இனமும் மண்ணினால் படைக்கப்பட்டதே! 98

22. தந்தையில்லாப் பிறப்புகள் 101

23. அபூ அப்தில்லாஹ்விற்கு நபிமார்களின் வரலாறு தெரியவில்லை 105

24. அகக்கண்ணும் புறக்கண்ணும் 107

25. உலகளாவிய கிலாஃபத் 72 பிரிவுகளுக்கும் ஏன் இல்லை? 108

26. எல்லா நபிமார்களை விட எல்லா வகையிலும் சிறந்தவர் நபிகள் நாயகமே (ஸல்) ! 110

27. அதிபர் பூட்டோவின் மரணம் பற்றி, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் முன்னறிவிப்பும் அதிபர் ஜியாவின் அழிவு குறித்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னறிவிப்பும் 114

28. கடந்த கால பொய் நபிமார்களுக்கு முகவரி உண்டா? 123

29. இரு வேறு ஈஸா நபிமார்கள் 125

# ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள்!

## "காதியானிகளின் ஆகாசப் புளுகு" என்ற அபூ அப்தில்லாஹ்வின் நூலுக்கு மறுப்பு

ஆகாசப் புளுகு என்றால் அப்பட்டமான பொய், நம்ப முடியாத கட்டுக்கதை என்பதுதான் அதற்குப் பொருள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக உயிருடன் இருக்கிறார்கள் என்று கூறுவது ஆகாசப் புளுகா? அல்லது அவர்கள் இறந்து விட்டார்கள் என்பது ஆகாசப் புளுகா? மூட நம்பிக்கைகளுக்குப் பலியாகாத எவரும் முதலில் சொன்னதுதான் அண்டப்புளுகு என்றும், அடுத்துச் சொன்னதே உண்மை என்றும் அடித்துச் சொல்வார்கள்.

ஆனால் அந்-நஜாத் இதழின் ஆசிரியர் அபூ அப்தில்லாஹ்விற்கு இது தலைகீழ் பாடமாக உள்ளது. ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பது காதியானிகளின் ஆகாசப் புளுகு என்கிறார். ஈஸா நபி (அலை) அவர்கள் இன்னும், எத்தனையோ காலம் உயிரோடு இருப்பார் என்பது அபூ அப்தில்லாஹ்வின் கூற்றாகும். 21 ஆம் நூற்றாண்டின் இணையற்ற நகைச்சுவை இது! இதன் காரணமாகவே 13 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் எழுதிய காதியானிகளின் ஆகாசப் புளுகு என்ற நூலுக்கு சமாதான வழி மாத இதழ் தனி நூலாக மறுப்பு வெளியிடவில்லை. அது மட்டுமல்ல; அந்த நூலின் தலைப்பு போலவே அந்த நூலின் பல கூற்றுக்களும் அமைந்திருந்தன. சிறிது சிந்தனைத் திறன் உள்ளவர்கள் கூட அவை அப்பட்டமான கற்பனை என்பதை எளிதில் உணரலாம். அதனால் அந்த நூலிலுள்ள அத்தனை அபத்தக் கூற்றுக்களுக்கும் மறுப்பெழுதாமல் சில முக்கிய விஷயங்களை மட்டும் சமாதான வழி இதழில் அவ்வப்பொழுது கோடிட்டுக் காட்டி வந்தோம்.

ஆனால், அபூ அப்தில்லாஹ் தமது கூற்றுக்களுக்கு சமாதான வழி பதில் கூறவில்லை; பதில் கூறவும் முடியாது என இறுமாப்புடன் கூறியும், எழுதியும் வந்தார். தனது நூலுக்கு, தமிழகத் தலைமையோ, இந்தியத் தலைவரோ, ஏன்? காதியானிகளின் கலீஃபாவோ பதில் தர



முடியாது என்று தலைக்கனம் கொண்டு எழுதினார். இது, மூட நம்பிக்கையை பாமர முஸ்லிம்களிடையே பரப்பும் முயற்சி மட்டுமல்ல. அவர்களை இணை வைத்தல், வழிகேடு ஆகிய படுகுழிகளில் தள்ளும் முயற்சியும் ஆகும்.

எனவே காதியானிகளின் ஆகாசப் புளுகு - 1 என்ற அபூ அப்தில்லாஹ்வின் நூலை முழுமையாக மறுத்து அவருடைய ஒவ்வொரு அபத்தக் கூற்றுக்கும் தகுந்த பதில் சொல்லும் வகையில் இந்த நூலை வெளியிடுகிறோம். கிறிஸ்தவர்களின் தவறான நம்பிக்கையை தழுவிய, 'ஈஸா நபி மரணிக்கவில்லை' என்ற மூட நம்பிக்கை முஸ்லிம்களின் மனங்களிலிருந்து முற்றாக மறைந்து உண்மை நிலையை அவர்கள் உணரும் காலம் விரைந்து வர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

– நூல் வெளியீட்டாளர்

## 1. முன்னுரை

அந்-நஜாத் என்னும் மாத இதழின் ஆசிரியர் அபூ அப்தில்லாஹ் காதியானிகளின் ஆகாசப் புளுகு - 1 என்ற தனது நூலை ஒரு திறனாய்வு எனக் குறிப்பிடுகிறார். மேலும் ஹஸ்ரத் தாஹிர் அஹ்மத் (ரஹ்) அவர்களின் 'ஈஸா நபி (அலை) அவர்களின் மரணம்' என்ற நூலையே தமது திறனாய்வுக்கு எடுத்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார். ஆனால் அவர் கூறியுள்ளபடி அவருடைய எல்லைக் கோட்டை வகுத்துக் கொள்ளாமல் பிற நூல்களில் காணப்படும் கருத்துக்களையும் விமர்சனம் செய்கிறார். இதிலிருந்து திறனாய்வு என்பதே என்னவென்றே அவருக்குத் தெரியாது என்ற முடிவிற்கே நாம் வரவேண்டியதிருக்கிறது.

திறனாய்வு என்று கூறி அதற்கென ஒரு நூலையும் தேர்ந்தெடுத்த பிறகு எல்லாவற்றையும் போட்டுக் குழப்பியடிப்பது திறனாய்வு என்பதையே அர்த்தமற்றதாக்கி விடுகிறது. இதற்குப் பதிலாக ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்ற அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கையை, தான் விமர்சிக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கலாம்.

மேலும் அபூ அப்தில்லாஹ் எந்த நூலை தமது திறனாய்வுக்கு எடுத்ததாகக் கூறுகிறாரோ அந்த நூலை அவர் முழுமையாகக் கருத்தூன்றி படிக்கவில்லை என்பது அவருடைய பல கூற்றுக்களிலிருந்து புலனாகிறது. அதிலுள்ள பல வலுவான வாதங்களை அவர் கண்டு கொள்ளவே இல்லை. அந்த வாதங்களுக்கு அவரால் உரிய பதில் தர இயலாததால் ஒருவேளை அவற்றை மூடி மறைத்திருக்கலாம்.

உண்மையில், ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் மரணம் என்ற நூலில், ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தமது கருத்தை நிலைநாட்ட திருக்குர்ஆன், நபிமொழி, இமாம்களின் கருத்துக்கள், அகராதி, பைபிள் ஆகியவற்றிலிருந்து சான்றுகள் பல தந்திருந்தும் அந்த நூலில் குர்ஆன், ஹதீஸ் ஆதாரம் இல்லை எனவும் பைபிளிலிருந்து மட்டுமே சான்று காட்டப்பட்டிருப்பது போன்றும் ஒரு பிரமையை ஏற்படுத்த அபூ அப்தில்லாஹ் முனைந்துள்ளார். உண்மையில், 'ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம்' என்ற நூல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதை மிக அருமையாகத் தெளிவுபடுத்தும் ஓர் ஆய்வு நூல் ஆகும். இதனை, அந்த நூலை முழுமையாகப் படித்தவர்கள் நிச்சயம் உணர்வார்கள்.

திறனாய்வு என்ற பெயரால் அபூ அப்தில்லாஹ் மக்களைக் குழப்புவதோடு நின்று விடாமல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றியும் அதனை நிறுவிய ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் பற்றியும் தரக்குறைவான சொற்களைப் பயன்படுத்தி விமர்சித்துள்ளார். இது அவருடைய பண்படாத நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இறுதியாக, ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்களோ அஹ்மதி முஸ்லிம்களோ கூறாத ஒரு கருத்தை, இவ்வாறு காதியானிகள் கூறலாம் என்று கற்பனையாக ஒரு கருத்தை தாமே புனைந்து அதைப் பற்றியும் அபூ அப்தில்லாஹ் விமர்சனம் செய்கிறார். இது அவருடைய கோணல் புத்தியையே காட்டுகிறது.



## 2. திருக்குர்ஆன் ஈஸா நபி உடலோடு உயர்த்தப்பட்டதாகக் கூறவில்லை

**அபூ அப்தில்லாஹ், தனது நூலின் முகப்பு அட்டையில் திருக்குர்ஆனின் 19:34 வசனத்தை எழுதியுள்ளார்.**

*நான் பிறந்த நாளிலும் நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர்பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும் என்று கூறினார்.*

**நாம் தரும் விளக்கம்:**

1) ஈஸா நபி (அலை) அவர்கள் தன் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில், தான் இறைவன் அளவில் உயர்த்தப்பட்டு, அங்கு சில ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மீண்டும் பூமிக்கு திரும்ப வருவதைப் பற்றி எதுவும் கூறாதிருபபது அப்படியொரு சம்பவம் நிகழாது என்பதைக் காட்டுகிறது.

2) அபூ அப்தில்லாஹ் பக்கம் 53ல், ஈஸா நபி பெற்றுள்ள தனிச் சிறப்புகளைப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். இவை 5:110வது வசனத்தில் அல்லாஹ் கூறுவான். மர்யமின் மகன் ஈஸாவே உமக்கும் உம்முடைய தாயாருக்கும் நான் இறக்கிய அருளை நினைத்துப் பார்ப்பீராக! என்று கூறி, அல்லாஹ் எடுத்துக் காட்டும் அருட்கொடை பட்டியலில், ஈஸா நபியை தன்னளவில் உயர்த்தி, பிறகு மீண்டும் உலகுக்கு திரும்பி வருவதைப் பற்றி கூறவில்லை. எனவே அவர் திரும்ப உலகுக்கு வரப்போவதில்லை.

3) 5:117 வசனத்தில் ஈஸா நபி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்கள் மத்தியில் இருந்த காலம் வரை நான் அவர்களுக்கு சாட்சியாக இருந்தேன். ஆனால் நீ எனக்கு மரணத்தை தந்த பின் நீயே அவர்களைக் கண்காணித்தவனாக இருந்தாய் என்றும் கூறுவதால், இந்த வசனத்திலும் இறைவன் அளவில் அவர் உயர்த்தப்பட்டு, அங்கு வாழ்ந்து மீண்டும் உலகுக்கு திரும்ப இறங்குவதைப் பற்றி கூறாததினாலும், ஈஸா நபி (அலை) அவர்கள் உடலோடு இறைவன் அளவில் சென்றார் என்பது தவறு என்று தெளிவாகிறது.

# காதியானிகளைப் பற்றி அபூ அப்தில்லாஹ் கிறிஸ்டியானி

**அபூ அப்தில்லாஹ், நூலின் முன்னுரையில் இவ்வாறு எழுதுகிறார்:**

*இமாம் புகாரீ (ரஹ்), ஜீலானி (ரஹ்) போன்ற கண்ணியமிக்க இறையன்பர்கள், அவர்களின் ஊர்ப்பெயர் விளங்க அழைக்கப்படுகின்றனர். இம்மரபிற்கிணங்க காதியானில் தோன்றிய கபடதாரி மிர்ஸா குலாமிற்கு 'காதியானி' என்று நாமம் சூட்டி அவரைக் கண்மூடி பின்பற்றும் (தக்லீது செய்யும்) பக்த கோடிகளையும் 'காதியானிகள்' என்றழைப்பதில் தவறென்ன? எனவே நாம் அவர்களைக் காதியானிகள் என்றே விளிப்போம். அவர்கள் தம் புளுகுகளை அம்பலப்படுத்துவோம் (பக்கம் 3,4)*

**நம் பதில்:**

1) அபூ அப்தில்லாஹ் பிறந்தது கிறிஸ்டியான் நகர் எனும் ஊராகும். அவர் கூறிய மரபுக்கு ஏற்ப அவரை கிறிஸ்டியானி என்று அழைப்பதில் தவறில்லை என்று நடுநிலையாளர்கள் கூறுவர். எனவே அவருக்கு நடுநிலையாளர்கள் அபூ அப்தில்லாஹ் கிறிஸ்டியானி எனும் பெயரைச் சூட்டியுள்ளனர்.

2) அஹ்மதி முஸ்லிம்களாகிய எங்களைக் காதியானிகள் என்று அழைப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சிதான். அபூ அப்தில்லாஹ் கிறிஸ்டியானி தம் நூலில் எல்லா இடங்களிலும் எங்களை அப்பெயரால் தான் அழைத்துள்ளார். முஸ்லிம்களில் எல்லாப் பிரிவுகளும் காதியானி என்றே அழைக்கின்றனர். எல்லாம் அறிந்த அல்லாஹ் அவ்வாறு அழைக்கப்பட வேண்டும் என்று நாடியுள்ளான் போலும். காரணம், திருக்குர்ஆனில் இஸ்ரவேல் சமுதாயத்திற்கு மட்டும் வந்த ஈஸா நபி (அலை) அவர்களைப் பின்பற்றியவர்களை அல்லாஹ் நஸாரா என்று அழைக்கிறான்.

திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் ஈஸா நபி (அலை) அவர்கள் பிறந்த ஊர் நாசரேத் என்பதால், அவரைப் பின்பற்றிய மக்கள் 'நஸாராக்கள்' என்று அழைக்கப்பட்டனர் என்று விளக்கம் தருகின்றனர். அவர்கள் நஸாராக்கள் என்று திருக்குர்ஆனில் 14 இடங்களில் அழைக்கப்படுகின்றனர்.



இவ்வாறே ஈஸா நபி (அலை) அவர்களின் இரண்டாவது வருகையில், அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பிறந்த ஊராகிய காதியான் எனும் பெயரால், அவரைப் பின்பற்றும் உண்மை முஸ்லிம்களாகிய அஹ்மதிகள் அழைக்கப்பட வேண்டும் என்பதும் அவ்வாறு அழைக்கப்படுவதன் மூலம் அன்னாரது இரண்டாவது வருகை உண்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் அல்லாஹ்வின் திட்டம் போலும்.

இவ்விரண்டு ஈஸா நபிமார்களுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. அவற்றுள் அந்தந்த நபிமார்களின் ஊர்ப்பெயரால் அந்தந்த நபிமார்களைப் பின்பற்றுபவர்களும் அழைக்கப்படுவதும் ஒன்று ஆகும். இப்படிப்பட்ட ஒரு ஒற்றுமையை அல்லாஹ் ஏற்படுத்தி, அபூ அப்தில்லாஹ் கிறிஸ்டியானி போன்றவர்களால் காதியானி என்று எங்களை அழைக்க வைத்துள்ளான். அல்ஹம்துலில்லாஹ்!

3) அபூ அப்தில்லாஹ் கிறிஸ்டியானி தம் நூலில் பல்வேறு இடங்களில் ஈஸா நபி (அலை) அவர்களை கிறிஸ்தவர்கள் நம்புவது போல், ஈஸா நபி உடலோடு உயர்த்தப்பட்டதையும், மீண்டும் பூமிக்கு திரும்பவும் வருவார் என்றும் நம்புகிறார். மேலும், ஈஸா நபி (அலை) செய்த அற்புதங்களை உவமை வடிவிலானவை என்று உணராமல் சொற்பொருள்படி கிறிஸ்தவர்கள் நம்புவது போல் நம்புகிறார். உலகில் நபி (ஸல்) அவர்கள் முதல் வேறு எந்த நபிக்கும், வேறு எந்த மனிதனுக்கும் கொடுக்கப்படாத சில தனிச்சிறப்புகள் ஈஸா (அலை) அவர்கள் பெற்றுள்ளார்கள் என்று குர்ஆன் சான்று பகர்கிறது என்று நம்புகிறார். (பக். 53) எனவே அபூ அப்தில்லாஹ்வை கிறிஸ்டியானி என்று அழைப்பது மிகப் பொருத்தம் எனறு யாரும் கூற முடியும்.

## ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள்

அபூ அப்தில்லாஹ் தமது நூலில் திருக்குர்ஆனில் கூறப்பட்ட சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். அதே சமயத்தில் திருக்குர்ஆனில் காணப்படாத சில கட்டுக்கதைகளையும் எடுத்து விடுகிறார். இன்னும்

மக்கள் கூறுகிறார்கள் எனத் திருக்குர்ஆன் கூறும் சில கூற்றுக்களையும், திருக்குர்ஆனின் கருத்து என அவர் தவறாகக் கருதிக் கொண்டிருக்கும் சிலவற்றையும், தமது நூலில் கதம்பமாக வழங்குகிறார். இத்தகைய ஒரு கலப்படமான கருத்துகளைக் கூறிவிட்டு அவற்றையெல்லாம் உண்மை என நம்புகின்றவன் ஈஸா (அலை) அவர்கள் பற்றிய சம்பவங்களை ஒருபோதும் மறுக்கமாட்டான் என்கிறார். ஆதாரமற்ற கூற்றுக்களை நம்புபவர்கள் இவருடைய அபத்தக் கூற்றுக்களையும் ஏற்றுக் கொள்ளவே செய்வர். அதைத் தொடர்ந்து ஈமானில் கறையுடையவர்களே அல்லாஹ்வின் கூற்றுக்களில் அவநம்பிக்கை கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகிறார். இதுவும் உண்மையே. ஈமானில் கறையுடையவர்களே தவ்ஹீதிலிருந்து தடம் புரண்டு ஈஸா நபியை இறைவன் அளவுக்கு உயர்த்துவார்கள்!

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சார்ந்தோர் இறைவனின் இறுதி வேதமான திருக்குர்ஆனில் கூறப்பட்ட அனைத்து கருத்துக்களையும் அப்படியே நம்புகின்றனர். அவ்வாறே அல்லாஹ்வின் வல்லமையின் மீதும், அவனுடைய பிற பண்புகள் மீதும் ஈமான் கொள்கின்றனர். ஆனால் அல்லாஹ் கூறாத ஒன்றை அஹ்மதி முஸ்லிம்கள் நம்பத் தயாராக இல்லை. அல்லாஹ் கூறாத எந்தக் கருத்தையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கமாட்டார்கள் என்பதும் அஹ்மதி முஸ்லிம்களின் நம்பிக்கையாகும்.

## 3. திருக்குர்ஆனில் கூறப்படாததை கூறும் அபூ அப்தில்லாஹ்

**அபூ அப்தில்லாஹ்வின் கூற்றுக்களை வரிசைப்படுத்திக் காண்போம்.**

**அ) திருக்குர்ஆனில் கூறப்பட்ட நிகழ்ச்சிகள்:**

1. ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் நெருப்பிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள்.
2. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும், பனீ இஸ்ராயீல் மக்களும் நீர் நிலையை விட்டு தப்பிச் சென்றது.



3. ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்கள் ஆண் தொடர்பின்றி கருவுற்று ஈஸா (அலை) அவர்களைப் பெற்றெடுத்தது.
4. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜ் சென்று வந்த நிகழ்ச்சி.

இவை திருக்குர்ஆனில் கூறப்பட்ட உண்மை நிகழ்ச்சிகள் ஆகும். இவற்றை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம்.

**ஆ) திருக்குர்ஆனில் கூறப்படாத செய்தி, கற்பாறைக்குள் இருந்து நிறை சூல் ஒட்டகம் வெளி வந்து குட்டி ஈன்றது.**

அபூ அப்தில்லாஹ் இதனை திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்க முடியாது. ஏனென்றால், திருக்குர்ஆன் அவ்வாறு எங்கும் கூறவில்லை. எனவே இது அபூ அப்தில்லாஹ்வின் ஆகாசப்புளுகு ஆகும்.

**இ) மக்கள் சொல்வதாக திருக்குர்ஆன் கூறும் செய்தி.**

குகைவாசிகள் முந்நூறு ஆண்டுகள் தூக்கத்திலிருந்து எழும்பியது. இதில் 300 ஆண்டுகள் என்பது திருக்குர்ஆனில் கூறப்படாத கருத்தாகும்.

இவ்வாறு திருக்குர்ஆனில் கூறப்படாதவற்றை கூறப்பட்டதாகவும், மக்கள் நம்புகின்ற கருத்தை அல்லாஹ்வின் கருத்து என்றும் அபூ அப்தில்லாஹ் நம்புவதால், திருக்குர்ஆனைப் புரிந்து கொள்ளும் அறிவாற்றல் அவருக்கு இல்லை என்பது புலனாகிறது.

**ஈ) அபூஅப்தில்லாஹ் தன் நூலின் பக்கம் 7-ல் எழுதுகிறார்:**

*மூஸா (அலை) அவர்களின் காலத்தில், மாட்டின் ஒரு அங்கத்தால் இறந்தவனின் உடலில் அடிக்க மரித்தவன் உயிர்பெற்று எழுந்து சில தகவல்களை வெளிப்படுத்தி விட்டு மீண்டும் இறந்தான் என்று அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார். இதனையும் திருக்குர்ஆனில் இருப்பதாக அபூ அப்தில்லாஹ் எழுதியுள்ளார்.*

**எம் பதில் :**

1. திருக்குர்ஆன் 2:73-74 இல், நீங்கள் ஒருவனைக் கொலை செய்து விட்டு அதைப் பற்றித் தர்க்கித்துக் கொண்டிருந்த சமயத்தில், நீங்கள் மறைத்து வைத்திருந்ததை அல்லாஹ் வெளியாக்கினான்.

ஆகவே அவர்களை நோக்கி அதில் ஒரு பாகத்தைக் கொண்டு அவனை அடியுங்கள் என நாம் கூறினோம். இவ்வாறே இறந்தவர்களை அல்லாஹ் உயிர்ப்பிப்பான்.

ஒரு மாட்டை அறுப்பது தொடர்பான வசனங்களையும் (2:68-72) ஒரு மனிதரைக் கொலை செய்தது தொடர்பான வசனங்களையும் (2:73,74) அபூ அப்தில்லாஹ் தொடர்புபடுத்தி இருப்பதை சரி என்று ஒரு வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் அதன் ஒரு பாகம் என்பது மாட்டின் பாகம் என்றோ, இறந்தவன் உயிர்பெற்று சில தகவல்களைத் தந்து விட்டு மீண்டும் இறந்தது பற்றியோ இவ்வசனங்களில் கூறப்படவில்லை. இவை அபூ அப்தில்லாஹ்வின் சுய விளக்கமாகும். இதற்கு நம்பத்தக்க நபிமொழிகளிலும் எந்த ஆதாரமும் இல்லை.

2. திருக்குர்ஆனின் நடைமுறையின் அடிப்படையில் இச்சம்பவம் தவறாகும். முதலில் கொலை சம்பவம் கூறப்பட வேண்டும். பின்னர் அதற்குரிய தீர்வு கூறப்பட வேண்டும். இதுவே திருக்குர்ஆனின் நடைமுறையாகும்.

உதாரணமாக, திருக்குர்ஆன் 5:28-32 இல், ஆதமின் இரு புதல்வர்களின் சண்டையையும், ஒரு மகன் மற்றொரு மகனைக் கொலை செய்ததையும், பிறகு பிணத்தை எவ்வாறு மறைப்பது என்ற பிரச்சனை எழுவதையும் திருக்குர்ஆன் கூறுகிறது.

திருக்குர்ஆன் 5:32 வசனத்தில் பிணத்தை எப்படி மறைப்பது என்பதற்கு வழிகாட்ட, அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பினான். அது பூமியைத் தோண்டியது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதில் கொலை சம்பவம் முதலிலும், அதற்குரிய தீர்வு இரண்டாவதும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அபூ அப்தில்லாஹ் எடுத்துக் காட்டும் விசயத்தில், பிரச்சனைக்குரிய தீர்வு முதலில் கூறப்படுகிறது. கொலை சம்பவம் பின்னர் கூறப்படுகிறது. அதாவது, தலைகீழாக கூறப்படுகிறது. திருக்குர்ஆன் 2:68-72ல் மாட்டை அறுத்த சம்பவமும், 2:73,74-ல் கொலை சம்பவமும் முன் பின்னாகக் கூறப்பட்டுள்ளது.



3. திருக்குர்ஆன் 2:68-72 மாட்டை அறுத்த சம்பவம், கொலை சம்பவத்துடன் தொடர்புடையது இல்லை என்பதைக் காட்டுகிறது. இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த காரணத்தால், எகிப்திய மக்களின் மாடு வழிபாடு, அவர்களிடமும் தொற்றி விட்டது. அவர்களிடமிருந்து மாடு வழிபாட்டை நீக்கவே அல்லாஹ் அந்த மாட்டை அறுக்கும்படிக் கூறுகிறான். அவர்கள் மனமில்லாமல் மாட்டை அறுப்பதற்கு சம்மதிக்கின்றனர். ஒரு மாட்டை அறுத்து அதன் பாகத்தைக் கொண்டு அடியுங்கள் என்று ஒரு வரியில் சொல்லாமல் விரிவாக அச்சம்பவம் பேசப்படுவதன் காரணம் அது கொலையுடன் சம்பந்தமில்லாத தனி சம்பவம் என்பதனாலேயாகும்.

4. இறந்தவர்கள் இவ்வுலகில் மீண்டும் உயிர் பெறுதல் என்பது அல்லாஹ்வின் அடிப்படை சட்டத்திற்கு மாற்றமாகும்.

திருக்குர்ஆனில் 39:43 வசனத்தைப் பாருங்கள்: அலலாஹ் உயிர்களை அவை மரணிக்கும் போதும் மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்து விட்டானோ அதை தன்னிடமே நிறுத்திக் கொள்கிறான். மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான். சிந்திக்கும் மக்களுக்கு இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.

இறந்தவர்களின் உயிர்களை அல்லாஹ் தன்னிடம் நிறுத்தி வைத்துக் கொள்கிறான் என்றால் அது எப்படி பூமிக்கு மீண்டும் வரும்? இக்கருத்தைக் கொண்ட 16 வசனங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. எனவே இறந்தவனின் உடலில் முழு மாட்டைக் கொண்டு அடித்தாலும் அவன் உயிர்பெற மாட்டான்.

5. திருக்குர்ஆன் 18:75-ல் ஒரு நல்லடியாருடன் மூஸா நபி பயணம் செய்த போது அந்த நல்லடியார் ஒரு இளைஞனைக் கொலை செய்து விடுகிறார். கொலை செய்யப்பட்ட அவனின் உடலை மூஸா நபி (அலை) ஒரு மாட்டின் உறுப்பால் அடித்து எழுப்பியிருக்கலாமே! அப்படிச் செய்ததாக திருக்குர்ஆன் கூறவில்லை. ஏன்? இறந்தவர் உயிர் பெற இது ஒரு பரிகாரம் இல்லை என்பதே!

6. மூஸா நபி (அலை) அவர்களும் ஹாரூன் நபி (அலை) அவர்களும் ஒரு மலை உச்சிக்குச் சென்ற போது ஹாரூன் நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள். இதை மூஸா நபி (அலை) அவர்கள் வந்து கூறியபோது மூஸா நபி (அலை) அவர்களின் மீதே அவர் சமூகத்தார் கொலைப்பழியைச் சுமத்தினார்கள். இந்தப் பழியை ஜிப்ரீல் (அலை) அவர்களை அனுப்பி அல்லாஹ் நீக்கி வைத்தான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹாக்கிமில் இடம் பெற்றுள்ளது. (ஆதாரம் : பி.ஜே. –யின் திருக்குர்ஆன் விளக்கம் எண் : 394; மூஸா நபியின் மீது பழி)

   தன் மீது சுமத்தப்பட்ட பழியை மூஸா நபி (அலை) அவர்கள் ஒரு மாட்டை அறுத்து, அதன் ஒரு பாகத்தைக் கொண்டு, ஹாரூன் நபி (அலை) அவர்கள் மீது அடித்து உண்மையை ஏன் நிரூபிக்கவில்லை? இறந்தவர் மீண்டும் உயிர் பெற முடியாது என்பது இறைவனின் மாறாத, அடிப்படைச் சட்டமாகும்.

7. திருக்குர்ஆன் 2:74 –ல் இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிப்பான் என்று கூறுகிறான். அபூ அப்தில்லாஹ் எழுதியிருப்பது போல் மாட்டின் ஒரு அங்கத்தால் அடித்து எழுப்புவது தான் பொருள் என்றால், (மேலே 5,6 இல் எழுதியுள்ள சம்பவங்களில்) மூஸா நபி (அலை) மாட்டின் ஒரு அங்கத்தால் அடித்து ஏன் இறந்தவர்களை (இளைஞனையும், ஹாரூன் நபியையும்) எழுப்பவில்லை? உண்மையில் அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை.

## 4. தவஃப்பீ என்றால் ரூஹ் -ஐ கைப்பற்றுதல் என்பதுதான் அல்லாஹ் மற்றும் ரஸூலின் தீர்ப்பு

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என அல்லாஹ்வும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

நான் எனது முன்னுரையில் அபூ அப்தில்லாஹ் அவர்கள் திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட நூலில் கூறப்பட்ட முக்கியமான



கருத்துகளைத் தன் நூலில் கூறாமல் கண்டும் காணாமல் விட்டு விட்டார் என்று எழுதியிருந்தேன். அவற்றுள் ஒன்று இதுதான். அதாவது, ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தம் நூலாகிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் 2ம் பதிப்பு 63 ஆம் பக்கத்தில் **ஈஸா நபியின் மரணம் பற்றிய இன்னொரு சான்று** என்ற தலைப்பில்,

1. திருக்குர்ஆன் 5:117,118 வசனங்களின் விளக்கத்தையும்,
2. இந்த வசனங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பையும்,
3. இதில் வரும் தவஃப்பய்த்தனீ என்ற சொல்லுக்கு அரபிமொழி அகராதியின் பொருளையும்,
4. இது குறித்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைத் தோற்றுவித்தவரும், வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அறைகூவலையும் அதற்கு ஆயிரம் ரூபாய் பரிசு தருவதாக அன்னார் நூறு ஆண்டுகளுக்கு முன் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறியிருந்ததையும் அபூ அப்தில்லாஹ் கண்டும் காணாமல் பதில் சொல்லாமல் விட்டு விட்டார்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பு

இறை நூலாகிய திருக்குர்ஆனுக்கு அடுத்த இடத்தை வகிக்கும் ஹதீஸ் நூலாகிய புகாரியில் இந்த அறிவிப்பு காணப்படுகிறது.

இறுதி நாளில் நான் [நபிகள் நாயகம் (ஸல்)] ஹவ்ளுல் கவ்ஸரில் நிற்கும் போது திடீரென சிலர் என் முன் காணப்படுவார்கள். அவர்களை மலக்குகள் நரகத்தின் பக்கம் இழுத்துச் செல்வார்கள். அவர்களைப் பார்த்து நான் உஸைஹாபி, உஸைஹாபி (இவர்கள் என்னுடைய தோழர்கள்) என்று உரத்த குரலில் கூறுவேன். அப்போது, இவர்கள் உங்களுடைய காலத்திற்குப் பிறகு என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது; இவர்கள் இஸ்லாத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்று எனக்குக் கூறப்படும். அதற்கு நான் இறைவனின் நல்லடியாரான அந்த ஈஸா நபி (அலை) அவர்கள் கூறியதைப் போல, நான் அவர்களுடன் இருந்த காலம் வரை அவர்களுக்குச் சாட்சியாக இருந்தேன். ஆனால் நீ என்னை மரணிக்கச்

செய்த பின் ஃபலம்மா தவஃப்பய்த்தனீ - நீயே அவர்களை கண்காணிக்கின்றவனாக இருந்தாய் என்று கூறுவேன்.

(ஹதீஸ் ஆதாரம் : புகாரி பாகம் 5, எண்.4625)

திருக்குர்ஆனிலுள்ள ஃபலம்மா தவஃப்பய்(த்)தனீ என்னும் அரபிச் சொல்லுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த நபிமொழி மூலம் அதே சொல்லை எடுத்துக்கூறி, **ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களைச் சுட்டிக்காட்டி, நீ என்னை மரணிக்கச் செய்த பிறகு** என்று பொருள் கூறியுள்ளார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் மரணிக்கச் செய்து விட்டதை உறுதிப்படுத்தி விட்டார்கள்.

எனவேதான், அபூ அப்தில்லாஹ் இந்த ஹதீஸைப் பற்றி எதுவும் எழுதாமல் நழுவி விட்டார். அத்துடன் விட்டு விடாமல் அவர் செய்த தவறை எங்கள் மீது போட்டுள்ளதைப் பாருங்கள்.

***இறைவனது கூற்றும் அவனது திருத்தூதரின் மொழியும் தங்களின் யுக்திக்கு எட்டாதனவாயினும், அவை உண்மையே என்று ஏற்றுக் கொள்வார்கள் ஈமான் கொண்டவர்கள். தவஃப்பா - மாத்த என்ற அரபிப் பதங்களுக்குப் பல அரபி அகராதிகளில் கொடுக்கப்படும் பொருட்களை ஆதாரமாகக் கொண்டு தங்கள் கொள்கையை நிலைநாட்ட முனைவதை விட்டு, குர்ஆனிலும் ஹதீஸிலும் அப்பதங்கள் என்ன என்ன பொருட்களைத் தரும் வகையில் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து செயல்படுவதே ஈமானுடைய தன்மையாகும் என்று காதியானிகளுக்கு நினைவூட்டுகிறோம். (அபூ அப்தில்லாஹ்வின் நூல், பக்கம் 37)***

**நம் பதில்:**

தவஃப்பய்த்தனீ என்ற சொல்லுக்கு என்னைக் கைப்பற்றினாய் என்று தவறாக பொருள் கொள்ளும் அபூ அப்தில்லாஹ் அதற்கு ஆதாரமாக திருக்குர்ஆன் வசனங்களையோ, நபிமொழிகளையோ காட்டவில்லை. ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தனது வாதத்திற்கு (ஆதாரமாகக்) காட்டியிருக்கும் நபிமொழியைக் கண்டு கொள்ளவுமில்லை. இவ்வாறு செய்து விட்டு ஈமானின் தன்மையை நமக்கு நினைவூட்டுகிறார். அந்தோ பரிதாபம்!



## அபூ அப்தில்லாஹ்வின் திசை திருப்பும் கலை

தவஃப்பா என்னும் சொல்லை அல்லாஹ் ஒரு மனிதருடன் தொடர்புபடுத்தி, அந்த வசனத்தில் தூக்கம், இரவு ஆகிய சொற்கள் இடம் பெறவில்லை என்றால், ரூஹை நிரந்தரமாகக் கைப்பற்றுதல் அதாவது மரணம் என்று பொருள். தூக்கம், இரவு என்னும் சொற்கள் இடம் பெற்றிருந்தால் ரூஹை தற்காலிகமாகக் கைப்பற்றுதல் அதாவது தூக்கம் என்று பொருள்.

திருக்குர்ஆனில் தவஃப்பா என்னும் சொல் 25 இடங்களில் வருகிறது. தூக்கம் எனும் பொருளில் இரு இடங்களிலும், மரணம் எனும் பொருளில் 23 இடங்களிலும் வருகிறது. 2:235; 2:241; 3:56; 3:194; 4:16; 4:98; 5:117; 6:61; 7:38; 7:127; 8:51; 10:47; 10:105; 12:102; 13:41; 16:29; 16:33; 16:71; 22:6; 32:12; 39:43; 40:68; 40:78; 47:28. இந்த 23 இடங்களில் நபி (ஸல்) அவர்களுடன் தொடர்புடையதாக 3 இடங்களில் வந்து (10:47; 13:41; 40:78) அன்னாரின் மரணத்தை உறுதி செய்கிறது. அவ்வாறே யூசுப் நபி (அலை) அவர்களுடன் ஓரிடத்தில் வந்து (12:102) அன்னாரின் மரணத்தை உறுதி செய்கிறது.

இவ்வாறு இரு நபிமார்களுடன் 4 இடங்களில் வந்து தவஃப்பா எனும் சொல் ரூஹைக் கைப்பற்றுதல் அதாவது மரணம் எனும் பொருளைத் தருகிறது. ஆனால் ஈசா நபியுடன் அதே சொல் இரு இடங்களில் (5:117-118; 3:56) வரும்போது ரூஹைக் கைப்பற்றுதல் (மரணம்) எனும் பொருளைத் தர மறுப்பது ஏன்? அதே சொல் மனிதருடன் 17 இடங்களில் வருகிறது. அவ்விடங்களில் எல்லாம் ரூஹைக் கைப்பற்றுதல் (மரணம்) என்று பொருள் தரும் அபூ அப்தில்லாஹ், ஈசா நபிக்கு வரும் இரு இடங்களில் ரூஹைக் கைப்பற்றுதல் என்று பொருளைத் தர மறுப்பது ஏன்?

திருக்குர்ஆனில் 5:117,118 வது வசனத்தில் தூக்கம், இரவு என்னும் சொல் இடம் பெறாததினால் ரூஹ் -ஐ முழுமையாகக் கைப்பற்றுதலாகிய மரணம் என்ற பொருளிலேயே அச்சொல் வந்துள்ளது. அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மேலே காட்டிய நபிமொழி மூலம் 5:117,118 என்ற வசனத்தில் வந்துள்ள தவஃப்பய்த்தனீ என்ற சொல்லுக்கு மரணம் என்றே பொருள் கூறி தெளிவாக்கி விட்டார்கள். மேலும் இந்த ஆயத்தில்

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் தவஃப்பய்த்தனீ என்னும் சொல் தூக்கம், இரவு என்னும் சொற்களுடன் வரவில்லை. எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சம்பந்தமாக ரூஹ் -ஐ தற்காலிகமாக கைப்பற்றுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

**அபூ அப்தில்லாஹ் தம் நூலில்**, "*அல்லாஹ் உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி பின்பு எதன் மீது மரணத்தை விதித்து விட்டானோ அதை நிறுத்திக் கொள்கிறான். மீதி உள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான். சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன*". *(திருக்குர்ஆன் 39:42)*

*மேலே கண்ட 39:42வது வசனத்தில் விளக்கியதற்கு ஒப்ப ஒருவரின் உயிரை 100 ஆண்டுகள் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவித்த விபரம் 2:260வது வசனத்திலும் அதே போல் சிலருடைய உயிர்களை சுமார் 300 ஆண்டுகள் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவித்த விபரம் 18:26வது வசனத்தின் மூலமும் தெளிவுபடுத்தப்படுகின்றன. இதே அடிப்படையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உயிரை சில ஆயிரங்களோ, பல ஆயிரங்களோ ஆண்டுகள் இறைவன் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவிப்பது பற்றி ஈமான் கொண்டவர்களுக்கு எவ்வித சந்தேகமும் எழாது (பக்கம் 36) என்று எழுதி திசை திருப்புகிறார்.*

அபூ அப்தில்லாஹ் தானும் ஏமாந்து பிறரையும் ஏமாற்ற விரும்புகிறார். எப்படி என்று காண்போம்.

1. திருக்குர்ஆனின் 2:260; 18:26 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளில் தவஃப்பய்த்தனீ என்ற சொல் இடம் பெறவில்லை. எனவே 2:260; 18:26 ஆகிய வசனத்துடன் 5:117,118 வசனத்தை ஒப்பிட்டுக் காட்டுவது தவறாகும். திசை திருப்புவதாகும்.
2. 5:117,118 வசனத்தில் தவஃப்பய்த்தனீ என்னும் சொல்லுடன் தூக்கம், இரவு என்னும் சொற்கள் இடம் பெறவில்லை. எனவே 39:43 வசனத்தில் அல்லாஹ் உயிர்களை மரணிக்கும்போது



கைப்பற்றுவதாக கூறப்பட்டபடி அல்லாஹ் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ரூஹ் -ஐ மரணத்தின்போது தான் முழுமையாகக் கைப்பற்றி விட்டான் என்பது தெளிவாகிறது. இந்த வசனத்தில், மரணத்தின் போதும் தூக்கத்தின் போதும் உயிர் (ரூஹ்) தான் கைப்பற்றப்படுகிறது. உடலோடு கைப்பற்றுதலுக்கு ஆதாரம் இல்லை. சில ஆயிரங்களோ, பல ஆயிரங்களோ ஆண்டுகள் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவிக்க வேண்டுமென்றால், 5:117-118 வசனத்தில் தூக்கம் அல்லது இரவு எனும் சொல் வராததினால், இந்த இடத்தில் (5:117, 118) தற்காலிகமாக தூக்கத்தில் கைப்பற்றுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. இதை நடுநிலையாக சிந்திப்பவர்கள் எளிதில் விளங்கிக் கொள்வர்.

3. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அந்த இறைவனின் நல்லடியாரான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறியதைப் போல் நானும் கூறுவேன் என்று கூறி தம் மரணத்தை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்துடன் ஒப்பிட்டுக் கூறியிருப்பதனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து அவர்களின் புனிதமான ரூஹை இறைவன் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டதுபோல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ரூஹையும் இறைவன் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டான் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாகின்றது.
4. திருக்குர்ஆன் 39:43வது வசனத்தின்படி அல்லாஹ் எதன் மீது மரணத்தை விதித்து விட்டானோ அதை தன்னிடமே நிறுத்திக் கொள்கிறான் என்ற இறைவனது மாறாத சட்டத்தின்படி, தவஃப்பய்த்தனீ என்ற சொல்லின் மூலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ரூஹும் இறைவனிடத்தில் நிரந்தரமாக நிறுத்தப்பட்டு விட்டது. எனவே நிரந்தரமாக ரூஹ் வர முடியாத ஒரு நிகழ்ச்சியை (அதாவது 5:117, 118 வசனங்களை) 2:260, 18:26 ஆகிய வசனங்களுடன் ஒப்பிடக் கூடாது.

## 5. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை தோற்றுவித்த வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அறைகூவல்

“உலகில் அரபு நாடு உருவாகி அங்கு அரபு மொழி வழக்கில் வந்த நாள் முதல் இதுவரை வெளியான எந்த உரைநடை இலக்கியத்திலிருந்தும் அது புதிதாக இருந்தாலும், பழையதாக இருந்தாலும் தவஃப்பி என்ற சொல்லுக்கு உடலைக் கவர்தல் என்ற பொருள் தரப்பட்டிருந்த ஓர் உதாரணத்தை யாராலும் காட்ட முடியாது. மாறாக, தவஃப்பி என்பது இறைவன் மனிதனுக்குச் செய்த செயலாகக் கூறப்பட்ட இடங்களிலெல்லாம் அதற்கு மரணம், உயிரைக் கவர்தல் என்ற அர்த்தங்களே தரப்பட்டிருக்கின்றன. உடலைக் கவர்தல் என்ற அர்த்தம் எங்கும் காணப்படவில்லை. எந்த அகராதியிலும் இதற்கு மாறான அர்த்தமும் தரப்படவில்லை.

எவராவது திருக்குர்ஆனிலிருந்தோ, நபிமொழிகளிலிருந்தோ, அரபிமொழிக் கவிதை, இலக்கியம் போன்றவற்றில் இருந்தோ மேற்கண்ட சொல்லுக்கு மரணம் என்பததைத் தவிர வேறு பொருள் உண்டு என்பதற்கு உதாரணம் காட்டுவாரேயானால் அத்தகையவருக்கு எனது சொத்தில் ஒரு பகுதியை விற்று ஆயிரம் ரூபாய் தருவேன் என இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுவேன்.” (இஸாலே அவ்ஹாம் பக்கம் 603)

இந்த அறைகூவலுக்கு அபூ அப்தில்லாஹ்விடமிருந்து பதில் இல்லை! சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!

5. ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்: “இறைவன் அருளால் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு நூல் அனேகமாக எல்லா முஸ்லிம் வீடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றது. திருக்குர்ஆனில் ஏதாவது ஒரு வகையில் தவஃப்பா என்ற சொல் 23 இடங்களில் காணப்படுகிறது. இவற்றில் இரண்டு இடங்களே ஈஸா நபியைப் பற்றி குறிப்பிடும் இடங்களாகும். இவை நீங்கலாக 19 இடங்களில் இந்தச் சொல் காணப்படுகிறது.





நீங்கள் அஹ்மதியல்லாத யாராவது ஓர் ஆலிம் வெளியிட்ட திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு நூலைப் பாருங்கள். இதில் ஈஸா நபி (அலை) அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்ற இடத்தைத் தவிர வேறெல்லா இடங்களிலும் அந்தச் சொல்லுக்கு (தவஃப்பா) மரணம் என்ற பொருள் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். இரண்டு இடங்களில் தூக்கம் என்ற அர்த்தத்தில் இந்தச் சொல் கையாளப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். ஆனால் அதுவும் உறக்கமென்பது தற்காலிக மரணம் என்ற கருத்துப்படவே அங்குக் கூறப்பட்டிருக்கும்.

இனி, நீங்கள் இந்த ஆலிம்களிடம் கேளுங்கள். தவஃப்பா என்ற சொல்லுக்கு எல்லா இடங்களிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி குறிப்பிடும் இடங்களிலும் கூட மரணம், உயிரைக் கவர்தல் என்ற பொருள் கொடுக்கப்பட்டிருக்கும் போது ஈஸா நபி (அலை) அவர்களைக் குறிப்பிடும் இடங்களில் மட்டும் அந்தச் சொல்லுக்கு வானத்திற்கு உயர்த்தப்படுதல் என்ற அர்த்தம் தரப்பட்டு இருக்கிறதே. இது எவ்வாறு சரியாகும்? இவ்வாறு வேறு பொருள் தருவதற்கு யார் உங்களுக்கு அதிகாரம் வழங்குகின்றார்கள்? ஒரு சொல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறிக்கும்போது அதற்கு மரணம் என்ற பொருள் கூறுகின்றீர்கள். ஆனால் அதே சொல் ஈஸா நபி (அலை) அவர்களைப் பற்றி கூறப்படும் போது அதற்கு வானத்திற்கு உயர்த்துதல் என்ற பொருள் கூறுகின்றீர்கள்.

ஆலிம்களே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த அநீதியை எவ்வளவு காலத்திற்கு இழைத்து வரப்போகிறீர்கள்?

(ஈஸா (அலை) அவர்களின் மரணம் பக்கம் 61-63)

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தொடர்ந்து இஸ்லாமிய சமுதாயத்தில் தோன்றிய இமாம்கள் மற்றும் நல்லறிஞர்களுடைய கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இமாம் மாலிக் (ரஹ்), இமாம் புகாரி (ரஹ்), ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) ஃபத்துஹுல் பயான் என்னும் திருக்குர்ஆன் விளக்கவுரை நூல், ரயீஸுல் முஹத்தஸீன் ஹஸ்ரத் ஹாபிள் இப்னு கய்யிம், ஜலாலைன் மஅ கமாலைன் என்னும் திருக்குர்ஆன் விளக்கவுரை நூல், எகிப்தின் முன்னாள் முப்தி அல்உஸ்தாது அல்லாமா ரஷீத்ரிஸா, இன்றைய முஸ்லிம் உலகில்

பிரசித்தி பெற்ற அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் தலைமைப் பேராசிரியராக இருந்த மஹ்மூத் ஷல்தூத் ஆகியோர்கள் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறியதனை எடுத்துக் காட்டியுள்ளார்கள். (பக்கம் 69-71). இந்த ஆதாரங்களுக்கும் அபூ அப்தில்லாஹ் பதிலே தரவில்லை.

பக்கம் 55-ல் தாஜுல் உரூஸ், அல் முன்ஜித், ஃபராயித்துர்ரியா ஆகிய அகராதிகளின் அர்த்தத்தை எடுத்துக்காட்டி எந்த அகராதியும் (தவஃப்பாஹுல்லாஹ்) என்ற சொற்றொடருக்கு இறைவன் அவரை மரணிக்கச் செய்தான் என்ற அர்த்தத்தை அல்லாமல் வேறு அர்த்தம் எதுவும் தரவில்லை என்று கூறியுள்ளார்கள். இதற்கும் அபூ அப்தில்லாஹ் தன் நூலில் பதிலே தரவில்லை. ஏன் பதில் தரவில்லை? தெரியவில்லையா? அல்லது உண்மை தெரிந்தும் மறைக்கிறாரா? எவ்வாறிருப்பினும் உண்மையை மறைத்த குற்றத்திற்கு அவர் அல்லாஹ்வுக்கு பதில் சொல்லி ஆக வேண்டும் என்பதை நினைவூட்டிக் கொள்கிறோம்.

## அபூ அப்தில்லாஹ்வின் அறிவீனம்

***அபூ அப்தில்லாஹ் தன் நூல் பக்கம் 37-ல் "ஒரு மனிதனின் உயிர் உறக்கத்தின் நிலையில் கைப்பற்றப்பட்டாலும் அவனைச் சுற்றி நடைபெறுபவைகளை அவன் அறியமாட்டான். இந்நிலையில் அவன் அவைகளின் நிமித்தம் குற்றம் சாட்டப்படவும் மாட்டான். இந்த அடிப்படையிலேயே ஈஸா (அலை) அவர்கள் 5:117 வசனத்தில் என்னைக் கைப்பற்றிய பின், உலகில் இல்லாத காலத்தில் அவர்கள் செய்தவைகளை நான் அறியேன். நீயே நன்கறிந்தவனாக இருக்கிறாய் என்று கூறுகிறார்கள். எனவே 5:117 வசனத்தை ஆதாரமாகக் காட்டி ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று காதியானிகள் கூறுவது அறிவீனமாகும்" என்று எழுதியுள்ளார்.***

**நம் பதில்:**

இவ்வாறு அபூ அப்தில்லாஹ்வைப் போன்றவர்கள் எழுதுவார்கள் என்று தெரிந்துதான் எல்லாம் அறிந்த அல்லாஹ், அதற்கு இடம் வைக்காமல் நபி (ஸல்) அவர்கள் மூலம் 5:117,118வது வசனத்திற்கு ஒரு



விளக்கத்தையும் கொடுத்துள்ளான் போலும். அந்த நபிமொழியின்படி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தன் மக்கள் மத்தியில் வாழ்ந்த காலம், பின்னர் அங்கிருந்து ரூஹ் மட்டும் கைப்பற்றப்படுதல், பின்னர் தன் மரணத்திற்குப் பிறகு தன் தோழர்கள் என்ன செய்தார்கள் என்பது தெரியாத மறுமை வாழ்வு ஆகியவை தனக்கு நடந்தது போன்று ஈஸா நபிக்கும் நடந்தது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உறுதியாகக் கூறியுள்ளார்கள். அதில் தன் மரணத்திற்குப் பிறகு தன் சஹாபாக்கள் செய்தவைகளை தான் அறியவில்லை என்று அந்த நல்லடியாராகிய ஈஸா நபி (அலை) அவர்கள் கூறியது போன்று கூறுவேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதால் ஈஸா நபியுடைய சீடர்கள் செய்ததை அவர் அறியவில்லை என்று அவர் கூறுவதற்கான காரணம் அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் போல் மரணமடைந்து விட்டார்கள் என்பதே என உறுதிபட கூறப்பட்டுள்ளது. 5:117,118 வசனத்தில் (தற்காலிக மரணமாகிய) தூக்கம் அல்லது இரவு என்னும் சொற்கள் இடம் பெறவில்லை. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் மீண்டும் இவ்வுலகிற்கு வரமாட்டார் என்றும் அந்த நபிமொழி உணர்த்துகிறது. அதுமட்டுமல்ல, ஈஸா நபி (அலை) உயிரோடு உயர்த்தப்பட்ட பிறகு மீண்டும் வருவார் என்றும் உலகில் அவர் இல்லாத காலத்தில் நடந்தவைகளை அவர் அறிய மாட்டார் என்பதும் தவறு. ஏனென்றால் அபூ அப்தில்லாஹ் போன்றவர்களின் தவறான கருத்துப்படி அந்த ஈஸா மீண்டும் உலகிற்கு வரும்போது அவரையும் அவரது தாயாரையும் கிறிஸ்தவர்கள் வணங்கிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டு, மரணித்து மீண்டும் மறுமையில் இறைவனைச் சந்திக்கின்றபோது என்னை உயர்த்திய பிறகு நடந்தவைகளை நான் அறியவில்லை. ஆனால் மீண்டும் உலகிற்குச் சென்ற பிறகு கிறிஸ்தவர்கள் என்னையும் என் தாயாரையும் வணங்கிக் கொண்டிருந்ததை நான் கண்டேன் என்றுதான் கூற வேண்டும். அப்படிக் கூறாததனால் அவர் மீண்டும் வரப்போவதில்லை என்பது தெளிவாகிறது. இனி அபூ அப்தில்லாஹ்வின் சில அபத்தமான கூற்றுகளைக் காண்போம்.

# 6. இறந்தவர் மீண்டும் உலகிற்கு வர முடியாது

## அபூ அப்தில்லாஹ்வின் அபத்தமான கூற்று

அபூ அப்தில்லாஹ் தன் நூல் பக்கம் 36, 37 -ல் திருக்குர்ஆன் *39:42 வசனத்தில் விளக்கியதற்கொப்ப, ஒருவரின் உயிரை 100 ஆண்டுகள் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவித்த விபரம் 2:259 வசனத்திலும் அதே போல் சிலருடைய உயிர்களை சுமார் 300 ஆண்டுகள் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவித்த விபரம் 18:25 வசனத்திலும் தெளிவுபடுத்தப் படுகின்றன. இதே அடிப்படையில் ஈஸா (அலை) அவர்களின் சில ஆயிரங்களோ பல ஆயிரங்களோ ஆண்டுகள் இறைவன் கைப்பற்றி வைத்திருந்து பின்னர் விடுவிப்பது பற்றி ஈமான் கொண்டவர்களுக்கு எவ்வித சந்தேகமும் எழாது என்று எழுதியுள்ளார்.*

**நம் பதில்:**

இந்த 5:117,118 வசனங்களில் கூறப்பட்டுள்ள கருத்திற்கு 2:259, 18:25 என்ற வசனங்களைக் காட்டுவது பொருந்தாது என்பது மேலே விளக்கப்பட்டுள்ளது. இப்போது இவ்விரு வசனங்களின் பொருளையும் விளக்கத்தையும் காண்போம்.

வசனம் 2:260ன் பொருள்: அல்லது கூரை கீழாக விழுந்து கிடந்த ஒரு நகரத்தின் வழியாகச் சென்றவரைப் போல ஆன ஒருவரைப் பற்றி நீர் கேள்விப்பட்டதில்லையா? அவர் இதன் அழிவிற்குப் பின்னர், இதனை எப்போது அல்லாஹ் உயிர்ப்பிப்பான் என்று கேட்டார். பிறகு அல்லாஹ் அவரை எழுப்பி நீர் எவ்வளவு காலம் இந்நிலையில் இருந்தீர் எனக் கேட்டான். இதற்கு அவர் ஒருநாள் அல்லது ஒரு நாளின் சிறு பகுதி நான் (இந்நிலையில்) இருந்தேன் என்றார். அதற்கு அவன் (சரிதான்) ஆனால் நீர் (இந்நிலையில்) 100 ஆண்டுகள் இருந்தீர். எனவே நீர் உமது உணவையும் உமது குடிநீரையும் பாரும். அது கெட்டுப்போகவில்லை. மேலும் உமது கழுதையைப் பாரும். நாம் உம்மை மக்களுக்கு ஓர் அடையாளமாக ஆக்குவதற்காக (இவ்வாறு செய்துள்ளோம்). மேலும் எலும்புகளைச் சீராக இணைத்த பின்னர் அவற்றின் மீது தசையைப் போர்த்தியுள்ளோம் என்பதையும் பாரும் என்றான். எனவே அவருக்கு இது தெளிவாகிய போது,



அவர் அல்லாஹ் எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றவன் என்பதை நான் அறிவேன் என்றார்.

1. இமாம் பக்ருத்தீன் ராஸீ (அத்தப்ஸீருல் கபீர்), இமாம் அதீருத்தீன் முஹீத் அபூ அப்துல்லாஹ் அபூ ஹய்யானுல் உன்துலூலி, மவ்லானா அபுல்கலாம் ஆஸாத் ஆகியோர் 2:259 வசனத்தில் வரும் 100 ஆண்டுகள் என்பது, 100 ஆண்டு காலத்தைக் குறிக்காது என்றும், இது இஸ்ரவேல் தூதர் எசக்கியேலுக்கு காட்டப்பட்ட ஆன்மீகக் காட்சி என்றும் கூறுகின்றனர்.

மேலும் முஹம்மது பிக்த்தால்,மவ்லவி முஹம்மது அலி, தாருல் இஸ்லாம் பத்திரிகை ஆசிரியர் தாவூத்ஷா ஆகியோர் தாங்கள் எழுதிய திருக்குர்ஆன் தர்ஜுமாக்களில் மேற்கூறிய கருத்துக்களையே கூறியுள்ளார்கள்.

2. அழிந்து கிடக்கும் நகரம் எப்போது உயிர் பெறும் என்று கேட்கிறார். அதற்குப் பதிலாகத் தான் இறைவன் 100 ஆண்டுகள் ஆகும் என்பதை அவரை கனவில் 100 ஆண்டுகள் மரணித்தவராக்கி உயிர்ப்பித்துக் காட்டி அந்த நகரம் உயிர் பெற, மக்கள் வாழுமிடமாக மாற 100 ஆண்டுகள் ஆகும் என்று கூறுகிறான்.

3. இறந்தவர் மீண்டும் மறுமையில் தான் உயிர் பெறுவர் என்பதும் இவ்வுலகிற்கு மீண்டும் வர முடியாது என்பதும் திருக்குர்ஆன் கூறும் அடிப்படைச் சட்டங்களாகும். திருக்குர்ஆன் ஏறக்குறைய 16 இடங்களில் இதுபற்றி கூறுகிறது. அவையாவன: 39:43, 23:101, 21:96, 44:57, 40:12, 36:32, 36:38, 6:28-29, 2:168, 26:103, 39:59, 32:13, 56:84-87, 36:51, 57:14, 23:17-18. இந்த வசனங்கள் தவிர நபிமொழி (திர்மிதி, இப்னு மாஜா) களிலும் இந்த அடிப்படைச் சட்டம் கூறப்பட்டுள்ளது. அதற்கு மாற்றமாக இறைவன் செய்யமாட்டான். எனவே 2:260-ல் கூறப்பட்ட சம்பவம் ஒரு கனவு என்பது தெளிவாகிறது.

திருக்குர்ஆன் 21:96 "ஏதேனும் ஓர் ஊரை நாம் அழித்து விட்டால், அவ்வூரில் வாழ்ந்து வந்தவர்கள் இவ்வுலகிற்குத் திரும்ப வரமாட்டார்கள் என்பது விதிக்கப்பட்டுள்ளது."

திருக்குர்ஆன் 23:16,17 "பின்னர் நீங்கள் அதற்குப் பிறகு நிச்சயமாக மரணமடைபவர்களே. பிறகு மறுமை நாளில் நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள்."

திருக்குர்ஆன் 23:100,101 "அவர்களுள் ஒருவருக்கு மரணம் வந்து விட்டால் அவர் கூறுவார்: என் இறைவா! என்னைத் திரும்ப அனுப்பி விடு. நான் விட்டு வந்த இடமாகிய (உலகத்தில்) நற்செயல்களை நான் செய்வதற்காக (என்னைத் திரும்பவும் அங்கு அனுப்பிவிடு.) அது நடக்கக் கூடியதன்று. நிச்சயமாக அது அவன் பேசும் வெறும் பேச்சாகும். அவர்கள் மீண்டும் எழுப்பப்படும் நாள் வரை அவர்களுக்குப் பின்னால் ஒரு திரையுள்ளது."

எனவே இவ்வசனங்களிலிருந்து இறந்த பிறகு ரூஹ் மீண்டும் உலகிற்கு வர முடியாது என்றும் இது இறைவனது நியதி என்றும் விளங்குகிறோம்.

இதிலிருந்து 100 ஆண்டுகள் அவர் மரணித்தவராக இருக்க வில்லை என்றும் அவருக்குக் காட்டப்பட்ட கனவு அல்லது கஷ்ஃபில் 100 ஆண்டுகள் மரணித்தவராகக் காணப்பட்டார் என்றும் விளங்கிக் கொள்கிறோம்.

**ஹதீது 1 :**

அப்துல்லாஹ் (ரலி) எனும் நபித்தோழர் போரில் வீர மரணம் அடைந்தார். அன்னாரைக் கனவில் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ்வின் மகன் ஜாபிர் (ரலி) அவர்களிடம் அது குறித்து கூறியதாவது,

உன் தந்தையிடம் அல்லாஹ் உங்கள் விருப்பம் என்ன? கேளுங்கள் தருகிறேன் என்றான். அதற்கு அவர் தான் மீண்டும் உலகுக்குச் சென்று இறைவழியில் போரிட்டு மரணம் அடைய வேண்டும் என்று கூறினார். அதற்கு இறைவன் அது நடக்காது. இறந்தவர் மீண்டும் உலகிற்கு திரும்ப முடியாது என்று விதித்து விட்டேன் என்று கூறினான்.

(ஆதாரம்: இப்னுமாஜா - நஸயி)

**ஹதீது 2 :**

தப்ஸீர் இப்னு கஸீரில் வருகிறது. உயிர்த் தியாகிகளின் உயிர்கள் பச்சை நிற பறவைகளின் வயிறுகளில் இருக்கும். அவை தாம் விரும்பியவாறு சொர்க்கத்தில் உண்டு களிக்கும். பின்பு அவை அர்ஷின் கீழ் மாட்டப்பட்டுள்ள அலங்கார விளக்குகளில் வந்து அடையும்.



அப்போது உம்முடைய இறைவன் அவர்களைப் பார்த்து உங்களுக்கு ஏதேனும் தேவைகள் உள்ளனவா என்று கேட்பான். அதற்கு அவர்கள் எங்கள் இறைவா! உன் படைப்புகளுள் யாருக்கும் நீ வழங்காதவற்றை எல்லாம் எங்களுக்கு வழங்கியுள்ளாய். அதற்குப் பிறகும் எங்களுக்கு என்ன தேவை என்று கூறுவார்கள்.

இவ்வாறு மீண்டும் மீண்டும் அல்லாஹ் கேட்பான். ஏதாவது கேட்காமல் விடமாட்டான் என்று உணர்ந்து எங்களை நீ உலகத்திற்கு (மீண்டும்) அனுப்பி வைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவ்வாறு அனுப்பி வைத்தால் மற்றொரு முறை உனக்காக கொல்லப்படும் வரை உன் வழியில் போராடுவோம் என்று அவர்கள் கூறுவார்கள். இறைவழியில் உயிர்த்தியாகம் புரிவதால் கிடைக்கும் பலன் என்ன என்பதை அவர்கள் கண்கூடாகக் கண்டதே அவ்வாறு அவர்கள் கேட்பதற்குக் காரணமாகும். அப்போது இறந்தவர்கள் மறுபடியும் உலகத்திற்கு அனுப்பப்படமாட்டார்கள் என்று ஏற்கனவே நான் முடிவு செய்து விட்டேன் என்று அல்லாஹ் கூறுவான்.

(தப்ஸீர் இப்னு கப்ஸீர் - பாகம் 2, பக்கம் 253)

4. கனவு என்ற சொல் 2:260 வது வசனத்தில் இடம் பெறவில்லை என்று கூறுவதாக இருந்தால், கனவு பற்றி திருக்குர்ஆனிலும் ஹதீதுகளிலும் கூறப்பட்ட சில இடங்களில் அச்சொல் இடம் பெறவில்லை என்பதை கவனிக்க வேண்டும். 12:5-ல் யூசுப் தம் தந்தையிடம் கூறிய நேரத்தை (நினைத்துப் பார்ப்பீராக). "தந்தையே! நான், பதினோரு நட்சத்திரங்களையும், சூரியனையும், சந்திரனையும் கண்டேன். அவை எனக்கு சிரம்பணியக் கண்டேன். சிறையில் அவருடன் இரண்டு வாலிபர்களும் நுழைந்தனர். அவர்களுள் ஒருவர் (அவரிடம்) நான் என்னை திராட்சையைப் பிழிந்து கொண்டிருப்பதாகக் கண்டேன். (12:37)

மேற்சொன்ன இரண்டு வசனங்களிலும் கனவு பற்றிக் கூறப்பட்டிருந்தாலும் கனவு என்ற சொல் இடம் பெறவில்லை. எனவே 2:260 வசனம் கனவுக் காட்சியாகும்.

5. அச்சம்பவத்தில் உணவும் நீரும் கெட்டுப் போகாததினால் உண்மையில் 100 ஆண்டுகள் என்பது இல்லை. கொஞ்ச நேரம் தான்

என்பதும் கனவில் தான் 100 ஆண்டுகளாகக் காட்டப்பட்டது என்ற உண்மையும் புலனாகிறது.

6. இந்த வசனத்தில் (2:260) மரணம் என பொருள் தரும் **மவ்த்** என்ற சொல் வந்துள்ளதே எனக் கேட்டால் இந்த **மவ்த்** என்ற சொல் தற்காலிகமாக உயிரைக் கைப்பற்றுதலாகிய தூக்கத்திற்கும் பொருந்தும் என 39:43 வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

மேலும் மொழி வழக்கிலும் உறக்கம், சிறு மரணம் போன்றது என்று கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக: தமிழில்,

*உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு. (திருக்குறள்)*

இவ்வாறே நபிமொழி வழக்கிலும் உண்டு 1) துஆ பற்றி வரும் நபிமொழிகளிலும் உறங்கும் முன்பும் பின்பும் செய்யும் துஆக்களில் மவ்த் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு உறக்கம் என்றே பொருள். 2) உங்கள் வீடுகளை கபர்களாக (உறங்கும் இடமாக) ஆக்கிக் கொள்ளாதீர்கள் என்னும் நபிமொழியில் வீடு உறங்குமிடமாக மட்டும் இருக்கக் கூடாது. தொழுகைக்கும் பயன்பட வேண்டும் என்னும் கருத்து உள்ளது. எனவே 2:260 வசனத்தில் இடம் பெறும் **மவ்த்** எனும் சொல்லுக்கு 'அவரைத் தூங்கச் செய்து' என்பதே பொருள்.

7. தூக்கம் என்பது குர்ஆன் ஹதீது அடிப்படையிலும் நம் அன்றாட அனுபவத்தின் அடிப்படையிலும் கொஞ்ச நேரம் தான் என்பது தெளிவு. 300 ஆண்டுகள் உறங்கியதாக தவறாகப் பொருள் கொள்ளப்படுவதால் இதன் உண்மை விளக்கத்தைப் பார்ப்போம். திருக்குர்ஆன் 18:19-ல் நீர் அவர்களை விழித்துக் கொண்டிருப்பதாக கருதுகிறீர். ஆனால் அவர்களோ தூங்கிக் கொண்டிருக்கின்றனர் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இவர்கள் 300 ஆண்டுகளாக உறங்கினர் என்று குர்ஆனில் எங்கும் கூறப்படவில்லை. மாறாக 300 மற்றும் 309 (300+9) ஆண்டுகள் தங்கி இருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் தங்கியிருந்த காலத்தை இறைவனே நன்கறிவான் என்று 18:27 வசனம் கூறுகிறது.



எனவே 300 மற்றும் 309 ஆண்டுகள் என்பது சிலருடைய கற்பனையான கருத்து என்றும் உண்மையில் அவர்கள் குகைளில் தங்கியிருந்த ஆண்டுகளை இறைவனே நன்கறிவான் என்பதும் விளங்குகிறது.

குர்ஆன் 2:260, 18:26 ஆகிய நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட, மக்களின் உடல்கள் பூமியில் (இவ்வுலகில்) இருந்தன. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உடலும் 2000 ஆண்டுகளாக பூமியில் இருந்திருக்கும் என்றால் ஒரு வாதத்திற்காக தூக்கம் என்று ஒப்புக் கொள்ளலாம். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உடல் பூமியில் இல்லை. எனவே அவ்வாறு நம்புவதற்கும் இடமில்லை.

மேலும் திருக்குர்ஆன் 18:19ல் நீர் அவர்களை விழித்துக் கொண்டிருப்பதாகக் கருதுகிறீர். ஆனால் அவர்களோ தூங்கிக் கொண்டிருக்கின்றனர் என்று கூறப்பட்டதன் பொருள் சில தலைவர்கள் தம் சமுதாய மக்களை விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டுவதற்காக என் சமுதாயமே உறங்கியது போதும் விழித்தெழு என்று கூறுவது போல, அக்குகைவாசிகளும் இன்னும் விழித்தெழவில்லை. தூங்கிக் கொண்டு இருக்கின்றனர் என்பதாகும். அதாவது அவர்கள குகையிலிருந்து வெளியேறும் எண்ணமோ, எழுச்சியோ, இன்னும் உருவாகவில்லை என்பதனைத் தான் அவ்வசனம் உணர்த்துகிறதேயொழிய உடல் உறக்கம் அன்று.

## 7. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் உடலோடு உயர்த்தவில்லை என்று கூறுகிறான்

அபூ அப்தில்லாஹ் தன் நூலில் திருக்குர்ஆனின் 4:159 வசனத்தைக் குறிப்பிட்டு பல் ரஃபஅ ஹுல்லாஹு இலைஹி என்பதற்கு அபூ அப்தில்லாஹ் கூறும் விளக்கத்தைப் பாருங்கள்.

1. ***ஈஸா நபி (அலை) அவர்களின் உடலைத்தான் உயர்த்தியுள்ளான்.***
2. ***அதனால் தான் அல்லாஹ் வல்லமை மிக்கவனும் ஞானம் மிக்கவனுமாக இருக்கின்றான் (4:158) என்று திருக்குர்ஆனில் கூறுகிறான்.***
3. ***உடல் உயர்த்தப்படவில்லை, பதவி உயர்வையே குறிக்கும் என்பது அல்லாஹ்வின் வல்லமையைக் குறைத்து மதிப்பதாகும்.***

4. *வானத்தளவில் மனிதர்கள் உயர்த்தப்படுவதை அவர்களின் பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளவில்லையா? ஆகாய விமானத்தில், விண்கலங்களில், ராக்கெட்டில் மனிதன் விண்ணில் பறப்பதை தெரிந்துள்ள காதியானிகள், மனிதன் பூத உடலுடன் அல்லாஹ் அளவில் உயர்த்தப்படுவது பகுத்தறிவுக்கு எட்டாது என்று சொல்வது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.*
5. *அல்லாஹ் கையாலாகாதவனாக இந்த காதியானிகள் கருதுகிறார்கள் போலும். குறிப்பாக மனிதனால் சாதித்துக் காட்ட முடிந்ததை அல்லாஹ்வினால் சாதிக்க முடியாது என்று காதியானிகள் விதண்டாவாதம் செய்வது விந்தையாக உள்ளது. (பக்கம் 44)*

என்றெல்லாம் எழுதிக் கொண்டு போகிறார்.

**நம் பதில்:**

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் எழுதிய ஈஸா நபி (அலை) அவர்களின் மரணம் என்னும் நூலில் **ரஃபஅ** என்பதன் பொருள் என்ற தலைப்பில் கூறிய கருத்துக்களுக்கும், எழுப்பிய கேள்விகளுக்கும், திருக்குர்ஆன் ஹதீஸிலிருந்து காட்டிய சான்றுகளுக்கும் அபூ அப்தில்லாஹ் தனது நூலில் பதில் தரவேயில்லை. மாறாக **ரஃபஅ** என்ற அரபிச் சொல் திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் வேறு பல இடங்களிலும் பதவி உயர்வு குறித்து பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் மறுக்கவில்லை என்று மட்டும் கூறி நழுவி இருக்கிறார். திருக்குர்ஆனில் **ரஃபஅ** எனும் சொல் மனிதர்களுடன் தொடர்புடையதாக ஏறக்குறைய 9 இடங்களில் (40:16, 2:254, 6:166, 43:33, 6:84, 56:4, 58:12, 19:58, 12:101) வருகிறது. அந்த எல்லா இடங்களிலும் பதவி உயர்வு எனும் பொருளைத்தான் கொண்டுள்ளது. உடல் உயர்வு பற்றி எங்கும் வரவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தமது நூலில் 'திருக்குர்ஆனின் ஏனைய இடங்களிலும் ஹதீஸ்களிலும் **ரஃபஅ** என்ற சொல் **ஆன்மீக உயர்வு** என்று பொருள்படும் வண்ணமே கையாளப்பட்டு இருக்கிறது. ஆலிம்கள் கூறுவது போன்று வானத்திற்கு உயர்த்துதல் என்ற அர்த்தத்தில் இச்சொல் எங்குமே பயன்படுத்தப்படவில்லை' (ஆதாரம்: ஈஸா நபி (அலை) அவர்களின் மரணம் பக்கம் 34) என்று குறிப்பிட்டு உள்ளார்கள்.



எனவே **ரஃபஅ** என்ற சொல்லுக்கு உடலோடு உயர்த்துதல் என்ற பொருள் தரக்கூடிய ஒரேயொரு சான்றையாவது அபூ அப்தில்லாஹ் திருக்குர்ஆன், ஹதீஸ், அரபிமொழி இலக்கியச் சான்றுகளிலிருந்து காட்டாத வரை (தனது நூலில் அபூ அப்தில்லாஹ் இதற்குப் பதில் தரவில்லை) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடலோடு உயர்த்தப்பட்டார் என்று கூறும் உரிமையோ, தகுதியோ, அருகதையோ அவருக்கு இல்லை.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களைக் குறிப்பிட்டு அவரை மிக மேலான இடத்திற்கு உயர்த்தினோம் (19:58) என்று அல்லாஹ் கூறியுள்ளான். இவ்வசனத்திலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே **ரஃபஅ** என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அபூ அப்தில்லாஹ் இத்ரீஸ் (அலை) அவர்களும் உடலுடன் உயர்த்தப்பட்டுள்ளார்கள் என்று ஒப்புக் கொள்வாரா?

ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் உடலோடு உயர்த்தப்பட வில்லை என்றால், அபூ அப்தில்லாஹ் கருத்துப்படி அல்லாஹ்வின் வல்லமையை குறைத்துக் கணிப்பது ஆகாதா? இருவருக்கும் ஒரே சொல் பயன்படுத்தப்பட்டிருக்க ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மட்டும் உடலோடு உயர்த்தப்பட்டதாக பொருள்கூற முடியுமா? 4:158வது வசனத்தில் **ரஃபஅ** என்பதற்கு ஈஸாவை உடலோடு உயர்த்தி உள்ளான். எனவேதான் அல்லாஹ் வல்லமைமிக்கவனும் ஞானமிக்கவனுமாக இருக்கிறான் என்று அபூ அப்தில்லாஹ் எழுதியுள்ளார்.

திருக்குர்ஆன் வல்லமைமிக்கவன் என்று மட்டும் கூறவில்லை. ஞானமிக்கவன் என்றும் சேர்த்துக் கூறியுள்ளது. இவ்வாறு எங்கெல்லாம் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அந்த வசனங்களை ஆழ்ந்து சிந்திக்கின்ற போது அபூ அப்தில்லாஹ்வின் கருத்து பொருத்தமற்றதாகவே தெரியவரும். திருக்குர்ஆன் 39:43-ல் அல்லாஹ் உயிர்களை மரணத்தின் போதும் தூக்கத்தின் போதும் கைப்பற்றுகிறான் என்று கூறுகிறான். இதில் உயிர்கள் தான் கைப்பற்றப்படுவதாக இறைவன் கூறுகிறான்; உடல்கள் அன்று. எனவே எது கைப்பற்றப்படுகிறதோ அதுதான் உயர்த்தப்படும்.

மேலும் **ரஃபஅ** என்ற சொல் திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் அல்லாஹ் ஒரு மனிதருடன் தொடர்புபடுத்திக் கூறும் இடங்களில் எல்லாம் ஆன்மீக உயர்வு – பதவி உயர்வு என்னும் பொருளில் வந்துள்ளதே தவிர உடலை உயர்த்துதல் என்று எங்கும் வரவில்லை. அப்படி வந்திருந்தால் ஒரே ஒரு சான்றையாவது அபூ அப்தில்லாஹ் காட்டட்டும். எனவே திருக்குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மாற்றமாக உடலோடு உயர்த்துதல் என்று பொருள் கொடுப்பது அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் செய்கின்ற அவமதிப்பாகும்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடலோடு உயர்த்தப்பட்டார் என்பதற்கு அபூ அப்தில்லாஹ் கூறும் மற்றொரு காரணம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறையவுமில்லை; கொல்லவுமில்லை என்றால் அவர்கள் என்ன ஆனார்கள் என்ற வினா எழும்? அப்படியாயின், ரஃபஅஹுல்லாஹ் இலைஹி (4:158). ஆனால், ***அல்லாஹ் அவரை தன்னளவில் உயர்த்திக் கொண்டான் என்று குறிப்பிடுவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உடலைப் பற்றியதாகத்தான் அல்லாமல் நிச்சயமாக அவரது ஆன்மாவைப் பற்றியதாகவோ ஆன்மீகப் பதவியைப் பற்றியதாகவோ இருக்க முடியாது*** என்று அபூ அப்தில்லாஹ் எழுதியுள்ளார். (பக்கம் 15, 16)

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைச் சிலுவையில் அறையவும் இல்லை; கொல்லவுமில்லை என்று அல்லாஹ் கூறுவதனால் அவர் இறக்கவே இல்லை என்று அபூ அப்தில்லாஹ் கருதுகிறார் போலும். அதனால்தான் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வந்து விட்டார் என்று தெரிகிறது. உலகில் எல்லா மனிதர்களுக்கும் இறப்பு என்பது சிலுவையில் அறையப்படுவதன் மூலமோ அல்லது கொல்லப்படுவதன் மூலமோ மட்டும் ஏற்படுவது என்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த இரண்டு வழிகளில் இறக்காததினால், அவர் மரணமடையவில்லை என்று கருதலாம். அப்படியில்லாமல் இறப்பு என்பது இயற்கையாகவும் வேறு வழிகளிலும் வருகிறது. எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கொல்லப்பட்டோ சிலுவையில் அறையப்பட்டோ இறக்கவில்லையே தவிர பிற வழிகளில் அதாவது இயற்கையாகவோ அல்லது வேறு வழிகளிலோ மரணித்திருக்கலாம் அல்லவா?



அப்படியென்றால் அல்லாஹ் ஏன் அவ்வாறு சிலுவையில் அறையப்பட்டோ கொல்லப்பட்டோ இறக்கவில்லை (வமா கத்தலூஹு வமா சலபூஹு) என்று கூறினான். திருக்குர்ஆனின் வசனங்களை விளங்குவதற்கு சில அடிப்படை கருத்துகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது திருக்குர்ஆன் தன் காலத்திற்கு முன்னர் உலகில் நிலவி வந்த தவறான கருத்துகளில் அல்லாஹ், நபிமார்கள் போன்றவர்களோடு சம்பந்தப்பட்ட அவசியமான கருத்துகளை மறுத்துரைக்கிறது. எடுத்துக்காட்டாக திருக்குர்ஆன் 5:73-76ல் "நிச்சயமாக மர்யமின் மகன் மஸீஹ் அல்லாஹ் தான் என்று கூறுபவர்கள் திட்டமாக நிராகரிப்பவர்கள் ஆவர்..... அல்லாஹ் மூவருள் ஒருவன் என்று கூறியவர்கள் நிராகரித்து விட்டனர்....

மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. அவருடைய தாயார் நேர்மையான பெண்ணாக இருந்தார்."

இந்த வசனங்கள் இறைவனைப் பற்றியும் ஒரு நபியைப் பற்றியும் நபியின் தாயாரைப் பற்றியும் யூத, கிறிஸ்தவ மக்கள் கொண்டிருந்த தவறான கருத்துகளை எடுத்துக்காட்டி அதனை மறுக்கக்கூடிய வசனங்களாகும். அதாவது ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்கள் ஆண் தொடர்பின்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பெற்றதால் மக்கள் அவர்களை (நவூதுபில்லாஹ்) விபச்சாரி என்றும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை (நவூதுபில்லாஹ்) விபச்சாரப் புத்திரன் என்றும் கடுமையாக அவதூறு கூறினர். எனவே அல்லாஹ் மக்களின் அவதூறை மறுக்கும் விதமாகத்தான் ஹஸ்ரத் ஈஸா (அலை) மற்றும் அவரது தாயாரைப் பற்றி மேற்சொன்ன வசனத்தில் குறிப்பிடுகிறான்.

அதேபோன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்ததாகவும் மற்றும் பிற வகையில் கொன்று விட்டதாகவும் யூதர்கள் நம்பியிருந்ததால் அவர்களுடைய அந்த தவறான நம்பிக்கையை மறுக்கும் விதமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டதனாலோ பிற வகையிலோ கொல்லப்படவில்லை என்று அல்லாஹ் வசனம் 4:158ல் குறிப்பிடுகின்றான். சிலுவையில் அறைந்து கொல்லுதலை தவ்ராத் வேதம் சபிக்கப்பட்ட மரணமாகக் கூறுவதனால் ஈஸா

நபி (அலை) அவர்கள் அப்படிப்பட்ட சபிக்கப்பட்ட மரணத்திற்கு ஆளாகவில்லை என்றும், அன்னாரது ரூஹ் இறைவனளவில் உயர்த்தப்படும் அளவுக்கு புனிதமானது என்றும் காட்டுவதற்குத்தான் **ரஃபஅ** என்று அல்லாஹ் கூறுகிறான்.

அவ்வாறு அவர் கொல்லப்படவில்லை என்று கூறுவதனால் அவர் இறக்கவே இல்லை. உயிரோடு இருக்கிறார் என்று கருதுவது தவறாகும். எப்படியென்றால் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்கள் ஒரு நேர்மையான பெண்ணாக இருந்தார் என்று திருக்குர்ஆன் கூறியிருப்பதனால், மற்ற நபிமார்களின் தாய்மார்கள் அவ்வாறு நேர்மையான பெண்களாக இருக்கவில்லை என்று கருதலாமா? இந்த இடத்தில் நான் முன்பு கூறியபடி யூதர்கள் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களை விபச்சாரி (நவூதுபில்லாஹ்) என்று கூறியதனால் அதை மறுக்கும் விதத்தில் திருக்குர்ஆன் அவரை ஒரு நேர்மையான பெண் என்று கூறுகிறது. இவ்விடத்தில் யூதர்களின் குற்றச்சாட்டை மறுக்கும் விதத்தில் அவருடைய நேர்மை எடுத்துக் காட்டப்படுகிறதே தவிர அதனால் பிற நபிமார்களின் தாய்மார்கள் நேர்மையான பெண்கள் இல்லை என்று குறைத்து மதிப்பிடுவதாக பொருளாகாது. அதுபோன்ற ஒரு அவதூறு பிற நபிமார்களின் தாய்மார்கள் மீது சுமத்தப்படவில்லை என்பதாலும், ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதாலும் அவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறே யூதர்கள் ஈஸா (அலை) அவர்களுடைய மரணம் பற்றி தவறாகக் கூறிய கருத்துகளை மறுக்கும் விதத்தில் தான் சிலுவையில் அறையப்பட்டோ கொல்லப்பட்டோ அவர் இறக்கவில்லை என்று திருக்குர்ஆன் கூறுகிறதே தவிர அவர் இறக்கவே இல்லை என்ற பொருளில் அல்ல.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உட்பட எந்த நபியும் சிலுவையில் அறையப்படவுமில்லை; கொல்லப்படவுமில்லை என்பதனால் அவர்கள் இறக்கவில்லை என்றோ உடலோடு உயர்த்தப்பட்டார்கள் என்றோ சொல்ல முடியாது. ஏன் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்படவில்லை; கொல்லப்படவுவில்லை. அப்படியிருக்க அவரை மிக மேலான இடத்திற்கு உயர்த்தினோம் என்று இறைவன் கூறியதனால் அவர்



உடலோடு உயர்த்தப்பட்டு உயிரோடு இருக்கிறார் என்று அபூ அப்தில்லாஹ் ஒப்புக் கொள்வாரா?

எல்லாவற்றிற்கும் மேலாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மக்கத்துக் காஃபிர்கள் சில செயல்களைச் செய்து காட்டுமாறு கேட்டார்கள். அவற்றுள் ஒன்று, நீர் இந்த உடலோடு வானத்திற்கு ஏறிச் செல்ல வேண்டும். திரும்பி வரும்போது நாங்கள் வாசிக்கத்தக்க ஒரு நூலைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டதற்கு, அல்லாஹ் தன் தூதரிடம் பதில் கூறுமாறு கூறிய வசனங்கள் சிந்தனைக்குரியவையாகும்.

"என் இறைவன் தூயவன்; நான் ஒரு மனித ரஸூலேயன்றி வேறில்லை." (17:94)

திருக்குர்ஆனின் இந்த வசனத்திலிருந்து உடலோடு ஒரு மனித ரஸூல் வானத்திற்கு ஏறிச் செல்வது அல்லாஹ்வின் தூய்மைக்கு மாறானதும் ஒரு மனித ரஸூல் அவ்வாறு வானத்திற்கு ஏறிச் செல்ல முடியாது என்பதும் தெளிவாக விளங்குகிறது. இந்த வசனத்திற்கு மாற்றமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடலோடு உயர்த்தப்பட்டார் என்று நம்புவது அல்லாஹ்வின் பரிசுத்தத் தன்மைக்கு களங்கம் கற்பிப்பதாகும். ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் வானத்திற்கு உடலுடன் சென்று விட்டார் என நம்பினால் இந்த வசனத்தின்படி அவர் மனிதனோ, ரஸூலோ இல்லை. மாறாக, கிறித்தவர்கள் நம்புவது போல் அவர் கடவுளோ, கடவுளின் குமாரரோ ஆவார் என நம்புவதாகி விடும். மாறாக, வசனம் 17:94 -ல் தர்கா என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. உடலோடு வானத்திற்கு ஏறிச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் தர்கா என்ற சொல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை குறித்து திருக்குர்ஆனில் பயன்படுத்தப்படவில்லை. எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் பயன்படுத்தப்பட்ட **ரஃபஅ** என்ற சொல் உடலோடு உயர்த்தப்படுதல் எனும் பொருளை தராது. எனவே அவர் உடலோடு உயர்த்தப்படவில்லை என்று விளங்கிக் கொள்ளலாம்.

அபூ அப்தில்லாஹ், ஈஸா நபி (அலை) அவர்கள் உடலோடு உயர்த்தப்படவில்லை என்று நாம் கூறுவதை அல்லாஹ்வின் வல்லமையை மறுப்பது எனவும் அல்லாஹ்வை கையாலாகாதவன் என்று கருதுவதாகவும் தம் நூலில் எழுதியுள்ளார்.

அல்லாஹ், எல்லாம் வல்லவன் என்ற பண்பின் மீதும் அவனுடைய பிற பண்புகள் எல்லாவற்றின் மீதும், அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் ஈமான் (நம்பிக்கை) கொண்டுள்ளோம் என்பதை அல்லாஹ்வின் படைப்பினங்கள் எத்தனை உண்டோ அத்தனை முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகிறோம்.

அல்லாஹ்வுக்கு **எல்லாம் வல்லவன்** என்ற ஒரு பண்பு இருப்பது போல் அவன் **பரிசுத்தமானவன்** என்ற பண்பும் உள்ளது. எனவே ஒன்றை தவறாகப் புரிந்து கொண்டு இன்னொன்றை மறுப்பது ஒரு வகை குஃப்ர் ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உடலோடு உயர்த்துவதற்கு சர்வ வல்லமையுள்ள இறைவனால் முடியுமென்றாலும் அவ்வாறு செய்வது அல்லாஹ்வுடைய பரிசுத்தத் தன்மைக்கு மாற்றம் என்று (17:94) இறைவன் கூறியுள்ளான்.

எப்படியென்றால் ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்களை அவருடைய எஜமானி என்னருகே வா என்று தவறான செயலுக்கு அழைத்த போது அவர் பயந்து ஓடுகிறார். அந்தப் பெண் அவரை விரட்டுகிறார் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இச்சம்பவத்தை வைத்துக் கொண்டு யூசுப் (அலை) அவர்கள் ஆண்மை இல்லாதவர் என்று கருத முடியுமா? அந்த இடத்தில் இறை அச்சமும் பாவத்தைப் பற்றிய அருவருப்பும் அவருடைய நேர்மையும் அச்செயலில் ஈடுபடாதவாறு அவரை தடுத்தது. ஒரு நபி அத்தகைய செயலைச் செய்யமாட்டார். எனவே ஒருவரால் செய்ய முடியும் என்பது வேறு, செய்யமாட்டாரென்பது வேறு என்பதை அபூ அப்தில்லாஹ் போன்றோர் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவரை உடலோடு உயர்த்த அல்லாஹ்வால் முடியும். ஆனால் அவனுடைய பரிசுத்தத் தன்மைக்கு மாற்றம், களங்கம் என்பதால் இறைவன் அவ்வாறு செய்யமாட்டான்; செய்யவில்லை.

இவ்வாறு அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் நம்புவதால் அல்லாஹ்வின் வல்லமையை நாங்கள் மறுத்ததாகி விடும் என்று கூறுவதாக இருந்தால் அபூ அப்தில்லாஹ் அவர்களிடம் சில கேள்விகளை கேட்கிறோம்.

1. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் அவரது தாயாரையும் இரு கடவுள்களாகப் படைக்க அல்லாஹ்வுக்கு வல்லமை உண்டா? இல்லையா?



2. இறைவன் தனக்கென சந்ததிகளை உருவாக்க வல்லமை உண்டா? இல்லையா?
3. அல்லாஹ் மலக்குகளை பெண் மக்களாக படைக்க வல்லமை உண்டா? இல்லையா?

இதற்கு அபூ அப்தில்லாஹ் என்ன பதில் கூறுவார்?

இவை போன்ற இடங்களில் திருக்குர்ஆன் கூறுவது போல் அவ்வாறு செய்வது அல்லாஹ்வின் பரிசுத்தத் தன்மைக்கும் தவ்ஹீதுக்கும் மாற்றம் என்பதால் இறைவன் செய்யவில்லை என்று விளங்குகிறது. அல்லாஹ்வால் எதையும் செய்ய முடியும் என்பது வேறு; செய்யமாட்டான் என்பது வேறு. இரண்டையும் குழப்பக் கூடாது. ஒன்று, அல்லாஹ்வுடைய வல்லமை. மற்றொன்று அல்லாஹ்வுடைய பரிசுத்தத் தன்மை.

மேலும் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தம் நூலில் (இரண்டாம் பதிப்பில்) பக்கம் 35, 36ல் கேட்டுள்ள வினாக்களுக்கு அபூ அப்தில்லாஹ் அவர்கள் பதில் தரவில்லை. எனவே அவ்வினாக்களை சுருக்கமாக இங்கே மீண்டும் எழுப்புகிறோம்.

“ஓர் அடியான் இறைவனுக்காக தாழ்மைக் குணத்தைக் மேற்கொண்டால் இறைவன் அவரை 7 ஆம் வானத்திற்கு உயர்த்தி விடுவான்.” (கன்ஸுல் உம்மால்)

இந்த நபிமொழியில் வரும் **ரஃபஅ** என்னும் சொல்லைக் காரணம் காட்டி தாழ்மைக்குணம் உள்ளவனை இறைவன் உடலோடு வானத்திற்கு உயர்த்துவான் என்று பொருள் கூறுவாரா? அவ்வாறு யாரும் கூற மாட்டார்கள். இப்படி பொருள் கூறுவது என்றால் ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் மட்டும் என்ன? எல்லா நபிமார்களும், வலிமார்களும், தாழ்மைக் குணம் கொண்ட அத்தனை நல்லடியார்களும் உடலோடு வானிற்கு உயர்த்தப்பட்டு அங்கு வாசம் செய்வதாக நம்ப வேண்டும்.

ஐவேளைத் தொழுகையை கடைபிடிக்கிறவர்கள் தொழுகையின் போது ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு ஸஜ்தாக்களுக்கிடையில் வர்ஃபஃனி – இறைவா என்னை உயர்த்துவாயாக என்று பிரார்த்தனை செய்கிறார்கள். உடலுடன் வானிற்கு உயர்த்துவது இதற்குப் பொருள் என்றால் வாழ்நாள்

எல்லாம் தொழுது வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், சஹாபா பெருமக்களும் இவ்வாறு செய்து வந்த பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொள்ளவில்லை என்றல்லவா கூற வேண்டி வரும்? ஏனென்றால் இவ்வாறு பிரார்த்தனை செய்த எவரும் உடலுடன் வானிற்கு உயர்த்தப்படவில்லையே. எனவே இந்த பிரார்த்தனையின் பொருள் என்னுடைய நிலையை உயர்த்துவாயாக என்பதே தவிர வேறொன்றும் இல்லை.

இந்த வினாக்களுக்கு அபூ அப்தில்லாஹ் எங்கும் பதில் தரவில்லை. ஒருவேளை ஹஸ்ரத் ஈஸா நபி (ஸல்) அவர்களுக்கு வந்தது போன்று ஒரு சூழ்நிலை வேறு யாருக்கும் வரவில்லை. வந்திருந்தால் அவர்களும் இறைவன் அளவில் உடலோடு உயர்த்தப்பட்டிருக்கலாம் என்று எண்ணி பதில் தரவில்லையோ அல்லது பதில் தர முடியாத நிலையோ? அல்லாஹ் அறிவான்.

அப்படி ஒரு காரணமும் அவர் காட்ட முடியாது. ஏனென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விசாரணைக்காக பிடிக்க வந்தபோது தான் அவரை உடலுடன் அல்லாஹ் தன்னளவில் உயர்த்தி விட்டதாக அபூ அப்தில்லாஹ் போன்றோர் கருதுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கோ அவர்களின் தலைக்கு 100 ஒட்டகம் விலை வைக்கப்பட்ட வேளையிலும் அல்லாஹ் அவர்களை உடலோடு உயர்த்தி தன்னளவிலோ, ஏழாவது வானத்திலோ, குறைந்தபட்சம் மதீனாவிலோ கொண்டு வைக்கவில்லையே! அல்லாஹ் கையாலாகாதவன் என்று அபூ அப்தில்லாஹ் கூறுவாரா? அல்லது அல்லாஹ் பாரபட்சமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஒருவிதமாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒருவிதமாகவும் செய்து விட்டான் என்று அபூ அப்தில்லாஹ் கூறுவாரா?

அல்லாஹ்வின் நடைமுறையில் ஒருபோதும் மாற்றமில்லை (குர்ஆன் 33:63) மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சூரா ஃபாத்திஹாவில் செய்த "இறைவா நீ அருள் புரிந்தவர்களின் வழியில் (நீ எங்களை) நடத்துவாயாக" என்ற துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஹிஜ்ரத் செய்த வேளையில் எதிரிகளிடமிருந்து அவர்களை அல்லாஹ் காப்பாற்றினான் என்றால் அதுதான்



அல்லாஹ்வின் வல்லமையாகும்; நடைமுறையுமாகும். அதாவது தவ்ர் குகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் ஒளிந்திருந்த போது அவ்விருவரையும் அல்லாஹ் காப்பாற்றி மதீனா கொண்டு சேர்த்தான். அவர்கள் குகையில் இருக்கும் போது, எதிரிகள் பலர் குகைக்கு வெளியே நின்று கொண்டிருக்க ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! நாம் இருவர் தானே இருக்கிறோம். எதிரிகள் பலர் இருக்கின்றனரே! என்று கேட்க அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அபூபக்கரே! அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். என்று பதில் கூறினார்கள்.

அந்தக் குகையில் அல்லாஹ் அவர்களுடன் இருந்தான். அல்லாஹ் அவர்களை உடலுடன் தன்னளவில் உயர்த்திக் கொள்ள வில்லை. மாறாக அவன் அந்த மாநபி (ஸல்) அவர்களுடன் அல்லாஹ்வும் இருந்தான். இதுவே அல்லாஹ்வின் நடைமுறையாகும்.

இவ்வாறுதான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் காப்பாற்றப் பட்டார்கள் என்று நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம். இதிலிருந்து திருக்குர்ஆன், நபிமொழிகளின் அடிப்படையில் அல்லாஹ்வின் வல்லமையை சரியாக மதிப்பிட்டு யார் நம்பிக்கை கொள்கிறார்கள் என்பதை படிப்போர் புரிந்து கொள்ளட்டும்.

## 8. மிஃராஜ் பயணம் ஒரு ஆத்மீக் காட்சியே!

அபூ அப்தில்லாஹ் தன் நூல் பக்கம் 47, 48ல் இவ்வாறு எழுதியுள்ளார்.

***காதியானிகள், ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ் அளவில் உயர்த்தப்பட்டுள்ளதை மறுத்து வருவதை நிலைநாட்ட நபி (ஸல்) அவர்களின் (மிஃராஜ்) விண்வெளிப் பயணத்தையும், ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு பூத உடலுடன் இறங்கியதையும் மறுத்து வருகிறார்கள். இதற்குக் காரணம் இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் உண்மை என்று ஒப்புக் கொண்டால் அதே அடிப்படையில் ஈஸா (அலை) அவர்கள் உடலுடன் அல்லாஹ் அளவில் உயர்த்தப்பட்டதையும் ஒப்புக் கொள்ள வேண்டி வரும் என்ற தப்பான எண்ணமேயாகும். எனவே நபி (ஸல்) அவர்கள்***

*மிஃராஜுக்கு சென்றது கனவில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சியே என்று அவர்கள் சாதித்து வருகிறார்கள். ஆனால் குர்ஆனில் மிஃராஜ் சம்பந்தமாக அதனோடு இணைக்கப்பட்டுள்ள இஸ்ரா என்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடும் பொழுது,*

*அல்லாஹ் மிக பரிசுத்தமானவன்; அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓர் இரவில் அழைத்துச் சென்றான் (17:1) என்று குறிப்பிடுகிறான். இந்த இடத்தில் நபி (ஸல்) அவர்களை அடியார் (அப்து) என்று தெளிவாகக் குறிப்பிடுகிறான். மிஃராஜ் சம்பவத்தைக் குறிக்கும் மற்றொரு இடத்திலும் (53:10) அப்து என்ற பதத்தையே குறிப்பிடுகிறான். இதிலிருந்து தெளிவாக நபி (ஸல்) அவர்கள் விழித்த நிலையில் உடலுடன் மிஃராஜ் சென்றதைக் குறிக்கும்.*

*கனவில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாக இருந்திருக்குமே -யானால் குறைஷிக் காஃபிர்கள் அதனை மறுக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது. காரணம் கனவில் அப்படிப்பட்ட நிகழ்ச்சி சம்பவிப்பது சாத்தியமானது என்பதை விழித்த நிலையில் நனவில் உடலுடன் சென்று வந்த நிகழ்ச்சியாக நபி (ஸல்) அவர்கள் அறிவித்ததாலேயே குறைஷிகள் அதனை மறுத்தனர். எனவே மிஃராஜ் காதியானிகள் சொல்வது போன்று கனவில் இடம் பெற்ற சாதாரண நிகழ்ச்சி அல்ல. விழித்த நிலையில் பூத உடலுடன் இடம்பெற்ற ஒரு மகா அற்புதமான நிகழ்ச்சியே மிஃராஜ் ஆகும்.*

**நம் பதில்:**

அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓர் இரவில் அழைத்துச் சென்றான். (17:2)

இதில் நபி (ஸல்) அவர்களை அடியார் (அப்து) என்று குறிப்பிடுகிறான். எனவே உடலுடன் விழித்த நிலையில் மிஃராஜ் சென்றதைக் குறிக்கும் என அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார். அப்து – அடியார் என்று சொல்லப்பட்டிருப்பதால், உண்மை நிகழ்ச்சி, கனவு இல்லை என்பதற்கு திருக்குர்ஆன், நபிமொழி சான்று எதையும் அவர் தராததினால் இது ஒரு தவறான வாதமாகும்.



குறைந்த அளவு, அந்த நிகழ்ச்சி கனவு நிகழ்ச்சியாக இருக்கும் என்றால் அதை எப்படி சொல்ல வேண்டும் என்றாவது குர்ஆன், நபிமொழி சான்றுகளின் அடிப்படையில் அபூ அப்தில்லாஹ் சொல்லியிருக்க வேண்டும்.

அபூ அப்தில்லாஹ் குறிப்பிடும் 17:2 ஆம் வசனம் இஸ்ரா என்னும் இரவுப் பயணம் பற்றியதாகும். இந்த இஸ்ராவும் மிஃராஜும் இரு வெவ்வேறு நிகழ்வுகளாகும். அதனால்தான் இமாம் புகாரி அவர்கள் தன் நபிமொழித் தொகுப்பில் இஸ்ரா, மிஃராஜ் இரண்டையும் இரு பாடங்களாகப் பிரித்து, தனித்தனியே கூறியுள்ளார்கள். இந்த இஸ்ரா ஓர் ஆன்மீகக் காட்சி என்று திருக்குர்ஆனே கூறி விடுவதைப் பாருங்கள்:

நாம் உமக்குக் காட்டிய ஆன்மீகக் காட்சியையும், குர்ஆனில் சபிக்கப்பட்ட மரத்தையும் மக்களுக்குச் சோதனையாகவே ஆக்கியுள்ளோம். (திருக்குர்ஆன் 17:61) இந்த வசனத்தில் ரூஃயா என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு ஆன்மீகக் காட்சி என்ற பொருளைத் தவிர வேறு அர்த்தம் இல்லை. 12:44, 37:106, 48:28, 12:6, 12:101 ஆகிய திருக்குர்ஆன் வசனங்களில் இந்தச் சொல் ஆன்மீகக் காட்சி என்ற அர்த்தத்திலேயே கையாளப்பட்டிருக்கிறது. ரூஃயா என்றால் அகக்கண் பார்ப்பதே என்று அபூ அப்தில்லாஹ்வே அந்-நஜாத் டிசம்பர் 2001 இதழில் ஒப்புக் கொண்டுள்ளார்.

17:2ம் வசனத்தில் கூறப்பட்டுள்ள இஸ்ரா நிகழ்ச்சியைக் குறித்தே 17:61ல் ரூஃயா – ஆன்மீகக் காட்சி எனக் கூறப்பட்டுள்ளதாக ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (புகாரி – எண்.4716) எனவே, 17:2ல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி வெளிப்படையாக நடந்ததன்று. மாறாக அது ஓர் ஆன்மீகக் காட்சியே என்ற முடிவிற்கே நாம் வர வேண்டும். ஏனெனில் திருக்குர்ஆனும் அதனை உறுதி செய்கிறது.

இஸ்ராவின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜெருசலேம் சென்று அங்கிருந்த பள்ளியில் இமாமாக நின்று தொழுதார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கும் அதிகமான முழு உலகிற்கும் அனுப்பப்பட்ட அத்தனை நபிமார்களும் அங்கு வந்து சேர,

அத்தனை நபிமார்களும் நின்று தொழும் அளவுக்கு அங்கு இடவசதி கொண்ட பள்ளி இருந்ததா? இன்றாவது அங்கு அவ்வளவு பெரிய இடம் இருக்கிறதா?

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கைக்கு வந்தது. மேலும் அத்தனை நபிமார்களும் புராக் போன்ற வாகனத்தில் மண்ணுக்கு வந்து விண்ணுக்கு சென்றார்களா? அத்தனை வாகனங்களையும் கட்டுவதற்கு (Parking) இடவசதி அங்கு இருந்ததா? இல்லையென்றால் இஸ்ரா சம்பவம் உடலோடு நடந்தது அன்று என்றும், ஒரு ஆன்மீகக் காட்சி என்றும் விளங்கவில்லையா?

எனவே அல்லாஹ் தன் அடியராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மக்காவிலிருந்து அக்ஸா மஸ்ஜிதுக்கு – பூமியிலுள்ள நம் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, தான் அழைத்துச் சென்றதாக கூறுவதால், இது எதிர்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் ஏற்படப்போகும் ஹிஜ்ரத் பற்றியும், அவர் அனைத்து சமுதாய மக்களுக்கும் இமாமாக – நபியாக விளங்குவார் என்றும் உலகின் எல்லா சமுதாய மக்களும் அவரைப் பின்பற்றி நடப்பர் என்றும் எடுத்துக்காட்டும் ஒரு ஆன்மீகக் காட்சி என்று விளங்குகிறது.

திருக்குர்ஆனின் 53ம் அத்தியாயத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மிஃராஜ் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் அவரது உள்ளம், தான் கண்டதைப் பற்றி பொய்யுரைக்கவில்லை (53:12) என்றும், நிச்சயமாக அவர் மற்றொரு முறையும் அவனைக் கண்டார். மிகத் தொலைவிலுள்ள இலந்தை மரத்திற்குப் பக்கத்தில் (53:14,15) என்றும் திருக்குர்ஆனில் காணப்படுகிறது. மேலும் ஹதீஸில் மிஃராஜ் பற்றிய பாடத்தில் இலந்தை மரத்தின் பக்கத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கண்டது அல்லாஹ்வை என்று தெளிவாக விளங்குகிறோம். இதிலிருந்து சித்ரத்துல் முன்தஹாவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை தன் உள்ளத்தாலேயே கண்டார்கள் என்பது புலனாகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை தன் ஆத்மாவினால் கண்டார்கள் என்று ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். (முஸ்லிம் பாகம் 1)



அல்லாஹ் ஒளியாக விளங்குகின்றான். அவனை புறக்கண்ணால் காண முடியாது. அவ்வாறு கண்டதாகக் கூறுவது அவன் மீது பொய்யாக இட்டுக்கட்டிக் கூறுவதாகும். எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை ஆன்மீகக் கண்ணால் கண்டுள்ளார்கள் என்பது தெளிவாகிறது. இதையே அபூதர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒளியை (அல்லாஹ்வை) கண்டதாகக் கூறுகிறார்கள்.

(முஸ்லிம் – பாகம் 1 ஈமான் பாடம்)

**மிஃராஜ் பயணத்தின் இறுதியில் அல்லாஹ்வின் பெயர் கூறி இறங்குங்கள் என்று ஜிப்ரீல் கூற, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புனித பள்ளியில் விழித்து எழுந்தார்கள். (புகாரி – எண். 7517) என்றும் ஹதீஸில் காணப்படுகின்றன.**

எனவே மிஃராஜ் பயணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தூக்கத்தின் போது புறப்பட்டுச் சென்றதையும் பயணம் முடிந்தவுடன் தூக்கத்திலிருந்து விழித்ததையும் தெளிவாகக் குறிப்பிடுவதால் இது ஆன்மீகக் காட்சி என்று விளங்குகிறது.

நான் இறையில்லமாகிய கஅபாவில் இரு மனிதர்களுக்கு இடையே தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடைப்பட்ட நிலையில் இருந்தபோது நுண்ணறிவாலும் இறை நம்பிக்கையாலும் நிரப்பப்பட்ட தங்கத்தட்டு ஒன்று என்னிடம் கொண்டு வரப்பட்டது. என் நெஞ்சம் காறை எலும்பிலிருந்து அடிவயிறு வரை பிளக்கப்பட்டது. பிறகு ஸம்ஸம் நீரினால் என் வயிறு கழுவப்பட்டது. பிறகு (என் இதயம்) நுண்ணறிவாலும் இறை நம்பிக்கையாலும் நிரப்பப்பட்டது. (புகாரி, பாடம் : படைப்பின் ஆரம்பம் – புகாரி – எண்.3207)

இங்கு தூக்கத்திற்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலை என்பது கஷ்ஃபின் நிலையாகும். தங்கத்தட்டு இவ்வுலகில் மூஃமினுக்கு விலக்கப்பட்ட ஒன்று. எனவே இது ஆன்மீகக் காட்சி என்று தெரிகிறது. நுண்ணறிவும் இறை நம்பிக்கையும் புறக்கண்ணால் காணக்கூடிய திடப்பொருள் அல்ல. இதிலிருந்து இங்கு விவரிக்கப்படுவது ஆன்மீகப் பயணமே என்பது புலனாகும்.

பார்வைகளால் அவனை அடைய முடியாது. அவன் பார்வைகளை அடைகிறான். (6:104) இவ்வசனம் புறக்கண்ணால் அல்லாஹ்வை காண முடியாது. அவன் தான் நாடுபவருக்கு கனவு, கஷ்ஃப் மூலம் காட்சி தருகிறான் என்று கூறுகிறது. இத்தகைய இறை சந்திப்பு இவ்வுலகில் நிகழ்கிறது. இதனை 18:111, 84:7, 29:70 ஆகிய வசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. 22:47 வசனம் மனிதனுக்குள் புறக்கண், அகக்கண் பற்றிக் கூறுவதனைக் காணலாம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் மூஸா நபி (அலை) அவர்களும் அகக்கண் மூலமே இறைவனை இவ்வுலகில் கண்டனர். திருக்குர்ஆன் 20:85, 20:11 ஆகிய வசனங்கள் ஹஸ்ரத் மூஸா நபி (அலை) அவர்கள் இறைவனைச் சந்தித்ததை எடுத்துக் கூறுகிறது.

மிஃராஜ் என்ற அரபிச் சொல் அரஜ என்ற மூலச் சொல்லிலிருந்து வந்ததாகும். இந்தச் சொல்லுக்கு உடலுடன் வானம் செல்லுதல் என்ற பொருள் திருக்குர்ஆனிலோ ஹதீஸ்களிலோ கொடுக்கப்படவில்லை. எனவே மிஃராஜ் பற்றிய சரியான அறிவு இல்லாதவர்களே அது உடலுடன் செய்யப்பட்ட வானுலகுப் பயணம் என்று கூறுவர்.

இந்த நிகழ்வுகள் ஆன்மீகமானவை என்றால் குறைஷிக் காஃபிர்கள் அதனை ஏன் மறுத்தார்கள்?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து பைத்துல் முகத்தஸ் வரை சென்ற இஸ்ரா பயணம் பற்றிக் கேள்விப்பட்ட குறைஷிக் காஃபிர்கள் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் சென்று, உங்கள் தோழர் பைத்துல் முகத்தஸ் சென்று திரும்பியதனை நீங்கள் நம்புகிறீர்களா என்று கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், நான் அன்னாருக்கு வானிலிருந்து வஹி வருகிறது என்று (இதனை விடப் பெரியதை) நம்புகிறேன் என்று கூறினார்கள்.

இச்சம்பவம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், மக்காவிலிருந்து மிஃராஜ் சென்றது வேறு என்பதையும், மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸ் சென்றது வேறு என்பதனையும் அன்னார் உடலோடு அந்த இரு பயணங்களையும் செய்யவில்லை என்பதனையும் தெளிவாக்குகிறது.



ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வானிலிருந்து வஹி வருவதையே மிகப் பெரியதாகக் கருதி அதனை நம்புவதாகக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உடலுடன் அப்பயணங்களைச் செய்திருப்பார்கள் என்றால், அன்னார் உடலோடு வானிற்குச் சென்று வந்ததை நம்புகிறேன் என்று தான் கூறியிருப்பார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அவ்வாறு கூறாததிலிருந்ததும் அவை ஆன்மீகப் பயணங்கள் என்றே தெளிவாகின்றது.

மேலும் அக்காஃபிர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பொய் நபி என்றும், வஹி பொய் என்றும் மட்டும் நம்பவில்லை. மாறாக, காணாத ஒரு புதிய இடத்தை கனவில் காண முடியாது. எனவே நபி (ஸல்) அவர்கள் கனவில் கண்டதையும் மறுத்து அக்கேள்வியை குறைஷிகள் கேட்டனர். எனவே மிஃராஜும் அஸ்ராவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆன்மீகப் பயணமே என்பது தெளிவாகிறது.

## 9. ஆதம் (அலை) அவர்கள் வாழ்ந்த பூவுலக சொர்க்கம்

அபூ அப்தில்லாஹ் தனது நூலில் பக்கம் 48, 49ல் ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் சுவர்க்கத்தில் படைத்து பின்னர் பூமிக்கு அனுப்பி விட்டதாக எழுதியுள்ளார். மேலும் அஹ்மதிகளாகிய நாங்கள் ஆதம் (அலை) அவர்கள் பூமியில் தான் படைக்கப்பட்டுள்ளார் என்று நம்புவதற்குரிய காரணம், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ் அளவில் உடலுடன் உயர்த்தப்பட்டதை மறுப்பதற்காகத்தான் என்றும் அவர் எழுதியுள்ளார்.

திருக்குர்ஆனில் ஜன்னத் எனும் சொல் மறுமையில் கிடைக்கும் சுவர்க்கத்தையும் பூமியிலுள்ள தோட்டத்தையும் குறிக்கிறது. ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்திலிருந்து பூமிக்கு இறங்கினாரா? அல்லது பூமியிலுள்ள ஒரு தோட்டத்திலிருந்து வேறொரு இடத்திற்கு ஹிஜ்ரத் சென்றாரா? என்பதைக் காண்போம்.

திருக்குர்ஆன் சுவர்க்கத்தைப் பற்றி கூறும் எல்லா இடங்களிலும் எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்கிறார்களோ அவர்கள் சதா நீரருவிகள் ஓடுகின்ற சுவர்க்கத்தில் இருப்பார்கள் என்று கூறுகிறது. இங்கு

கூறப்பட்ட சுவர்க்கத்தைப் பற்றிய அடிப்படையைப் பார்க்கும் போது ஒருவர் இம்மையில் ஈமான் கொள்ள வேண்டியவற்றை ஈமான் கொண்டு அதன்படி இம்மையில் செயலாற்றி, மரணித்த பிறகு மறுமையில் அல்லாஹ் தரும் நற்கூலியே சுவர்க்கம் எனத் தெரிகிறது.

ஆனால் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் சொர்க்கத்தில் படைக்கப்படுவதற்கு முன்பு இப்படி பூமியில் வாழவில்லை. மரணிக்கவில்லை. எனவே அவர் மறுமையில் கிடைக்கும் சுவர்க்கத்தில் படைக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

மேலும் மேற்சொன்ன வசனத்தின்படி நல்லடியார்கள் மட்டுமே போய் சேரக்கூடிய இடம் தான் சொர்க்கம் எனத் தெரிந்து கொள்கிறோம். ஆனால் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் வாழ்ந்த ஜன்னத்தில் இப்லீஸ் ஷெய்த்தான் போன்ற தீயவர்கள் வாழ்ந்துள்ளனர் என்று தெரிகிறது. எனவே ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் பிறந்து வாழ்ந்த ஜன்னத் மறுமையில் வழங்கப்படக்கூடிய சுவர்க்கம் அல்ல எனத் தெரிகிறது.

சுவர்க்கத்தில் விரும்பியது கிடைக்கும். உயர்ந்த பட்டாடை உடுத்தி நிழல்களின் மஞ்சங்களில் இருப்பர் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. ஆனால் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் வாழ்ந்த ஜன்னத்தில் ஆதம் (அலை) அவர்கள் பசித்தவராகவும் ஆடையற்றவராகவும் தாகம் உடையவராகவும் வெயிலில் காய்பவராகவும் இருக்கக் கூடாது என்று கூறப்பட்டிருப்பதால் (குர்ஆன் 20:119,120) அவர் வாழ்ந்த ஜன்னத்தில் பசியும் ஆடை பற்றாக்குறையும் வெயிலும் இருக்க வாய்ப்புள்ளது எனத் தெரிகிறது. எனவே ஆதம் (அலை) அவர்கள் வாழ்ந்தது மறுமை சுவர்க்கம் அல்ல என்று மேலும் தெளிவாகிறது.

சுவர்க்கத்தில் வீண் வார்த்தைகள் இருக்காது என்றும் சாந்தியும் சமாதானமும் ஆட்சிபுரியும் என்றும் குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் ஆதம் (அலை) அவர்கள் வாழ்ந்த ஜன்னத்திலேயே இப்லீஸும் ஷெய்த்தானும் இறைக் கட்டளைக்கு மாற்றமாக செயல்பட்டிருக்கிறார்கள். குழப்பம் அதிகமாக இருந்தது என்று தெளிவாகிறது. எனவே ஆதம் (அலை) அவர்கள் மறுமையில் கிடைக்கும் சுவர்க்கத்தில் வாழவில்லை என்று தெளிவாக தெரிகிறது.



நான் முன்னரே கூறியது போன்று ஜன்னத் என்ற சொல் மரங்களும் நிழலும் நீரூற்றும் கொண்ட பூமியிலுள்ள தோட்டத்தைக் குறிக்கும். ஹூது சமுதாயம் வாழ்ந்த இடம் இத்தகு ஒரு ஜன்னத் என்று திருக்குர்ஆன் கூறுகிறது (குர்ஆன் 26:135). அதேபோன்று ஸாலிஹ் சமுதாயம் வாழ்ந்த இடமும் இப்படிப்பட்ட ஒரு தோட்டமே (26:148). இவ்வசனத்திலும் ஜன்னத் என்ற சொல்லே வந்துள்ளது. இதுபோன்ற ஒரு இடத்தில்தான் ஆதம் (அலை) அவர்களும் அவர் மனைவியும் வாழ்ந்தனர். எனவே ஹூது, ஸாலிஹ் சமூகத்தினர் சுவர்க்கத்தில் வாழ்ந்தனர் என்று அபூ அப்தில்லாஹ் கூறுவாரா? மறுமையிலுள்ள சுவர்க்கத்தைப் பற்றிக் கூறப்படும்போது அதிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் (15:49) என்றும் சுவர்க்கத்தில் நுழையுங்கள் (43:71) என்றும் தான் திருக்குர்ஆன் கூறுகிறது.

ஆனால் பூமியிலுள்ள ஜன்னத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது அதிலிருந்து வெளியேற்றப்படுவதை திருக்குர்ஆன் கூறுகிறது. ஃபிர்அவ்னையும் அவன் கூட்டத்தாரையும் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றி விட்டோம் என்று திருக்குர்ஆன் 26:58 வசனம் கூறுகிறது. இவ்வசனத்தில் ஜன்னத் என்ற சொல் வந்துள்ளதால், மறுமையிலுள்ள சுவர்க்கத்திலிருந்து தான் ஃபிர்அவ்னையும் அவனது கூட்டத்தாரையும் அல்லாஹ் வெளியேற்றினான் என்று அபூ அப்தில்லாஹ் கூறுவாரா?

அல்லாஹ் ஆதம் நபி (அலை) அவர்களைப் பற்றி கூறும் போது நான் பூமியில் என் கலீஃபாவை நியமிக்கப் போகிறேன் (2:31) என்று தான் கூறியுள்ளான். அவரை சொர்க்கத்திற்கு உயர்த்தியதாக எங்கும் கூறவில்லை.

எனவே ஆதம் (அலை) அவர்களும் அவர் மனைவியும் வெளியேற்றப்பட்டதாகக் கூறும் வசனத்தில் உள்ள ஜன்னத் என்ற சொல்லுக்கு பூமியில் உள்ள தோட்டம் என்பதே பொருள். அதிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

அபூ அப்தில்லாஹ்வுக்கு திருக்குர்ஆன், ஹதீஸ் கூறும் ஞானம் சிறிதளவும் இல்லை என்பதை அவரது கூற்றுக்களை படிப்பவர் புரிந்து

கொள்ளலாம். அதனாலேயே அஹ்மதிகளின் இது தொடர்பான நம்பிக்கையை குறை கூறுகிறார்.

அபூ அப்தில்லாஹ்வின் இரண்டாவது ஆதாரம், அவர் தனது நூலின் பக்கம் 17,18-ல் ஈஸா (அலை) உடலோடு வானத்திற்கு உயர்த்தப்பட்டார் என்பதற்கான இரண்டாவது ஆதாரமாக கீழ்வரும் திருக்குர்ஆன் வசனத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

## 10. தவஃப்பீ என்றால் ரூஹ் -ஐ கைப்பற்றுதல் என்றே பொருள்

***ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன்; இன்னும் என் அளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்; நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப் படுத்துவேன்; மேலும் உம்மைப் பின்பற்றுவோரை கியாம நாள் வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன். பின்னர் நீங்கள் அனைவரும் என்னிடமே திரும்பி வருவீர்கள். (அப்போது) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன் என்று அல்லாஹ் கூறியதை (நபியே நினைவு கூறுவீராக). (3:55)***

**நம் பதில்:**

1. இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள முத்தவஃப்பீக, ராஃபிஉக்க ஆகியவை முன்பே விளக்கப்பட்டிருக்கின்றது. எனவே அபூ அப்தில்லாஹ் கூறும் பொருள் தவறாகும்.
2. ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹ்) அவர்கள் இவ்வசனத்திற்கு தம் நூலில் பக்கம் 69 முதல் 72 வரை விளக்கம் தந்துள்ளார்கள். அவர்கள் காட்டிய எந்த ஆதாரத்தையும் அபூ அப்தில்லாஹ் கண்டு கொள்ளவில்லை; பதில் தரவில்லை. எனவே அதனை இங்கே சுருக்கமாகத் தருகிறேன்.

அ) இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டதாகவே கூறினார்கள். (மஜ்மவு பிஹாரில் அன்வார், முதற்பாகம் பக்கம் 286)



ஆ) இந்த வசனத்தில் வரும் முத்தவஃப்பீக்க என்ற சொல்லுக்கு ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் முமீதுக - உமக்கு மரணத்தை தருவேன் என்று பொருள் கூறியுள்ளார்கள்.

இ) பத்ஹுல் பயான் என்னும் திருக்குர்ஆன் விளக்கவுரை நூலில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின ரஃபஅ -வுக்கு (உயர்த்தப்படுதலுக்கு) முன்னதாக மரணத்தைக் கொடுத்தான் என்று வந்துள்ளது.

ஈ) ரயீஸுல் முஹத்தஸீன் ஹஸ்ரத் ஹாபிஸ் இப்னு கய்யிம் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். மஸீஹ் தமது 33 வயதில் வானிற்கு உயர்த்தப்பட்டார் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை.

உ) ஜலாலைன் மஅ கமாலைன் எனும் திருக்குர்ஆன் விளக்கவுரை நூலில் 109 ஆம் பக்கத்தில் ஹஸ்ரத் இப்னு ஹஸன் அவர்கள், ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டதாகக் கூறியுள்ளார்கள்.

ஊ) ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் ஹிஜ்ரத் செய்து இந்தியா சென்றடைந்ததாகவும் அங்கு அவர்கள் மரணம் அடைந்ததாகவும் கூறப்படுவது பகுத்தறிவுக்கோ வரலாற்றுச் சான்றுகளுக்கோ முரண்பட்டதல்ல. (எகிப்தின் முன்னாள் முப்தி அல் உஸ்தாத் அல்லாமா ரஷீத்ரிஸா, அல்மனார் பக்கம் 900)

எ) முஸ்லிம் உலகில் பிரசித்த பெற்ற அல் அஹ்ஸர் பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியராக இருந்த மஹ்மூது ஷல்தூத் என்பவர் கொடுத்த ஈஸா நபியின் மரணம் பற்றிய பத்வா. (அர்ரிஸாலா ஏடு பக்கம் 642, 15.5.1942)

அந்த மார்க்கத் தீர்ப்பாவது: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடலோடு வானத்திற்குச் சென்றார்கள்; இன்று வரை அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கொள்கைக்கு திருக்குர்ஆனிலோ நபிமொழிகளிலோ எவ்வித சான்றையும் காண முடியவில்லை. இறைவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம், தான் அவர்களை மரணிக்கச் செய்து தன் அளவில் உயர்த்துவதாகவும், அவர்களை நிராகரிக்கின்ற

மக்களிடமிருந்து அவர்களைப் பாதுகாப்பதாகவும் வாக்குறுதி அளித்திருந்ததாகவும் திருக்குர்ஆனில் காண முடிகிறது. இந்த வாக்குறுதியை அவன் நிச்சயமாக நிறைவேற்றி இருப்பான். ஈஸா நபி (அலை) அவர்கள் எதிரிகளால் கொல்லப்படவோ சிலுவையில் அறைந்து கொல்லப்படவோ இல்லை. மாறாக, இறைவன் இவை போன்றவற்றில் இருந்து அவர்களைக் காப்பாற்றி இயற்கையான மரணத்தை அளித்து தன்னளவில் உயர்த்திக் கொண்டான். (அர்ரிஸாலா பக்கம் 642)

மேலே காட்டிய 7 ஆதாரங்களயையும் அபூ அப்தில்லாஹ் கண்டும் காணாமல் விட்டு விடுகிறார்.

**அபூ அப்தில்லாஹ்வின் ஆதாரம் 2 தொடர்பாக அவர் தனது நூலின் 18, 19, 20ம் பக்கங்களில் எழுதியுள்ளவையும் அதற்குரிய பதிலும்:**

இன்னும் (ஈஸாவைக் கொல்ல) அவர்கள் திட்டமிட்டுச் சதி செய்தார்கள், அல்லாஹ்வும் சதி செய்தான்; தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான் (3:54) (அபூ அப்தில்லாஹ் நூல் பக்கம் 18)

***யூதர்கள் ஈஸா (அலை) அவர்களைப் பிடித்து சிலுவையில் அறைந்து கொன்றுவிட எண்ணினர். இது யூதர்கள் செய்த சதி. அல்லாஹ்வோ ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் பிடிக்க விடாது தன்னளவில் உயர்த்திக் காப்பாற்றி விட்டான். யூதர்கள் வேறொரு யூதனைப் பிடித்து சிலுவையில் அறைந்து கொன்று விட்டனர். இவ்வாறு யூதர்களின் சதியை அல்லாஹ் முறியடித்து விட்டான். எனவே அல்லாஹ் சதிகாரர்களுக்கு எல்லாம் மிகப்பெரிய சதிகாரன். (அபூ அப்தில்லாஹ் எழுதிய நூல் : பக்கம் 18-20)***

**நம் பதில்:**

1. யூதர்கள் ஈஸா (அலை) அவர்களைப் பிடித்து சிலுவையில் அறைந்து கொல்ல எண்ணினர். இதுவே யூதர்கள் செய்ய நினைத்த சதி, அல்லாஹ்வோ திட்டமிடுபவர்களுக்கு எல்லாம் மிகப்பெரிய திட்டமிடுபவன். எனவே யூதர்களின் தீய திட்டத்தை முறியடித்து ஈஸா (அலை) அவர்களை சிலுவையிலிருந்து காப்பாற்றி காணாமல் போன 10 கோத்திரமாகிய இஸ்ரவேலர்களைத் தேடிச் சென்று அவர்களை நேர்வழிப்படுத்த ஹிஜ்ரத்



செய்ய வைத்தான். இறுதியாக இந்தியா வந்து அங்கு காஷ்மீரில் வாழ்ந்த இஸ்ரவேலர்களுக்கு தப்லீக் செய்து அவர்களுடன் வாழ்ந்து இயற்கை மரணத்தை அடையச் செய்தான். இது அல்லாஹ்வின் திட்டமாகும்.

இவ்வாறு யூதர்களின் சதி தோல்வி கண்டது. அல்லாஹ்வின் திட்டம் முழுமையாக நிறைவேறியது.

2. அபூ அப்தில்லாஹ் திருக்குர்ஆன் 3:54 வசனத்திற்கு தந்திருக்கும் பொருளில் அல்லாஹ்வை மிகப்பெரும் சதிகாரன் ஆக்கி விட்டார். (நவூதுபில்லாஹ்)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிள்ளைகளுக்கு அழகிய பெயர்களை சூட்டுமாறு கூறியுள்ளார்கள். அல்லாஹ்வை அழகிய பெயர்களால் அழைக்குமாறு திருக்குர்ஆன் கூறுகிறது. இப்படி இருக்க அப்தில்லாஹ் அல்லாஹ்வுக்கு வழங்கியுள்ள பெயரைப் பார்க்கும் போது அவரே தன் நூலில் பக்கம் 19ல் அல்லாஹ்வின் மகத்துவத்தையும் கண்ணியத்தையும் உணராத ஈனர்களின் சிந்தையே அல்லாமல் ஈமான் உடையவர்களின் சிந்தை இத்தரம் இழிவுடையதாக இருக்க முடியுமா? என்று எழுதிய வசனம் அவருக்கே (அபூ அப்தில்லாஹ்வுக்கே) சரியாக பொருந்துவதனை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

இந்த 3:54 வசனத்தில் மக்ர் எனும் அரபிச் சொல் வந்துள்ளது. இதற்கு சதி, சூழ்ச்சி என்ற பொருளும் திட்டம் என்ற பொருளும் உண்டு. திட்டம் நல்ல திட்டம், தீய திட்டம் என இரு வகைப்படும். யூதர்கள் இறைவனுக்கும் அவனது நபிக்கும் எதிராகச் செயல்பட்டனர். எனவே அதனைச் சதி, சூழ்ச்சி என்று கூறலாம். ஆனால் அல்லாஹ்வோ இஸ்ரவேலர் சமுதாயத்தின் நலனுக்காக ஒரு நபியை அனுப்பியுள்ளான். அதனை சதி என்று கூற, அபூ அப்தில்லாஹ்வுக்கு என்ன நேர்ந்தது? அல்லாஹ் சதி செய்தான் என்று எழுதும் இவர்கள் எந்த அளவு ஞான சூன்யங்கள் என்பதை வாசகர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு சொல் அல்லாஹ்வுக்கு வரும் போது அவன் தகுதிக்கேற்ப ஒரு பொருளும், அச்சொல் நபிக்கு வரும்போது அவர்கள் தகுதிக்கேற்ப பொருளும் பிறர்க்கு வரும் போது அவர்கள் தகுதிக்கு ஏற்ப பொருளும்

கொள்ள வேண்டும் என்ற சாதாரண விஷயம் கூட அபூ அப்தில்லாஹ்வுக்கு தெரியவில்லை! அந்தோ பரிதாபம்!!

மேலும் இன்னொரு கோணத்தில் அவ்வசனத்திற்கு யூதர்கள் சதி செய்தனர். அல்லாஹ் அந்த சதிக்குரிய தண்டனையைக் கொடுத்தான் என்று எழுதியிருந்தால் கூட அதனை ஒப்புக் கொள்ளலாம். அவ்வாறு கூறாமல் அபூ அப்தில்லாஹ் அல்லாஹ்வை மிகப்பெரிய சதிகாரனாக்கியதிலிருந்து அபூ அப்தில்லாஹ்வுக்கு அரபி மொழி வழக்கோ, மொழி அறிவோ இல்லை என்பது புலனாகிறது.

## 11. ஈஸா நபியை வானத்திற்கு உயர்த்தாமல் அல்லாஹ்வால் காப்பாற்ற முடியாதா?

**அடுத்து, அபூ அப்தில்லாஹ் தனது நூலின் பக்கம் 18ல் இவ்வாறு எழுதுகிறார்:**

***...சிலுவையிலிருந்து இறக்கிய பின்னர் ஈஸா (அலை) அவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று பெற்ற தாயையும் அருமைச் சீடர்களையும் அம்போ என்று விட்டு விட்டு பிறந்த நாட்டையும் துறந்து அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட பணியையும் புறக்கணித்து காஷ்மீருக்கு ஓடி வந்து விட்டார்கள். 87 வருடங்கள் இருக்கும் இடம் தெரியாமல் பதுங்கி வாழ்ந்து இறந்து விட்டார்கள் (நவூதுபில்லாஹ்) அல்லாஹ் (ஜல்) ஒரு நபியை - ஈஸா (அலை) அவர்களை 87 வருடங்கள் விருதா வாழவிட்டு அதன் பின் மரிக்கச் செய்துள்ளான் (நவூதுபில்லாஹ்) அவர்களின் பதவியை உயர்த்தினான்.***

இதுவே காதியானிகளின் வாதம் என்று எழுதியுள்ளார்.

**நம் பதில்:**

உயிருக்கு ஆபத்தான வேளையில் நபிமார்களையும் நல்லடியார் களையும் ஹிஜ்ரத் செய்ய வைப்பது அல்லாஹ்வின் நடைமுறையாகும். அப்படியே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கும் நடந்தது. இதுபோன்ற ஒரு தருணத்தில் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறி மதீனா சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும் இவ்வாறே ஹிஜ்ரத் செய்தார்கள்.



இவைபோன்றே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் இஸ்ரவேல் மக்களைத் தேடி ஹிஜ்ரத் செய்து அவர்கள் மத்தியில் இறைபணியை நிறைவேற்றிய பின் இயற்கை மரணம் அடைந்தார்கள். இதுவே உண்மை! இதுவே அல்லாஹ்வின் வல்லமைக்கும், கண்ணியத்திற்கும், தகுதிக்கும் சுன்னத்திற்கும், திட்டத்திற்கும் பொருத்தமானதாகும்.

இதை விடுத்து, உண்மைக்கு மாற்றமாக, கற்பனையாக அல்லாஹ் அவரை தன்னளவில் உயர்த்தி 2000 ஆண்டுகளாக விருதாவாக வைத்துள்ளான் என்று நம்புவதும் அல்லாஹ் தன் திட்டப்படி நடத்த முடியாமல், ஒரு நபி தன் பணியைச் செய்து முடிக்கும் முன்பே யூதர்களுக்கு பயந்து அவரை உயர்த்தி 2000 ஆண்டுகளாக விருதாவாக வைத்துள்ளான் என்று நம்புவதும் அந்த நபியும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாமல் இன்னும் அங்கே இருக்கிறதாக நம்புவதும் யூதர்கள் தங்கள் சதியில் வென்று விட்டனர். அல்லாஹ் தோற்றுவிட்டான் (நவூதுபில்லாஹ்) என்று எண்ணுவதே ஆகும்.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தன் நூலில் அபூ அப்தில்லாஹ் போன்றவர்களின் கற்பனை கதை சம்பந்தமாக விடுத்துள்ள வினாக்களுக்கு அபூ அப்தில்லாஹ் தன் நூலில் பதில் தரவில்லை. அந்த வினாக்களை சுருக்கமாக தருகிறோம்.

1. ஈஸா (அலை) அவர்களுக்கு ஆபத்து நேரிட்ட போது செய்த செயல்பாடுகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த போது அல்லாஹ் ஏன் செய்து காட்டவில்லை?

2. ஈஸா (அலை) அவர்களை காப்பாற்ற வேண்டும் என்றால் ஆலிம்கள் கூறும் கற்பனை யுக்தியை கடைபிடிக்காமலேயே அவரை இறைவனால் காப்பாற்றியிருக்க முடியாதா?

இத்தகு வினாக்களுக்கு அபூ அப்தில்லாஹ் பதில் தரவில்லை.

3. யூத அதிகாரிகள் தங்கள் பதவியைப் பேணிக் கொள்ள கையில் பிடித்த யூதனைப் பிடித்துக் கொடுத்தார்கள் என்று எழுதியுள்ளார். அப்படியென்றால் நீதிபதி பிலாத்தின் விசாரணையில் அவன் தன்னைப் பற்றி எதுவும் கூறவில்லையா? விசாரணையில் அவன் உண்மையான ஈஸா

(அலை) இல்லை என்ற உண்மை தெரியாமல் போய்விட்டதா? அவனது உற்றார் உறவினரும், நண்பர்களும், குடும்பத்தினரும் எங்கே சென்றார்கள்? இந்தக் கேள்விகளுக்கு அபூ அப்தில்லாஹ்வின் பதில் என்ன?

## 12. திருக்குர்ஆனின் 3:55 வசனத்திற்கு விளக்கம்

**அபூ அப்தில்லாஹ் தன் நூலில் பக்கம் 21ல் இவ்வாறு எழுதுகிறார்:**

***3:55** முற்பகுதிக்குக் காதியானிகள் பொருள் கொள்வது போல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மரணிக்கச் செய்து தன்னளவில் உயர்த்திக் கொண்டான் என்ற பொருள் இருக்குமாயின் அதன் பிற்பகுதி பொய்யாகி விடுவது எங்ஙனம் என்று காண்போம்.*

***1. யூதர்கள் ஈஸா (அலை) அவர்களை வேசி மகன் என்று இழிவுபடுத்தியும், அவர் இறை தூதர் அல்லர் என்று கூறியும் அவர்களை நிராகரித்துக் கொண்டும் இருக்கின்றனர்.***

***2. கிறித்துவர்கள் அவர்களை இறைவனுடைய குமாரன் என்று கூறுவதால் ஈஸா (அலை) அவர்களை நிராகரித்தவர்களாகின்றனர்.***

***3. காதியானிகள் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள். மீண்டும் பூமிக்கு வரமாட்டார்கள் என்று கூறி நிராகரித்தவர் -களாகிறார்கள்.***

***3.55 இறைவசனத்தில் நிராகரித்துக் கொண்டிருப்போர் உடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன் என்று ஈஸா (அலை) அவர்கள் பற்றி அல்லாஹ் கூறுகிறான். இது இந்நாள் வரை நிறைவேறவில்லை என்று நமக்கு உறுதியாகத் தெரிகிறது. ஈஸா (அலை) அவர்களை உண்மையில் பின்பற்றுவோர் இப்போது இருப்பதாகவும் அறியோம். (அபூ அப்தில்லாஹ் நூல் பக்கம் 21)***

**நம் பதில்:**

அபூ அப்தில்லாஹ் திருக்குர்ஆன் 3.55க்கு ஒரு கற்பனை விளக்கத்தை அளித்து தானும் குழம்பி பிறரையும் குழப்புகிறார். அபூ அப்தில்லாஹ்வின் கருத்துப்படி அதாவது அவர் திருக்குர்ஆனுக்கு மாற்றமாகக் கொடுத்துள்ள விளக்கத்தின்படி, அல்லாஹ் ஈஸா (அலை)



அவர்களை தன்னளவில் கைப்பற்றி பூத உடலுடன் உயர்த்திக் கொண்டாலும் அதனால்,

1. யூதர்கள் ஈஸா (அலை) அவர்களை வேசி மகன் இல்லை என்றும், அவர் இறை தூதர் என்றும் ஏற்றுக் கொள்வார்களா? அல்லது ஏற்றுக் கொண்டார்களா?

2. கிறித்தவர்கள், ஈஸா (அலை) அவர்களை இறைவனுடைய குமாரன் இல்லை என்று கூறி விடுவார்களா? மாறாக பாருங்கள் எல்லா நபிமார்களும் இறந்து விட்டார்கள். இயேசு இறைவனுடைய மகனாக இருப்பதால் தான் இறைவன் தன் மகனை தன் வலப்பக்கத்தில் தூக்கி வைத்துள்ளான் என்றல்லவா இன்னும் கூறுகிறார்கள். எனவே அபூ அப்தில்லாஹ்வின் விளக்கம் அர்த்தமற்றதாகி விடுகிறது. அபத்தமாகி விடுகிறது.

திருக்குர்ஆன் 3:55 வசனத்தில் அல்லாஹ் நான்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளான். அவை நான்கும் நிறைவேறி விட்டன என்பதே உண்மை. அவையாவன,

1. ஈஸாவே உம்மை மரணிக்கச் செய்வேன். பிறகு
2. என்னளவில் உயர்த்திக் கொள்வேன்.
3. நிராகரிப்போருடைய குற்றச்சாட்டுகளிலிருந்து உம்மை தூய்மைப்படுத்துவேன்.
4. இறுதிநாள் வரை உம்மை ஏற்றுக் கொள்வோரை நிராகரிக்கின்றவர் –களின் மீது வெற்றி கொள்ளச் செய்வேன்.

முதல் இரண்டும் நிறைவேறிவிட்டதை முன்னர் கண்டோம். இப்போது மூன்றாவது வாக்குறுதியான நிராகரிப்பவர்களின் குற்றச்சாட்டிலிருந்து ஈஸா (அலை) அவர்களை தூய்மைப்படுத்தியது எவ்வாறு என்பதைக் காண்போம்.

யூதர்கள் ஈஸா (அலை) அவர்களை விபச்சாரியின் மகன் என்றும் அல்லாஹ்வின் தூதர் இல்லை என்றும் நம்பியதுடன் அதனை நிரூபிக்க சபிக்கப்பட்ட சிலுவை மரணத்தை தர நினைத்தார்கள். ஆனால் அல்லாஹ்

சபிக்கப்பட்ட சிலுவை மரணத்திலிருந்து ஈஸா (அலை) அவர்களைக் காப்பாற்றி இயற்கையான மரணத்தை கொடுத்து, ஏனைய தூதர்களைப் போல் அவரது ரூஹையும் உயர்த்தி விட்டான்.

கிறித்தவர்களுள் பல பிரிவினர் ஈஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னாரை கடவுள் என்றும் கடவுள் குமாரர் என்றும் கூறினர். ஆனால் அல்லாஹ் அவர்களின் தவறான கருத்தை மறுத்து ஈஸா (அலை) அவர்களை மர்யத்தின் மகன் என்றும் அல்லாஹ்வின் தூதர் என்றும் கூறி ஈஸா (அலை) அவர்களை கடவுள் இல்லை என்றும் கடவுள் குமாரன் இல்லை என்றும் நிரூபித்து விட்டான். இவ்வாறு அல்லாஹ்வின் மூன்றாவது வாக்குறுதியாகிய ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை நிராகரிப்பாளர்களின் குற்றச்சாட்டிலிருந்து தூய்மைப்படுத்துதல் நிறைவேறி விட்டது.

அடுத்து திருக்குர்ஆன் 3:55ல் கூறப்பட்டபடி அல்லாஹ்வின் 4வது வாக்குறுதியாவது இறுதிநாள் வரை ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டோர் நிராகரிப்போர் மீது வெற்றி கொள்ளுதல் என்பதாகும்.

ஆனால் விந்தை என்னவென்றால் ஈஸா (அலை) அவர்களை உண்மையில் பின்பற்றுவோர் இப்போது இருப்பதாகவும் அறியோம் என்று அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார். அபூ அப்தில்லாஹ்வின் இக்கூற்று அவரது ஈமான் மீது நடுநிலையாளர்களுக்கு ஐயத்தை ஏற்படுத்தும்.

அல்லாஹ்வின் அருளினாலும் திருக்குர்ஆன் மற்றும் நபி (ஸல்) அவர்களின் பரக்கத்தாலும் உலகில் ஒரு உண்மையான முஸ்லிம் இருக்கின்றவரை அவர் ஈஸா (அலை) அவர்களை மட்டும் அன்று. இறைவனால் அனுப்பப்பட்ட அத்தனை நபிமார்களையும் உண்மையில் பின்பற்றக்கூடியவரே ஆவார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மூஸா (அலை) அவர்களைக் கண்ணியப்படுத்திட நாங்களே (யூதர்களை விட) அதிக உரிமை உடையவர்கள் என்று சொல்லி (ஆசூரா) நாளில் நோன்பு நோற்கும் படி (முஸ்லிம்களுக்கு) உத்தரவிட்டார்கள். (புகாரி – எண். 3943)

எனவே, 3:55 ல் கூறப்பட்ட 4வது வாக்குறுதியின்படி யூதர்கள், ஈஸா (அலை) அவர்கள் காலம் முதல் இன்று வரை இழிவுக்காளாகி யுள்ளனர். ஆரம்பத்தில் கிறித்தவர்களின் ஆட்சியின் கீழும், பின்னர்



முஸ்லிம்களின் ஆட்சியின் கீழும் யூதர்கள் இழிவுபடுத்தப்பட்டனர். மேலும் கியாம நாள் வரை ஈஸா (அலை) அவர்களை கடவுள், கடவுள் மகன், வேசி மகன் என்று நம்பி மறுத்தவர்களை விட ஈஸா (அலை) அவர்களை உண்மையாளர் என ஏற்றுக் கொண்டவர்கள் மேலோங்கி இருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**அபூ அப்தில்லாஹ்வின் இன்னொரு கூற்று:**

***அபூ அப்தில்லாஹ் தனது நூலில் பக்கம் 22ல் எழுதியுள்ளதன் கருத்தாவது 3:55 வசனத்தில் ஈஸாவே நிச்சயமாக நாம் உம்மைக் கைப்பற்றுவேன் என்று கூறிவிட்டு அதே வசனத்தில் பின்னர் நீங்கள் அனைவரும் என்னிடமே திரும்பி வருவீர்கள் என்றும் கூறியிருப்பதால் அதாவது ஒரே வசனத்தில் இவ்விரு கருத்தும் வந்திருப்பதால் ஈஸா (அலை) அவர்கள் மரணம் எய்தாமல் தற்காலிகமாக அல்லாஹ்வின் அளவில் உயர்த்தப்பட்டுள்ளார்கள். மீண்டும் உலகில் வந்து வாழ்ந்து இறந்து மற்ற மனிதர்களைப் போல் அடக்கம் செய்யப்பட்டு அல்லாஹ்விடம் திரும்பிச் செல்வார்கள் என்று புரிந்து கொள்ளலாம்.***

இவ்வாறு அபூ அப்தில்லாஹ் எழுதியுள்ளார்.

**நம் பதில் :**

இவ்வசனத்தில் வரும் தவஃப்பீ என்பதற்கு நாம் முன்பே கூறியது போல் உயிரைக் கைப்பற்றுதல் – அதாவது மரணம் என்றே பொருள். 3:55 வசனத்திற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் முதவஃப்பீக்க என்பதற்கு முமீத்துக்க – மரணிக்கச் செய்தல் என்றே பொருள் கூறியுள்ளதை இமாம் புகாரி அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அபூ அப்தில்லாஹ் தவறாகப் பொருள் கொண்டிருப்பதுபோல் உடலோடு கைப்பற்றுதல் என்பதன்று. எனவே அபூ அப்தில்லாஹ்வின் அதி அற்புத கற்பனைக்கு கடுகளவும் இடமில்லை. மேலும் ரஃபஅ என்பதற்கும் உடலுடன் உயர்த்தப்படுதல் என்று பொருள் இல்லை.

திருக்குர்ஆனின் 39:43 வசனத்தின்படி மரணத்தின் போதும் தூக்கத்தின் போதும் ரூஹ்தான் இறைவனால் கைப்பற்றப்படுகிறதே தவிர உடல் அன்று. எனவே இறைவன் எதனைக் கைப்பற்றுகிறானோ

அதைத்தான் உயர்த்துவான். கைப்பற்றப்பட்ட உயிர் தான் உயர்த்தப்படுகிறது என்று தான் பொருள் கொள்ள வேண்டும். கைப்பற்றப்படாத உடல் உயர்த்தப்படுகிறது என்று பொருள் கொள்வது அபத்தமாகும்.

எனவே நீங்கள் எல்லாரும் என்னிடம் திரும்பி வருவீர்கள் என்பதால் மீண்டும் உலகில் வந்து, வாழ்ந்து, இறந்து அடக்கம் செய்யப்பட்டு அல்லாஹ்விடம் திரும்பி செல்லுதல் என்று பொருள் கொள்ள முடியாது. திருக்குர்ஆனின் பிற வசனங்கள் இக்கருத்தை மறுக்கின்றன. (மக்களே) நீங்கள் எங்ஙனம் அல்லாஹ்வை நிராகரிக்கின்றீர்கள்? நீங்கள் உயிரற்றவர்களாக இருந்தீர்கள். அவன் உங்களுக்கு உயிர் கொடுத்தான். பிறகு அவன் உங்களுக்கு மரணத்தைக் கொடுப்பான். பின்னர் உங்களை உயிர்ப்பிப்பான். இதன் பிறகு நீங்கள் அவனிடமே கொண்டு செல்லப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 2:29)

ஈஸா நபி (அலை) அவர்களின் வாழ்வும் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பித்தல், இறைவனிடம் செல்லுதல் என்ற முறையிலேதான் அமைந்திருந்தது.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி திருக்குர்ஆனில் 10:47, 13:41, 40:78 ஆகிய வசனங்களிலும் பொதுவாக மனிதர்களைப் பற்றி 32:12 வசனத்திலும் (தவஃப்பீ) ரூஹை முழுமையாகக் கைப்பற்றுவேன் என்றும் இறைவனிடம் திரும்பிச் செல்வார் என்றும் ஒரே வசனத்திலேயே சேர்த்துச் சொல்லப்பட்டிருப்பதால் அவர்கள் எல்லாரும் மரணம் அடையாமல் எங்கோ இருக்கின்றார்கள் என்றும், மீண்டும் உலகிற்கு வந்து வாழ்ந்து மரணித்து இறைவனிடம் திரும்பிச் செல்வர் என்றும் பொருள் கொள்ள வேண்டும். அபூ அப்தில்லாஹ் இவ்வாறு பொருள் கொள்வாரா? நிச்சயமாக இவ்வாறு பொருள் கொள்ள மாட்டார்.

3:56 வசனத்தின் மேல் கீழ் வசனங்களை சேர்த்துப் படித்தால் உண்மையான பொருள் நன்கு புரியும். அதாவது,

1. நிராகரிப்பவர்கள் திட்டம் தீட்டி உம்மைச் சிலுவையில் அறைந்து கொல்ல நினைத்தனர். நான் உமக்கு இயற்கையான மரணத்தை தருவேன்.
2. சாபத்திற்குரிய சிலுவை மரணத்திலிருந்து உம்மைக் காத்து மேன்மை வழங்குவேன்.



3. நிராகரிப்பவர்களின் குற்றச்சாட்டுகளிலிருந்து உம்மைத் தூய்மைப்படுத்துவேன்.
4. உம்மைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்போர்களை விட மேலோங்கச் செய்வேன்.

இவ்வுலக வாழ்வுடன் வாழ்க்கை முடிந்துவிடப் போவதில்லை. மறுமை வாழ்வும் உண்டு. அங்கு என்னிடம் வர வேண்டும். அப்போது நிராகரிப்பவர்கள் உம்மைப் பற்றி கூறிய அவதூறுகளுக்கு தீர்ப்பு வழங்குவேன். எனவே உம்மை நிராகரிப்பவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் கடினமான தண்டனை கொடுப்பேன். அந்த நிராகரிப்பவர்களுக்கு உதவி செய்பவர் எவரும் இல்லை என்று பொதுவாக எல்லாரையும் குறிப்பாக ஈஸா நபி (அலை) அவர்களை நிராகரித்தவர்களையும் குறித்துதான் அந்த வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

நிராகரித்தவர்கள் என்றால் ஈஸா நபி (அலை) அவர்களை மனித நபிக்கு மேலாகவோ, கீழாகவோ மதிப்பவர்கள். அதாவது யூதர்கள் அன்னாரை சாபத்திற்குரியவர், விபச்சாரியின் மகன் என்று கூறினர். கிறித்தவர்கள் தேவன், தேவ மகன் என்று கூறினர். முஸ்லிம்கள் இறைவனுக்கு மட்டும் உரிய பண்புகளாகிய ஜீவித்திருத்தல், படைத்தல், உயிர் கொடுத்தல் போன்ற பண்புகளை இறைவனுக்கு இருப்பதுபோல் ஈஸா நபி (அலை) அவர்களுக்கும் இருந்தன என்றும் நம்பி, ஒரு நபியின் தகுதிக்கு மேலாக இறைத் தகுதியைக் கொடுத்து நிராகரிப்போர் ஆகிவிட்டனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் வரம்பு மீறி பழிக்கவும் கிறித்தவர்களும் முஸ்லிம்களும் வரம்பு கடந்து புகழவும் செய்து இருவேறு எல்லைகளைத் தொட்டுவிட்டனர்.

திருக்குர்ஆன் 3:59 வசனத்தில் நிச்சயமாக அல்லாஹ்விடம் ஈஸாவுக்கு உதாரணம் ஆதமுடைய உதாரணத்தை போன்றது என்று கூறியிருப்பதனை நிராகரிப்பவர்கள் சிந்திக்க வேண்டும். மறுமையில் இறைவனிடம் செல்ல வேண்டியதையும் பதில் சொல்ல வேண்டியதையும் நினைவுகூர்ந்து திருந்த வேண்டும். இந்த வகையில் ஈஸா நபி (அலை)

அவர்களை உள்ளபடி உண்மையான நடுநிலையுடன் ஏற்றிருப்பவர்கள் அஹ்மதி முஸ்லிம்களே ஆவர்.

அபூ அப்தில்லாஹ் ஈஸா (அலை) மீண்டும் பூமிக்கு வந்து வாழ்ந்து மரணிப்பார் என்ற கருத்தைக் கூறுகிறார். ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தனது நூலில் 7-8 ஆகிய பக்கங்களில் எழுதியுள்ள ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களின் அறைகூவலுக்கு அபூ அப்தில்லாஹ் வழக்கம் போல் தமது நூலில் பதில் தரவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அறைகூவலை மீண்டும் எழுதுகிறேன்.

முஸ்லிம்களில் உள்ள எல்லாப் பிரிவுகளின் ஹதீஸ் தொகுப்புகளையும் ஒன்றுசேர்த்துப் பார்த்தாலும், ஸஹீஹானது போகட்டும். பலவீனமான ஒரு ஹதீஸில் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பூத உடலுடன் வானத்திற்கு ஏறிச் சென்றுள்ளார்; மேலும் ஒரு காலத்தில் பூமியின் பக்கம் திரும்பி வருவார் என்று எழுதப்பட்டுள்ளதை காண முடியாது. எவராவது அப்படியொரு ஹதீஸை காட்டித் தந்தால் அவருக்கு ரூபாய் 20,000/- பரிசாகக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அது மட்டுமல்லாமல் தவ்பா செய்வதற்கும் எங்களுடைய எல்லா நூல்களையும் சுட்டெரிப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

(கிதாபுல் பரிய்யா, பக்கம் 207-208)

இந்த அறைகூவலுக்கு அபூ அப்தில்லாஹ் எந்த பதிலும் தரவில்லை. எனவே ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் உள்ளார்கள். அவர்கள் மீண்டும் வருவார்கள் என்பது அபூ அப்தில்லாஹ் போன்றோரின் கற்பனையேயொழிய உண்மையல்ல.

## 13. திருக்குர்ஆனின் 5:75, 3:145 வசனங்களுக்கு அபூ அப்தில்லாஹ் தரும் தவறான விளக்கம்

### அபூ அப்தில்லாஹ்வின் ஆதாரம் எண் 3, 4

அபூ அப்தில்லாஹ் தன் நூலில் பக்கம் 22 முதல் 25 வரை, ஈஸா (அலை) அவர்கள் மரணிக்கவில்லை; இனிமேல் மரணிப்பார் என்பதற்கு ஆதாரமாக 5:75, 3:144 வசனங்களை விளக்கியுள்ளார்.



"முஹம்மது தூதரேயன்றி (வேறு) அல்லர்; இவருக்கு முன்னரும் தூதர்கள் பலர் சென்று விட்டார்கள்; அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டால் நீங்கள் உங்கள் குதிகால்களின் மேல் (புறங்காட்டி) திரும்பி விடுவீர்களா?" (திருக்குர்ஆன் 3:144) மேலும் "மர்யம் உடைய குமாரர் மஸீஹ் இறைத் தூதரேயன்றி (வேறு) அல்லர். இவருக்கு முன்பும் தூதர் பலர் சென்று விட்டார்கள். இவருடைய தாயார் மிக்க உண்மையானவர். இவ்விருவரும் உணவு உண்பவர்களாகவே இருந்தனர்." (திருக்குர்ஆன் 5:75)

**அபூ அப்தில்லாஹ் தனது நூலில் பக்கம் 25ல் கடைசி பத்தியில் *அப்படியாயின் அதன் பொருள் என்ன? 5:75 வசனம் இறங்கும்போது ஈஸா (அலை) மரணமடைந்து விடவில்லை. பின்னர் மரணமெய்துபவர்களாகவே இருக்கிறார்கள். 3:144 வசனம் இறங்கி சுமார் 9 ஆண்டுகளுக்குப் பின்னர் நபி (ஸல்) அவர்களின் வபாத் சம்பவித்தது போல், 5:75 வசனம் இறங்கி, இதுவரை மரணமடையாத நிலையில் இருக்கும் ஈஸா (அலை) அவர்கள், உலகம் அழியும் முன் பூமிக்கு இறங்கி வந்து, வாழ்ந்து திண்ணமாக மடிந்து அடக்கப்படுவார்கள் என்பது உறுதியாகிறது என்று எழுதியுள்ளார்.***

**நம் பதில் :**

மேற்சொன்ன 2 வசனங்களுக்கும் அபூ அப்தில்லாஹ் தவறாகப் பொருள் கூறியுள்ளார். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்த வேளையில் அன்னார் மரணிக்கவில்லை என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், நபித்தோழர்களுள் ஒரு பகுதியினரும் நம்பினர். அச்சமயம் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வந்து திருக்குர்ஆனின் 3:145 வசனத்தை ஓதிக் காட்டினார்கள். இதில் முஹம்மது ஒரு தூதர் என்று கூறி, முஹம்மது நபி இறந்து விட்டார் என்று கூறப்படவில்லை. மாறாக அன்னாருக்கு முன்னர் தோன்றிய தூதர்கள் தான் இறந்து விட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று எடுத்துக் காட்ட, ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் முஹம்மது ஒரு தூதரே. அவருக்கு முன்னர் வந்த தூதர்கள் இறந்துவிட்டனர் என்று கூறி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நிரூபித்தார். அன்னார் இறக்கவில்லை

என்று உறுதியாக நம்பிக்கொண்டு இருந்த உமர் (ரலி) அவர்களும் பிற நபித்தோழர்களும், அன்னார் இறந்து விட்டார்கள் என்றும் ஏற்றுக் கொண்டனர்.

அதாவது, முஹம்மது (ஸல்) அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று அந்த வசனத்தில் கூறப்படவில்லை. மாறாக அன்னார் ஒரு தூதர் என்று தான் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு முன்னர் வந்த தூதர்கள் தான் இறந்து விட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று வெளிப்படையாக கூறாத இந்த வசனம் (3:145) அன்னார் இறந்து விட்டார்கள் என்று பொருள் தந்து நபித்தோழர்களுக்கிடையே ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டு வந்து விட்டது. இந்த அளவுகோலை நாம் 5:75 ஆம் வசனமாகிய ஈஸா (அலை) ஒரு தூதரேயன்றி வேறில்லை. அவர்களுக்கு முன்னர் வந்த தூதர்கள் இறந்து விட்டனர் என்பதற்கும் பொருத்தினால் நமக்கிடையே நிலவும் கருத்து வேறுபாடும் நீங்கும். 3:145 வசனத்திற்கு நபித்தோழர்கள் எல்லாரும் அன்று பொருள் கொண்டது போல், 5:75 வசனத்திற்கும் பொருள் கொண்டால், ஈஸா நபி (அலை) அவர்களும் இறந்து விட்டார் என்பது தெளிவாகும்.

மேலும் 5:76, 3:145 ஆகிய வசனங்களில் அவர்களுக்கு முன்னர் உள்ள எல்லா தூதர்களும் சென்று விட்டனர் என்று பொருள் கொள்ள வேண்டுமேயொழிய அவருக்கு முன்னர் தூதர்கள் பலர் சென்று விட்டார்கள் என்று பொருள் கொள்ளக்கூடாது. அவருக்கு முன்னர் உள்ள எல்லா தூதர்களும் சென்று விட்டனர் என்று பொருள் கொண்டால்தான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கும் மரணம் உண்டு என்பது உறுதியாகும். மாறாக அவருக்கு முன்னர் தூதர்கள் பலர் சென்று விட்டனர் என்று பொருள் கொடுத்தால், முன்னர் உள்ள தூதர்கள் சிலர் செல்லவில்லை என்று பொருள் கொள்ள வேண்டியது வரும். அப்படியாயின் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் ஈஸா (அலை) ஆகியோர் மரணிக்கவும் மரணிக்காமல் இருக்கவும் (அதாவது இனிமேலும் மரணிக்காமல் இருக்கவும்) வாய்ப்பு ஏற்படுகிறது.



இதனைப் புரிந்து கொள்வதற்காக ஓர் உதாரணத்தை இங்கே காட்ட விரும்புகிறேன். முஹம்மது ஒரு தூதரேயன்றி வேறல்லர், அவருக்கு முன்னர் வந்த தூதர்கள் பலர் ஆண்களாக இருந்தனர். இவ்வாறு திருக்குர்ஆனில் இல்லையென்றாலும் இதை ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்னர் சில பெண்களும் தூதர்களாக இருந்தனர் என்று தான் பொருள் கொள்ள முடியும். ஆனால் முஹம்மது ஒரு தூதரேயன்றி வேறல்லர். அவருக்கும் முன்னர் வந்த எல்லா தூதர்களும் ஆண்களாக இருந்தனர் என்று வந்தால் மட்டுமே, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்னர் உள்ள எல்லா தூதர்களும் ஆண்கள்தான் என்று பொருள் கொள்ள முடியும்.

திருக்குர்ஆன் 5:76 வசனத்திற்கு அபூ அப்தில்லாஹ்வின் கற்பனை விளக்கத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஆனால் இவ்வசனத்தில் ஈஸா நபி மரணித்து விட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அதற்கு முன்னால் உள்ள வசனங்கள் அமைந்துள்ளன.

திருக்குர்ஆன் 5:73ல், நிச்சயமாக மர்யமின் மகன் அல்லாஹ் தான் எனக் கூறுகிறவர்கள் திட்டவட்டமாக நிராகரிப்பவர்கள் ஆவர். மேலும் திருக்குர்ஆன் 5:74ல் நிச்சயமாக, அல்லாஹ் மூவருள் ஒருவன் (பிதா, சுதன், பரிசுத்த ஆவி) என்று கூறியவர்கள் நிராகரித்து விட்டனர்.

இவ்விரு வசனங்களிலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் என்றும் அல்லாஹ்வின் மகன் (சுதன்) என்றும் மக்கள் கூறியதை குஃப்ர் என்று அல்லாஹ் கண்டிக்கின்றான்.

மேலும் இவ்விரு வசனங்களையும் தொடர்ந்து 5:76-ல் "மர்யமின் மகன் மஸீஹ் ஒரு தூதரேயன்றி வேறில்லை. நிச்சயமாக அவருக்கு முன்னாலுள்ள தூதர்கள் மரணமடைந்து விட்டனர். அவருடைய தாயார் நேர்மையான பெண்ணாக இருந்தார். அவர்கள் இருவரும் உணவு உண்டு வந்தனர்" என அல்லாஹ் கூறுகின்றான்.

முதலில் 5:73,74 வசனங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கடவுள் என்றும் கடவுள் குமாரன் என்றும் மக்கள் நம்புவதை மறுத்து, அதாவது அவர் கடவுளோ அல்லது கடவுளின் குமாரரோ இல்லை என்று

நிரூபிக்க அதற்கான நான்கு காரணங்களையே 5:76 வசனத்தில் அல்லாஹ் சுட்டிக் காட்டுகின்றான். அதாவது,

1. அவர் ஒரு தூதர் மட்டுமே. எனவே அவர் கடவுள் இல்லை.
2. அவருக்கு முன்னர் வந்த தூதர்களைப் போல் ஈஸாவும் இறந்து விட்டார். இறந்தவர் கடவுளாக இருக்க முடியாது. கடவுளுக்கு இறப்பு இல்லை. எனவே அவர் கடவுள் இல்லை.
3. அவர் மர்யத்தின் மகனாவார். எனவே அவர் கடவுள் குமாரர் அல்ல. மேலும் கடவுளுக்கு பிறப்பு இல்லை. ஒரு பெண்ணுக்கு பிறந்தவர் கடவுளும் இல்லை.
4. ஈஸா (அலை) அவர்களும் அவரின் தாயாரும் உணவு உண்டனர். எனவே அவர் கடவுள் இல்லை. காரணம் கடவுளுக்கு உணவு தேவை இல்லை. உணவின் தேவைக்கு உட்பட்டவர் கடவுளும் இல்லை.

இவ்வாறு 5:76 வசனத்தில் ஈஸா (அலை) கடவுள் இல்லை என்பதை விளக்குவதற்கு 4 கருத்துக்களைக் கூறிய இறைவன் அதில் ஒன்றாக, ஈஸாவின் மரணத்தையும் குறிப்பிடுகின்றான்.

இவ்வாறு ஒவ்வொன்றையும் காரண காரியத்துடன் கூறும் திருக்குர்ஆனுடைய அழகையும் ஆழிய ஞானத்தையும் சிந்தித்துப் பார்க்காமல் முல்லாக்களைப் பின்பற்றி வெறும் கற்பனை கிஸ்ஸாக்களை ஈஸா நபியின் பெயரில் அவிழ்த்து விட்டுள்ளார் அபூ அப்தில்லாஹ். பரிதாபம்!

5:76 வசனத்தில் கூறப்பட்டுள்ள நான்கு கருத்துகளில் இரண்டாவது கருத்தாகிய, எல்லா தூதர்களையும் போல ஈஸாவும் மரணித்து விட்டார் என்று தெளிவாகக் கூறியிருந்தும், அபூ அப்தில்லாஹ் அவர்கள் இனிமேல் தான் ஈஸா நபி (அலை) மரணிப்பார் என்று எழுதியிருப்பது மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும்.

திருக்குர்ஆன் அருளப்பட்ட காலத்தில் நிலவி வந்த இதுபோன்ற தவறான கருத்துகளை திருக்குர்ஆன் மறுத்து உண்மையை நிலைநாட்டி உள்ளது. கிறித்தவர்கள் மர்யத்தின் மகனான ஈஸா (அலை) அவர்களை



கடவுள் என்றும் கடவுள் குமாரன் என்றும் கூறி வந்தனர். இதனை மேற்சொன்ன திருக்குர்ஆன் வசனம் மறுக்கிறது. ஈஸா (அலை) இனிமேல் தான் மரணிப்பார் என்றால், அவர் கடவுள் இல்லை என்ற வாதம் எடுபடாது. ஈசா நபி (அலை) மரணித்த பிறகே அந்த வாதம் முழுமையாகும். தவ்ஹீதுவாதி என்று தன்னைக் கூறிக் கொள்ளும் அபூ அப்தில்லாஹ் தவ்ஹீதை வலியுறுத்தும் இந்த இறைவாக்கை மறுக்கின்றார்.

திருக்குர்ஆன் தோன்றும் போது ஏறக்குறைய 600 ஆண்டுகளும், இன்று ஏறக்குறைய 2000 ஆண்டுகளும் ஆகிவிட்டது. ஒரு மனித தூதர் 2000 ஆண்டுகளாக இன்னும் உயிரோடு இருக்கிறார் என்றால் அவர் கடவுள்தான். ஏனென்றால் “நபியே உமக்கு முன்னர் எந்த மனிதனுக்கும் மிக நீண்ட ஆயுளைக் கொடுக்கவில்லை. நீர் இறந்து அவர்கள் உயிரோடு இருக்கவா” (21:35) என்ற வசனத்தின்படி எந்த மனிதருக்கும் நீண்ட ஆயுள் இல்லை என்பதும் ஈஸா (அலை) ஒரு மனிதர். எனவே அவரும் நபி (ஸல்) காலத்தில் உயிரோடு இல்லை என்பதும் தெளிவாகிறது.

**அபூ அப்தில்லாஹ் தனது நூலில் 24 வது பக்கத்தில்** ***5:76 இறை வசனம் மூலம் ஈஸா (அலை) அவர்களின் மரணம் குறித்து அன்றும் மக்களிடையே சந்தேகம் நிலவியது. ஈஸா (அலை) அவர்கள் மரணிக்காமல் தூல உடலுடன் அல்லாஹ்வின் அளவில் உயர்த்தப்பட்டுள்ளதால் அவர்கள் மரணமற்றவரா? மரணமற்றவராயின் அல்லாஹ்வுக்கு இணையாகுமே என காதியானிகள் இன்று கூறுவது போலவே அன்றும் சிலர் வினவி இருக்கலாம் என்று எழுதியுள்ளார். (பக்கம் 24). மேலும் (3:144) இந்த இறைவசனம் இறங்கியவுடன் குறைஷி குஃப்பார்கள், இன்று காதியானிகள் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று 5:75 வசனத்திற்கு பொருள் கொள்வது போல 3:144 வசனத்திற்கு பொருள் கொண்டு முஹம்மது (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கவே, அவர்கள் உஹது யுத்தக்களத்தில் மாண்டு விட்டார்கள் என்ற வதந்தியைப் பரப்பினார்கள். ஆனால் பின்னர் குறைஷிக் காஃபிர்களும் தெள்ளத் தெளிவாக 3:144 வசனத்திற்கு பொருள் கொண்டு முஹம்மது (ஸல்) அவர்கள் இறந்து விடவில்லை. இனிதான் இறப்பார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.... (பக்கம் 25) மேலும் 5:75 வசனம் இறங்கி***

*இதுவரை மரணமடையாத நிலையிலிருக்கும் ஈஸா (அலை) அவர்கள் உலகம் அழியும் முன் பூமிக்கு இறங்கி வந்து வாழ்ந்து திண்ணமாக மடிந்து அடக்கப்படுவார்கள் என்பது உறுதியாகிறது. அதன் பின்னரும் ஈஸா (அலை) அவர்கள் மீது கொண்ட பாசம், பற்று காரணமாக தம் நிலைமாறி மக்கள் ஈஸா (அலை) அவர்கள் மரிக்கவில்லை என்றும், முன்பு போல் திரும்பவும் வருவார்கள் என்றும் கூறத் தலைப்படுவார்கள். அத்தருணத்தில் இந்த 5:75 வசனம் ஓதிக்காட்டப்படும்; ஈஸா (அலை) அவர்களின் மரணம் உறுதி செய்யப்படும். பக்கம் (25, 26)*

**நம் பதில் :**

கடந்தகால, எதிர்கால ஞானம் அபூ அப்தில்லாஹ்வுக்கு எப்படி கிடைத்தது? மேலே சொல்லப்பட்ட கற்பனை நயம் செறிந்த கதைகளுக்கு ஹதீது சான்றுகள் இருப்பின் தருமாறு அபூ அப்தில்லாஹ்விடம் வேண்டுகிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சொல்லாத ஒன்றை இட்டுக்கட்டிச் சொல்வது வழிகேடேயன்றி வேறில்லை.

**திருக்குர்ஆன் 3:145 வசனம் பற்றிய விளக்கம்:**

முஹம்மது தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன் தோன்றிய எல்லாத் தூதர்களும் மரணமடைந்து விட்டனர். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களா? (3:145)

முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய எல்லா தூதர்களும் மரணித்திருந்தால் மட்டுமே இந்த வசனத்தில் இவ்வாறு கூற முடியும். அவ்வாறு அனைவரும் மரணித்திருந்தால் தான் முஹம்மது (ஸல்) அவர்களின் மரணமும் உறுதி என்று பொருள் கொள்ள முடியும். மேலும் இவ்வசனத்தில் வரும் அவர் மரணித்து விட்டாலோ கொல்லப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களா என்ற பகுதி அன்னார் போரில் கொல்லப்பட்டு விட்டார் என்ற வதந்தி பரவியதன் காரணமாக பலர் நிலைகுலைந்து மனம் தடுமாறி விட்டனர் என்பதையும், திரும்பிச் செல்லத் தொடங்கினர் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறக்கமாட்டார்கள் என்று எண்ணியிருந்தனர்



என்பதனையும் தெளிவாக்குகிறது. எனவே எல்லாம் அறிந்த அல்லாஹ் திருக்குர்ஆன் 3:145 வசனத்தை இறக்கினான்.

இந்த வசனத்தின் மூலம் முஹம்மது ஒரு மனிதர் ஆவார். அவர் இறக்காமல் இருக்க கடவுள் அல்லர், முஹம்மதுக்கு முன்னர் தோன்றிய எல்லா தூதர்களும் இறந்து விட்டனர். அவர்களுள் யாராவது ஒருவர் இறக்காமல் இன்று உயிரோடு இருந்தால்தானே இவரும் இறக்காமல் இருக்க முடியும். முஹம்மதுக்கு முன்னர் வந்த எல்லா தூதர்களும் இறந்தது போல் இவரும் இறப்பார் என்ற கருத்தை தெரிவிக்கிறது. இவ்வாறு இந்த வசனம் ஈஸா நபி (அலை) அவர்களின் மரணத்தை உறுதி செய்து விடுகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வசனம் இறங்கி 9 வருடங்களுக்குப் பின் மரணம் அடைகிறார்கள். அப்போதும் அன்னார் மரணிக்கவில்லை என்று சிலர் கருதினர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை என்றும் அன்னார் மூஸா (அலை) அவர்கள் 40 நாள்கள் தமது சமுதாயத்தைப் பிரிந்து இறைவனைக் காண்பதற்குச் சென்றதைப் போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் தற்காலிகமாக நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள். மீண்டும் வந்து, அன்னார் இறந்துவிட்டதாகக் கூறிய முனாஃபிக்குகளைத் தண்டிப்பார் என்றும் கூறிக் கொண்டேயிருந்தார்கள்.

இதிலிருந்து நபித்தோழர்கள் மத்தியில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறக்காமல் இறைவன் அளவில் உயர்த்தப்பட்டார்கள் என்ற தவறான நம்பிக்கை இருக்கவில்லை என்று தெளிவாகிறது. அப்படி இருந்திருந்தால் அவர்கள் ஈஸா (அலை) அவர்களைப் பற்றிதான் கூறியிருப்பார்கள். அவ்வாறு ஈஸா (அலை) அவர்களைப் பற்றி கூறாமல் மூஸா (அலை) அவர்களின் சம்பவத்தைக் கூறி இருப்பதனால் நபித்தோழர்கள் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற நம்பிக்கையில் தான் இருந்தார்கள் என்று உறுதியாகிறது.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்தைப் பார்த்து முத்தமிட்டு 3:145 வசனத்தை ஓதினார்கள். இங்கே ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், முஹம்மது ஒரு

தூதரேயன்றி வேறல்லர். அவருக்கு முன்னர் தோன்றிய எல்லா தூதர்களும் மரணித்து விட்டனர் என்ற வசனத்தை ஓதி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணித்துவிட்டார்கள் என்பதை உறுதி செய்தார்கள்.

மேலும் யார் முஹம்மதை வணங்கிக் கொண்டிருந்தாரோ அவர்கள் அறிந்து கொள்ளட்டும்; அந்த முஹம்மது இறந்துவிட்டார் என்றும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.(புகாரி, எண்.4454) இதிலிருந்து இறந்துபோன முஹம்மது (ஸல்) அவர்களை இறக்கவில்லை என்று கருதினாலோ, அல்லது அபூ அப்தில்லாஹ்வின் கற்பனையைப் போன்று இனிமேல்தான் இறப்பார் என்று கருதினாலோ அது முஹம்மது (ஸல்) அவர்களை வணங்குவதற்கு ஒப்பாகும் என்றுதான் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதன்படி ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்ட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறக்கவில்லை; ஆயினும் இறப்பவர்களே என்று கூறுவதன் மூலம் அபூ அப்தில்லாஹ் ஈஸா நபி (அலை) அவர்களை வணங்கிக் கொண்டுதான் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம்.

## 14. எந்த தூதருக்கும் உணவு உண்ணாத உடலை அல்லாஹ் கொடுக்கவில்லை

**மேலும் அபூ அப்தில்லாஹ் தனது நூலில் பக்கம் 35 -ல் இவ்வாறு எழுதுகிறார்.**

*இங்கு சிந்திக்க வேண்டிய விசயம் என்னவென்றால் ஈஸா நபி மரணிக்காது உயிருடன் இருக்கிறார் என்பது உண்மையானால் அவரைப் பற்றி அவர் உணவருந்திக் கொண்டிருந்தார் என இறந்த காலத்தில் ஏன் கூறப்பட்டிருகிறது?*

***இதை ஒரு பெரிய ஆதாரமாகக் காட்டி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபிக்க முயன்றுள்ள காதியானிகளின் அறிவின் ஆழத்தைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது உலகிலேயே 300 ஆண்டுகளுக்கு மேல் குகைவாசிகள் தூக்கத்தில் இருந்தார்களே, அவர்கள் உணவு அருந்திக் கொண்டா இருந்தார்கள்? 2:259 வசனத்தின் படி 100 வருடங்கள் உலகிலேயே தூங்கிக்***



***கொண்டிருந்தவர் உணவு அருந்திக் கொண்டா இருந்தார்? இந்த நிலையில் இந்த உலகிலேயே இப்போது இல்லாத ஈஸா (அலை) அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள் என குறிப்பிட்டுள்ளதில் என்ன புதுமை இருக்கிறது? இப்போதைய நிலையில் அவர்கள் இவ்வுலக உணவுகளை அருந்திக் கொண்டு இருக்கவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் மீண்டும் இவ்வுலகிற்கு வரும்போது அவர்கள் உணவு அருந்துவார்கள் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்? இப்படியெல்லாம் திசை திருப்பி மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கனவு காண்கின்றனர் காதியானிகள்.***

**நம் பதில்:**

ஈஸா (அலை) உணவு உண்டு வந்தனர் என இறந்த காலத்தில் ஏன் கூறப்பட்டிருக்கிறது? என்று மட்டும் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹ்) அவர்கள் எழுதவில்லை. (பக்கம் 41ல் காண்க) மாறாக, அவர்கள் இருவரும் உணவு உண்டு வந்தனர் என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. இவ்விசயத்தில் அவரையும் அவரது தாயையும் வேறுபடுத்தி அல்லவா கூறியிருக்க வேண்டும்?அதாவது மர்யம் (அலை) அவர்கள் உணவு அருந்தி வந்தார் என்றும் ஈஸா நபி (அலை) உணவு அருந்திக் கொண்டிருக்கிறார் என்றும் அல்லவா கூறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு கூறப்படவில்லை அவர்கள் இருவரும் உணவு அருந்தியதை கடந்த கால நிகழ்ச்சியாக இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று அவர்கள் எழுதியுள்ளார்கள். அபூ அப்தில்லாஹ் இந்த விசயத்தை தம் பதிலில் மூடி மறைத்துள்ளார்.

எல்லாம் அறிந்த அல்லாஹ் மர்யம் (அலை) அவர்கள் இறந்து விட்டதைப் போன்று அவரது மகன் ஈஸா (அலை) அவர்களும் இறந்துவிட்டார் என்பதை உணர்த்தவே அவ்விருவரையும் சேர்த்துக் குறிப்பிட்டு, அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தனர் என்று கடந்த காலத்தில் கூறியுள்ளான். இதனை அபூ அப்தில்லாஹ் சிந்திக்கட்டும்.

திருக்குர்ஆன் 5:76, 3:145 ஆகிய இரு வசனங்களும் ஒன்று போல் உள்ளன என்பதைக் காரணம் காட்டி, ஈஸா (அலை) அவர்களை

இன்னும் ஆயிரமோ பல ஆயிரம் ஆண்டுகளோ கழித்து இறப்பார் என்று தவறாக பொருள் கொள்கிறார் அபூ அப்தில்லாஹ். மேலே சொல்லப்பட்ட இரு வசனங்களும் காலம், இடம், சூழ்நிலை, காரணம் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தும் ஒன்றுபோல் இருப்பதை வைத்து தவறாகப் பொருள் கொள்ளத் தெரிந்த அபூ அப்தில்லாஹ்வுக்கு, ஒரே வசனத்தில் இருவரைப் பற்றி அதாவது ஈஸா (அலை) அவர்களையும் அவரது தாயாரையும் சேர்த்து அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தனர் என்பதை மட்டும் எழுதி அவரது தாயாரை அபூ அப்தில்லாஹ் கண்டு கொள்ளவில்லை என்பதும், காணத் தவறிவிட்டார் என்பதும் எதைக் காட்டுகிறது? எப்படியோ திசை திருப்பி மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கனவு காண்கிறார் அபூ அப்தில்லாஹ் என்பது தெளிவாகிறது. இதை ஒரு பெரிய ஆதாரமாகக் காட்டியிருப்பதாக தான் கிண்டல் செய்கிறார். அவர் அல்லாஹ் காட்டிய ஆதாரத்தைத் தான் கிண்டல் செய்கிறார். மேலும் அவ்வசனத்தில் ஈஸா (அலை) அவர்களையும் தாயாரையும் இணைத்து அவர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தனர் என்று அல்லாஹ் வீணாகவா கூறியிருக்கின்றான்?

திருக்குர்ஆன் 21:9-ல் நாம் அத்தூதர்களுக்கு உணவு உண்ணாத உடலை வழங்கவில்லை. அவர்கள் மிக நீண்ட காலம் வாழ்ந்ததும் இல்லை என்றும், வசனம் 25:21 ல், உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்கள் எல்லோரும் உணவு உண்டனர். கடை வீதிகளில் நடமாடினர் என்றும், 21:8ல் உமக்கு முன்னர் ஆண்களே நபிமார்களாக அனுப்பப்பட்டனர் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். மேலே கூறப்பட்ட வசனங்களில் நபிமார்களுக்குரிய இலக்கணத்தை ஒரு மிகப்பெரும் ஆதாரமாக அல்லாஹ் காட்டியுள்ளான். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட தூதர்கள் எல்லோரும் மனிதர்கள் என்றும், அவர்கள் உணவு உண்டனர் என்றும், கடைவீதிகளில் நடமாடினர் என்றும், அவர்கள் மிக நீண்ட காலம் வாழ்ந்ததில்லை என்றும் மிகத் தெளிவாக, வெளிப்படையாகக் கூறியுள்ளான். இதில் உணவு உண்டனர். கடைவீதியில் நடமாடினர். நீண்ட காலம் வாழ்ந்ததில்லை என்றெல்லாம் இறந்த காலத்தில் கூறப்பட்டிருப்பதால் எல்லா தூதர்களும் இறந்துவிட்டனர் என்று தெரிந்து கொள்வது போல ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் அவர்கள் தாயாரையும் சேர்த்து ஒரே வசனத்தில் அவர்கள் உணவு



உண்டனர் என்று இறந்த காலத்தில் கூறியதன் மூலம் ஏனைய எல்லா தூதர்களைப் போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் இறந்து விட்டார் என்று தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

அபூ அப்தில்லாஹ்வின் கருத்தின்படி மேற்சொன்ன 21:9, 21:8 25:21 போன்ற வசனங்கள் அனைத்தும் தேவையில்லையே! இதே அபூ அப்தில்லாஹ் பிற நபிமார்கள் காலத்தில் பிறந்திருந்தால் உணவு உண்பவர் கடை வீதியில் நடக்கிறவர் ஒரு நபியா? என்று கேட்டு நபியை மறுத்திருப்பார்.

அபூ அப்தில்லாஹ் ஒரு முஸ்லிமாகப் பிறக்காதிருந்தால், அல்லாஹ் 21:8, 25:21 வசனங்களில் நபிமார்கள் உணவு உண்ணாமல் வாழவில்லை; அவர்கள் எல்லாரும் உணவு உண்டனர் என்று கூறியிருப்பதை பெரிய ஆதாரமாக காட்டியிருப்பதை, கேலி கிண்டல் செய்து அல்லாஹ்வின் அறிவின் ஆழத்தை விமர்சனம் செய்திருப்பார். ஈசப்னு மர்யம் இன்று கடை வீதியில் நடக்கவில்லை; உணவு உண்ணவில்லை என்பதே அவரது இறப்பைக் காட்டுகிறது.

## இப்னு மர்யம் பற்றி அபூ அப்தில்லாஹ்வின் தவறான கருத்து (பக்கம் 50,52)

**அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

***1. திருக்குர்ஆனில் குறிப்பிடப்படும் எந்த நபியும் அவர் இன்னாரின் மகன் என்று குன்யத்துப் பெயரால் அல்லாஹ் அழைக்கவில்லை. ஈஸா (அலை) அவர்களை மட்டும் இப்னு மர்யம் என்று குன்யத்துப் பெயரால் இறைவன் அழைப்பதன் மர்மம் என்ன? சுமார் 2000 வருடங்களுக்கு முன் அல்லாஹ் அளவில் உயர்த்தப்பட்ட அதே ஈஸப்னு மர்யம் மீண்டும் உலகில் இறங்குவார் என்பதை மக்களுக்கு சந்தேகமற அறிவிக்கவே தனது திருமையில் அவர்களை பற்றி குறிப்பிடும் இடங்களில் எல்லாம் ஈஸப்னு மர்யம் என்றே குறிப்பிடுகின்றான்.***

***2. உலக நடைமுறையில்..... சொத்துக்கள் பதியப்படும் பொழுதும் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் போதும் இன்னாரின் மகன் என்று குறிப்பிடப்படுவதைப் பார்க்கிறோம். அதற்கு அடிப்படைக் காரணம் ஆள்மாறாட்டம்***

*ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்கே ஆகும். அதாவது இன்னாரின் மகன் இன்னார் என்று குறிப்பிட்டால் அது குறிப்பாக ஒரே ஒரு நபரைக் குறிக்கும் சொல்லாகும். இதன் காரணமாகவே முஹம்மது என்ற பெயரை மற்றவர்கள் வைத்துக் கொள்ள அனுமதித்த நபி (ஸல்) அவர்கள் தனது குன்யத்துப் பெயரான அபுல் காஸிம் என்ற பெயரை மற்றவர்களுக்கு வைப்பதை விட்டும் தடுத்துள்ளார்கள். (ஆதாரம் புகாரி)*

*3. உலக வரலாற்றில் ஈஸா (அலை) அவர்களைத் தவிர வேறு யாரும் தந்தையின்றி தாய்க்கு மட்டும் பிறந்தவர் அல்லர். எனவே ஈஸப்னு மர்யம் என்று குறிப்பிடும் போது அவர்கள் அல்லாத வேறு யாரையும் குறிக்காது.*

*காதியானிகள் சொல்வது போல் ஈஸப்னு மர்யத்தைப் போன்ற குணாதிசயங்களை உடைய இந்த உம்மத்தில் தோன்றும் ஒருவர் என்று ஒருபோதும் சொல்ல முடியாது. காதியானிகள் நபியாக ஒப்புக் கொண்டிருக்கும் பொய் நபி மிர்ஸா குலாமின் தாயார் பெயர் மர்யம் என்று இருந்தாலும் கூட இவர் தந்தையின்றி பிறக்காத காரணத்தால் மிர்ஸா குலாமை இப்னு மர்யம் என்று ஒருபோதும் சொல்ல முடியாது.*

*4. ஹாதிம் தாய், அப்லாத்தூன், எலியா என்னும் பெயர்களில் இன்னார் மகன் இன்னார் என்ற குறிப்பு இல்லை. ஆதலால் இப்பெயர்களை இன்னொருவருக்கு உவமையாகச் சுட்டிக்காட்டிக் குறிப்பிடுவதால் தவறில்லை. ஆனால் இப்னு மர்யம் என்று ஒருவரை உவமையாக குறிப்பிடக் கூடாது. காரணம் இன்னாரின் மகன் இன்னார் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

**நம் பதில் :**

இப்னு மர்யம் குறித்து அல்லாஹ் கூறும் போது இஸ்முஹூல் மஸீஹ் ஈசப்னு மர்யம். அவரின் பெயர் மஸீஹ் ஈஸப்னு மர்யம் என்பதாகும் என்று 3:46ல் கூறுகிறான். எனவே அல்லாஹ் அவருக்கு வைத்த முழுப் பெயரே மஸீஹ் ஈசப்னு மர்யம் என்பதாகும். அதன் ஒரு பகுதியை பிரித்து குன்யத்துப் பெயர் எனக் கூறி கற்பனைக் கதை புனையும் இவரை என்ன சொல்வது?



ஈஸப்னு மர்யம் என்று குர்ஆனில் ஒரு சொல் வருகிறதென்றால், இறைவன் ஏன் இன்னாரின் மகன் இன்னார் என்று கூறினான் என்பதற்குரிய விடை குர்ஆனிலேயே இருக்கும் அல்லது ஹதீஸில் கிடைக்கும். அதைப் பற்றி ஆராயாமல் அபூ அப்தில்லாஹ் அச்சொல்லுக்கு தவறான ஒரு கருத்தைத் தந்துள்ளார். குர்ஆனில் எந்த நபியையும் அவர் இன்னாரின் மகன் என்று குன்யத்துப் பெயரால் குறிப்பிடாமல் ஈஸா (அலை) அவர்களை மட்டும் குறிப்பிடக் காரணம் என்ன? கிறித்தவர்கள் குர்ஆன் இறங்கும் காலகட்டத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கடவுள் என்றும், கடவுளின் குமாரன் என்றும் நம்பினர். எனவே அவர்களுடைய நம்பிக்கையை மறுக்கவே அவரை மர்யத்தின் மகன் ஈஸா என்று கூறுகிறது.

இப்னு மர்யம் என்னும் சொல் திருக்குர்ஆனில் 23 இடங்களில் வருகிறது.

1) 2:88 2) 2:257 3) 3:46 4) 4:158 5) 4:172
6,7) 5:18 இருமுறை 8) 5:47 9) 5:72 10) 5:76
11) 5:79 12) 5:111 13) 5:113 14) 5:115 15) 5:117
16) 9:31 17) 19:35 18) 23:50 19) 33:8 20) 43:58
21) 57:28 22) 61:7 23) 61:15

இவ்வாறு 23 முறை அல்லாஹ், ஈஸாவை மனித குமாரன், மர்யத்தின் குமாரன் என்று கூறுகிறான்.

குன்யத்துப் பெயர் தொடர்பான நபிமொழியைக் காண்போம். அபூ அப்தில்லாஹ்வே அதற்கு எடுத்துக்காட்டும் தந்துள்ளதால் அதனை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

முஹம்மது என்ற பெயரை பிள்ளைகளுக்கு சூட்டச் சொல்லிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபுல் காசிம் என்ற குன்யத்துப் பெயரை பிறருக்குச் சூட்டுவதைத் தடுத்திருக்கிறார்கள் என்றாலும் அதற்கு அவர் கூறும் காரணம் ஆள்மாறாட்டம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதாகும். குன்யத்துப் பெயர் என்றால் அது ஒரே ஒரு ஆளை மட்டுமே குறிக்கும் என்று அபூ அப்தில்லாஹ் கூறுகிறார். அப்துல்லாஹ் என்பவருக்கு முஹம்மது என்ற ஒரு மகன் இருந்தால் அப்தில்லாஹ்வின் மகன் முஹம்மது அதாவது முஹம்மது இப்னு அப்துல்லாஹ் என்று கூறினால் ஆள் மாறாட்டம்

ஏற்படாதா? எனவே அபூ அப்தில்லாஹ் காட்டும் ஆதாரம் அர்த்தமற்றதாகும். இது பற்றிய ஹதீஸை காண்போம்.

என் பெயரை நீங்கள் சூட்டிக் கொள்ளுங்கள். ஆனால் (அபுல் காஸிம் என்ற) என் குறிப்புப் பெயரைச் சூட்டிக் கொள்ளாதீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, எண்.3537)

இதிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காஸிமின் தந்தையாக இருப்பதனால் அபுல் காஸிம் என்ற பெயரைச் சூட்டக் கூடாது என்ற பொருளில் கூறவில்லை. மாறாக காஸிம் அதாவது பங்கீடு செய்பவன் என்று தன்னை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளதால் அந்தப் பதவிப் பெயர் தனக்கு மட்டும் உரியதால் அதனை பிறருக்கு வைக்க வேண்டாம் என்ற கருத்தில்தான் கூறியுள்ளார்கள். அபூ அப்தில்லாஹ் ஹதீஸைக் குறிப்பிடும் போது அதனை அரைகுறையாகக் குறிப்பிடுகிறார். அதிலேயே காணப்படும் காரணத்தை மறைக்கிறார்.

உலக வரலாற்றில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைத் தவிர வேறு யாரும் தந்தையின்றி தாயாருக்கு மட்டும் பிறந்தவர் அல்லர் என்று கூறும் தகுதியும் உரிமையும் ஞானமும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. அபூ அப்தில்லாஹ்வுக்கோ அல்லது வேறு எவருக்கும் அந்த தகுதி கிடையாது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மட்டும் தான் அவ்வாறு பிறந்திருக்கிறார்கள். வேறு எவரும் அவ்வாறு பிறக்கவில்லை. இனிமேல் அவ்வாறு பிறக்கமாட்டார்கள் என்று குர்ஆனில் எங்கும் கூறப்படவில்லை. எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாமல் வேறு ஒருவர் மர்யம் என்னும் பெண்ணுக்கு பிறந்து, ஈஸா என்று பெயர் பெற்றிருந்தால் அவரை ஈஸப்னு மர்யம் என்று கூறும் உரிமை எல்லாருக்கும் உண்டு.

மேலும் ஒருவரை மற்றவருக்கு உவமையாக ஒப்பிட்டுக் கூறும் போது இருவருடைய பெற்றோர் பெயரும் ஒன்றுபோல் இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. இவ்விருவருக்கும் இடையில் எதனைப் பற்றி ஒப்பிட்டுக் கூறுகிறோமோ அது அவ்விருவருக்கும் இடையில் ஒன்றுபோல் இருந்தால் ஒப்பிட்டுக் கூறலாம்.

எடுத்துக்காட்டாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைஇப்னு அபீகப்சா அதாவது அபீகப்சாவின் மகன் என்று அபூ ஸுஃப்யான் (ரலி)



அழைத்தார்கள். (புகாரி) நபித்தோழர் அபூ ஸுஃப்யான் (ரலி) அவர்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தந்தை, தாய் பெயர் நன்றாகத் தெரியும். அபிகப்சா என்பவர் நபி (ஸல்) அவர்களின் தந்தை இல்லை என்பதும் தெரியும். இவ்வாறு இருந்தும் நபி (ஸல்) அவர்களை இப்னு அபீகப்சா என்று அபூஸுஃப்யான் (ரலி) அழைத்தார்கள்.

இதே விதத்தில் தான், ஈஸா (அலை) அல்லாத வேறு ஒருவர் இப்னு மர்யம் என்று ஹதீஸில் அழைக்கப்படுகிறார். திருக்குர்ஆனில் 43:58ல், மர்யத்தின் மகன் ஒரு உவமையாக எடுத்துரைக்கப்படும் போது உமது சமுதாயத்தினர் அதனைக் குறித்து கூச்சலிடத் தொடங்குகின்றனர். இவ்வசனத்தில் இப்னு மர்யத்தை உவமையாக எடுத்துக் கூறப்படும் என்று அல்லாஹ்வே கூறியுள்ளான்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் இப்னு மர்யமாக வந்து விட்டார்கள் என்று கூறும் போது அபூ அப்தில்லாஹ் போன்றவர்கள் போடுகின்ற கூச்சலைத்தான் அல்லாஹ் அதில் கூறியுள்ளான். எனவே இன்னாரின் மகன் இன்னார் என்று பெயர்களை உவமையாகக் கூறக்கூடாது என்ற அபூஅப்தில்லாஹ்வின் கூற்று அர்த்தமற்றதாகி விடுகிறது.

நபிமொழிகளில் இன்னார் மகன் இன்னார் என்ற குன்யத்துப் பெயர்கள் ஒரு ஆளை மட்டும் குறிப்பிடுவதற்கோ ஆள்மாறாட்டம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்கோ தந்தையின்றி தாய்க்கு மட்டும் பிறந்தவர் என்பதை மட்டும் குறிக்கவோ வரவில்லை. உதாரணமாக, ஹுதைபிய்யா உடன்படிக்கையில் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது என்று எதிரிகள் எழுதச் சொன்னது முஹம்மது ரஸூலுல்லாஹ் என்பதை மறுப்பதற்காகத் தானேயொழிய ஆள் மாறாட்டம் ஏற்பட்டு விடும் என்பதற்கல்ல. இதே விதத்தில் தான் ஈஸா கடவுளின் மகன் இல்லை. அவர் மர்யத்தின் மகன் ஆவார் என்று கிறித்தவ கடவுள் கொள்கையை மறுக்கவே இப்னு மர்யம் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் இன்னொரு கருத்தையும் விளக்க விரும்புகிறேன் அபூ அப்தில்லாஹ் தமது நூலின் பக்கம் 12ல் 4:157 வசனத்தில், அல்லாஹ் ஷுப்பிஹ லஹும் (அவர்களுக்கு ஆள் மாறாட்டம் செய்யப்பட்டது) என்று

குறிப்பிடுகிறான். (காதியானிகளோ அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்டது என பொருள் கொள்கின்றனர்) என்று எழுதியுள்ளார். அதாவது சிலுவையில் அறையப்பட்டவர் ஈஸா (அலை) இல்லை என்றும் யாரோ ஒரு அப்பாவி இரையாக்கப்பட்டான் என்றும் அபூ அப்தில்லாஹ் நம்புகிறார்.

இதற்கு நபிமொழி, வரலாற்றுச் சான்றுகள் எதுவும் தரவில்லை. இது ஒருபுறம் இருக்கட்டும். குன்யத்துப் பெயர் பற்றி அபூ அப்தில்லாஹ் மேலே எழுதியிருப்பதில் ஆள்மாறாட்டம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்குத் தான் அல்லாஹ் ஈசப்னு மர்யம் என்று – இன்னாரின் மகன் இன்னார் என்று பெயர் வைத்துள்ளான் என்று பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார். அதாவது ஆள் மாறாட்டம் ஏற்படுவதை ஒரு சொல்லின் மூலம் அல்லாஹ் தடுத்துவிட்டான் என்கிறார் அவர்.

அல்லாஹ் ஆள்மாறாட்டம் ஏற்படக் கூடாது என்று கருதியே ஈசப்னு மர்யம் என்று குன்யத்துப் பெயர் வைத்தான் என்று நம்பும் அபூ அப்தில்லாஹ், அல்லாஹ் தன் செயல் மூலம் ஆள்மாறாட்டம் செய்வான் என்றும் அதனை ஷுப்பிஹ லஹும் (அவர்களுக்கு ஆள் மாறாட்டம்) செய்யப்பட்டது என்ற சொல் விளக்குகிறது என்றும் நம்புவது முரண்பாடாக இல்லையா?

ஆள்மாறாட்டம் என்பது உலகில் எத்துணை பெரிய குற்றம், அவமானம், தலைகுனிவு. அச்செயலை அல்லாஹ் செய்துள்ளான் என்று நம்பும் அபூ அப்தில்லாக்களை அல்லாஹ் தான் மன்னிக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு இதனை விட அவமானமும், களங்கமும், கேவலமும் (நவூதுபில்லாஹ்) இருக்க முடியுமா?

அச்சொலுக்கு அவருடைய நிலைமை அவர்களுக்குச் சந்தேகத்திற்கு உரியதாய் ஆக்கப்பட்டுவிட்டது... என்று மவ்தூதியும்.... அவர்கள் சந்தேகத்திற்கு உள்ளாக்கப்பட்டு விட்டனர் என்று அப்துல் ஹமீது பாக்கவியும் நாங்கள் கொண்ட பொருளையே கொண்டுள்ளனர். இதுவே சரியான பொருள் அல்லது “But he was made to appear to them as such” - (Muhammad Ali) என்று பொருள் கொள்ளலாம். எந்த விதத்திலும் சிலுவையில் அறையப்பட்டவர் ஈஸா நபி (அலை) அவர்களைத் தவிர வேறு ஒருவர் இல்லை.



# 15. மர்யத்தின் மகன் உவமையாகக் கூறப்பட்டதற்கு அபூ அப்தில்லாஹ்வின் கூச்சல்

**அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

*ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் வருகை காதியானிகளின் திசை திருப்பும் கலை எனும் தலைப்புகளில் பக்கம் 49-50, 52,53 ஆகிய பக்கங்களில் ஆங்காங்கே அபூ அப்தில்லாஹ் எழுதியிருப்பதாவது,*

*நிச்சயமாக அவர் (ஈஸா இறுதிக்) காலத்திற்குரிய அத்தாட்சி ஆவார். ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகப்பட வேண்டாம். மேலும் என்னையே பின்பற்றுங்கள். இதுவே நேரான வழி (43:61) (பக்கம் 49)*

*இந்த வசனம் அவர்களின் மரணம் உலக அழிவுக்கு சமீபத்தில் இடம்பெறும் என்பதை சுட்டிக் காட்டுகிறது. விளங்குபவர்கள் இஸ்ரவேலர்களுக்காக நபியாக அனுப்பப்பட்ட அதே ஈஸப்னு மர்யம் தான்; வேறு நபர் அல்ல என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். (பக்கம் 50)*

*காதியானிகள் சொல்வது போல் ஈஸப்னு மர்யத்தை போன்ற குணாதிசயங்களுடைய இந்த உம்மத்தில் தோன்றும் ஒருவர் என்று ஒருபோதும் சொல்ல முடியாது. எந்த அளவுக்கு என்றால் காதியானிகள் நபியாக ஒப்புக் கொண்டிருக்கும் பொய் நபி மிர்ஸா குலாமின் தாயின் பெயர் மர்யம் என்றிருந்தாலும் கூட (மிர்ஸா குலாம் தாய் பெயர் சிராக்பி) மிர்ஸா குலாமை இப்னு மர்யம் என்று ஒருபோதும் சொல்ல முடியாது. காரணம், ஈசப்னு மர்யம் தகப்பனற்று பிறந்தது போல் மிர்ஸா குலாம் தகப்பனின்றிப் பிறந்தவர் அல்லர்; மிர்ஸா குலாம் முர்தஸா என்பவருக்கு மகனாக பிறந்தவர். (பக்கம் 52)*

*அவர்கள் (ஈஸா) உலக அழிவுக்கு சமீபத்தில் மீண்டும் உலகில் இறங்கி விட்டால் அதன்பின் அவர்கள் மற்ற நபிமார்களைப் போல் மரணித்து அடக்கம் செய்யப்படுவது புத்திக்கு பொருந்தாத ஒரு வி-யம் அல்ல. காதியானிகள் இறுதியில் வரக்கூடிய ஈஸப்னு மர்யத்தை ஒப்புக் கொள்ளத்தான் செய்கிறார்கள். ஆனால் அந்த ஈஸப்னு மர்யம் இஸ்ரவேலர்களுக்கிடையே தோன்றிய ஈஸப்னு மர்யம் அல்ல. நபி (ஸல்) அவர்களின் உம்மத்தில் தோன்றும் ஒரு*

***இப்னு மர்யம் என்பதே அவர்களின் வாதமாகும். இந்த அவர்களின் வாதம் நகைப்புக்கு இடமானது என்பதை திருக்குர்ஆனையும் ஹதீஸையும் விளங்கியவர்கள் புரிந்து கொள்ளமுடியும்.*** *(பக்கம் 50)*

**நம் பதில் :**

அபூ அப்தில்லாஹ்வின் இந்தக் கூற்றுகளைப் படிக்கின்ற போது அவர் கிறிஸ்தவர் வழி வந்தவரோ என்று ஐயப்பாடு நமக்கு நிச்சயமாக தோன்றும். திருக்குர்ஆனைப் படிக்கின்ற விசயத்தில் அவர் நுனிப்புல் மேய்கிறவர் என்பதும் சொல்லுக்கு சொல் பொருள் கொள்கிறவர் என்பதும் அப்பட்டமாகத் தெரிகிறது. இஸ்ரவேல் இன மக்களுக்காக வந்த அதே ஈஸா நபியே மீண்டும் வருவார். அவருக்கு ஒப்பான வேறொருவர் வருவதென்பது திருக்குர்ஆனுக்கு முரணானது. அவரே உலக அழிவுக்கு முன் மீண்டும் இறங்கி வந்து மரணிப்பார். இதற்கெல்லாம் காரணம் ஈஸா நபி எந்த நபிக்கும் இல்லாத தனிச் சிறப்புகளைக் கொண்டவர் என்றெல்லாம் பத்தாம்பசலித்தனமாக அபூ அப்தில்லாஹ் வாதிக்கிறார்.

ஆனால் திருக்குர்ஆனின் 43:57 ஆம் வசனம் கீழ்வருமாறு காணப்படுகிறது.

மர்யத்தின் மகன் (ஈஸா நபி) உவமையாக எடுத்துரைக்கப்படும் போது உமது சமுதாயத்தினர் அதனைக் குறித்து கூச்சலிடத் தொடங்குகின்றனர்.

இந்த வசனத்தில் ஈஸா நபி உவமையாகக் கூறப்படுவார். அதுவும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்திடம் அவ்வாறு கூறப்படும். அப்போது அவர்கள் அதனை ஏற்காது கூச்சலிடுவார்கள் என மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அபூ அப்தில்லாஹ் இஸ்ரேவலர்களுக்கு வந்த அதே ஈஸா நபி வருவார் என பேதமைத்தனமாக வாதிக்கிறார். இந்நிலையில் நாம் திருக்குர்ஆனுக்கு முரண்பாடாக இருக்கிறோம் என்றும் கூறுகிறார்.

உண்மையில் அவரே திருக்குர்ஆனுக்கு முரண்பாடான கூற்றுகளை கூறுகிறார். திருக்குர்ஆனில் ரஸூல் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.(73:16 காண்க)



இன்னும் இக்கால முஸ்லிம்களை யூத சமுதாயத்திற்கு ஒப்பிட்டு ஹதீஸ்களில் கூறப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையிலேயே ஈஸா நபியை ஒத்த ஒருவர் முஸ்லிம் சமுதாயத்தில் தோன்றியுள்ளார் என நாம் கூறுகிறோம். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் (அலை) அவர்கள் 1891 ஆம் ஆண்டு ஈஸா நபி மரணித்து விட்டார்கள். ஹதீஸில் இப்னு மர்யம் எனக் கூறப்பட்டிருப்பது தம்மைக் குறித்தே எனக் கூறிய போது உலகெங்குமுள்ள ஆலிம்கள் அதனைக் கடுமையாக ஆட்சேபித்தனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காஃபிராகி விட்டார் எனக் கூச்சலிட்டனர். இதன் மூலம் மர்யமின் மகன் உவமையாகக் கூறப்படும் போது ரஸூல் (ஸல்) அவர்களின் உம்மத்தினர் கூச்சலிடுவார்கள் என்ற திருக்குர்ஆன் வாக்கு அப்படியே நிறைவேறியது. அது மட்டுமல்ல ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உண்மையாளர் என்பதற்கும் அது சான்றாக அமைந்துவிட்டது. இப்போது அபூ அப்தில்லாஹ் அதனை ஆட்சேபித்திருப்பதும் இந்தக் கருத்துக்கு வலுவூட்டுகிறது.

ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிட்டுக் கூறுவது திருக்குர்ஆனுக்குப் புதிதன்று. இதே ஈஸா (அலை) அவர்களை ஆதம் (அலை) அவர்களுடன் இறைவனே ஒப்பிட்டுக் கூறுகிறான். (3:60) அதனால் ஈஸா நபி (அலை) தந்தையின்றி பிறந்திருந்தாலும் அபூ அப்தில்லாஹ் நம்புவது போல், தந்தையும் தாயும் இன்றி ஆதம் உருவாகி இருப்பதால் அது பெரிய அற்புதம் அல்ல. மாறாக அதுவும் படைப்பில் ஒரு வகையே என்பது எவராலும் புரிந்து கொள்ள முடியும். எனவே தந்தையின்றி பிறந்ததால் ஈஸா நபியை எவருடனும் ஒப்பிட முடியாது என்று கூறயியலாது. ஏனெனில் அபூ அப்தில்லாஹ் நம்புவது போல் தந்தையும் தாயும் இல்லாத ஆதமுடன் அவரை இறைவனே ஒப்பிடுகின்றான். இவ்வாறே பிற்காலத்தில் முஸ்லிம் சமுதாயம் ஈஸா நபி தோன்றிய காலத்தில் வாழ்ந்த யூத சமுதாயத்தை ஒத்திருக்குமாதலால் முஸ்லிம் சமுதாயத்தில் தோன்றவிருப்பவரை இறைவனே இப்னு மர்யத்திற்கு அதாவது ஈஸா நபிக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளான்.

இதன் அடிப்படையில், ஆனால் நிச்சயமாக அவர் அந்த நேரத்தின் அடையாளமாக இருக்கிறார். எனவே நீங்கள் அது குறித்து ஐயம்

கொள்ளாதீர்கள். மாறாக என்னைப் பின்பற்றுங்கள். இதுவே நேரான வழியாகும். (43:61) என்ற வசனத்தில் இடம் பெற்றுள்ள அவர் என்ற சொல் ஈஸா நபியைக் குறிக்காது. மாறாக அது ஈஸா நபியைப் போன்று தோன்றகின்ற ஒருவரையே குறிக்கும். எனவே ஹதீஸ்களில் இப்னு மர்யம் வருவார். அதாவது ஈஸா நபி வருவார் என குறிப்பிடப்பட்டிருப்பது தன்னைப் பற்றியே என்று வாதித்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களையே அந்த அவர் என்ற சொல் குறிக்கும்.

## 16. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் திரும்பி வரமாட்டார்

ஏதேனும் ஓர் ஊரை நாம் அழித்து விட்டால் அவ்வூரில் வாழ்ந்து வந்தவர்கள் இவ்வுலகுக்குத் திரும்பி வரமாட்டார்கள் என்பது விதிக்கப்பட்டுள்ளது. (21:96)

அவர்களுள் ஒருவருக்கு மரணம் வந்து விட்டால் அவர் மீண்டும் மீண்டும் மன்றாடி இவ்வாறு கூறுவார். என் இறைவா! என்னை திரும்ப அனுப்பி விடு. (23:100)

(இறந்தவர்கள் இறைவனிடம் இறைவா!) நீ எங்களை (உலகுக்கு) திரும்ப அனுப்புவாயாக என்று கூறுவார்கள். (32:13)

மேலே எடுத்துக் காட்டியுள்ள திருக்குர்ஆன் வசனங்களில் இறந்தவர்கள் இறைவன் அளவில் சென்ற பின் இறைவனிடம் தங்களை பூமிக்கு திரும்ப அனுப்பும்படி வேண்டுகின்றனர். இறைவனோ அவர்களை திரும்ப அனுப்பமாட்டேன் என்று கூறுகின்றான்.

பூமியிலிருந்து இறைவனிடம் சென்ற பின், மீண்டும் பூமிக்கு வருவதற்கு திருக்குர்ஆனின் மொழி வழக்கு, திரும்பி வருதல் என்பதாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டு இறைவன் அளவில் சென்று பின்னர் பூமிக்கு வருவார் என்றால், திருக்குர்ஆனிலோ, நபிமொழிகளிலோ ஈஸா நபி (அலை) அவர்கள் திரும்பி வருவார் என்று கூறப்பட்டிருக்க வேண்டும்.திரும்பி வருவார் என்று எங்கும் அன்னார் வருகையைக் குறித்து கூறப்படவில்லை.



எனவே இஸ்ரவேலர்களுக்காக வந்த ஈஸா நபி உயிருடன் உள்ளார்கள் என்பதும் அவர்களே மீண்டும் வருவார்கள் என்பதும் அடிப்டையற்ற வீண்விதண்டா வாதங்களே ஆகும். இத்தகு வாதங்களை திருக்குர்ஆன் ஹதீஸ் ஒளியில் எவராலும் நிருபிக்க இயலாது.

## 17. ஈஸா நபி (அலை) செய்த அற்புதங்களும் பிறர் செய்த அற்புதங்களும்

**அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

*உலகில் நபி (ஸல்) அவர்கள் முதல் வேறு எந்த நபிக்கும், வேறு எந்த மனிதனுக்கும் கொடுக்கப்படாத சில தனிச்சிறப்புகள் ஈஸா (அலை) அவர்கள் பெற்றுள்ளார்கள் என்று குர்ஆன் சான்று பகருகிறது. ஈஸா (அலை) அவர்கள் தகப்பனின்றி தாய்க்கு மட்டும் பிறந்தது, பிறந்த உடனே மக்களுடன் பேசியது, அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு குஷ்ட ரோகிகளையும் கடும் வியாதியஸ்தர்களையும் சுகப்படுத்தியது, இறந்தவர்களை உயிர்பித்தது, இப்படிப்பட்ட தனிச்சிறப்புகளை உடையவர்களாக ஈஸா (அலை) அவர்கள் இருந்தார்கள். (பக்கம் 53)*

**நம்பதில்:**

அபூ அப்தில்லாஹ்வுக்கு திருக்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் ஆழிய ஞானம் இல்லை என்பதற்கு இக்கூற்று சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திருக்குர்ஆன் யஹ்யா நபி அவர்களின் பிறப்பினைப் பற்றி அவரின் தாய் மலடி என்றும், தந்தை வயது முதிர்ந்த, நரை, திரை விழுந்த எலும்புகள் பலவீனமானவர் என்றும் கூறிய பின்னரே தந்தையின்றி ஈஸா நபியின் பிறப்பு பற்றிக் கூறுகிறது. இவ்விரு சம்பவங்களையும் இரு சூராக்களில் (3:41,48; 19:9,21) கூறுகிறது. அபூ அப்தில்லாஹ்வின் கூற்றின்படி, ஈஸா நபி (அலை) அவர்களின் பிறப்பு அற்புதம் எனில், யஹ்யா நபி (அலை) அவர்களின் பிறப்பு அதனினும் அற்புதமாக தெரியவில்லையா? இவ்வாறே இஸ்ஹாக் நபி (அலை) அவர்களின் பிறப்பு பற்றியும் திருக்குர்ஆன் (11:73) கூறுகிறது. இவை அபூ அப்தில்லாஹ்வுக்கு தெரியவில்லை போலும்!

ஆதம் நபி (அலை) அவர்கள் தாயும் தந்தையும் இன்றியும், ஹவ்வா (அலை) அவர்கள் ஆதம் நபி (அலை) அவர்களின் விலா எலும்பிலிருந்து பிறந்ததாகவும் அபூ அப்தில்லாஹ் கருதுகிறார். இப்பிறப்புகள் அதிசயமாக இவருக்கு தெரியவில்லையா? பிறந்த உடனே மக்களுடன் பேசியது அதிசயம் என்று எழுதுகிறார். திருக்குர்ஆன் தொட்டிலிலும் நடுப்பருவத்திலும் பேசினார் என்று கூறுகிறது. நடுப்பருவத்தில் ஒருவர் பேசுவது எப்படி அதிசயம் இல்லையோ அப்படியே தொட்டிலிலும் பேசியது அற்புதம் இல்லை என்பது திருக்குர்ஆனின் கருத்து ஆகும். புகாரியில் வந்த நபிமொழியிலும் தொட்டிலில் பேசிய மூன்று குழந்தைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் ஈஸா நபி (அலை) நீங்கலாக மற்ற இரு குழந்தைகளின் பேச்சினை அபூ அப்தில்லாஹ் படித்திருந்தால் இப்படி எழுதியிருக்கமாட்டார் என்பது உறுதி. இன்றைய நாளில் உலகில் பல குழந்தைகளின் பேச்சும், செயலும் இவரது கூற்றைப் பொய்யாக்குகிறதை உலக ஞானம் உள்ளவர் அறிவர்.

அவ்வளவு ஏன்? ஈஸா நபி (அலை) பேசுவது இருக்கட்டும். அன்றும் இன்றும் என்றும் பேச இயலாதது பறவையாகும். ஆனால் ஹூத் ஹூத் என்னும் பறவை அக்காலத்து நபியாகிய சுலைமான் (அலை) அவர்கள் அறியாத அரசியல், தவ்ஹீது விசயங்களை கூறியதாக அபூ அப்தில்லாஹ் நம்புகிறாரே! இதைவிடவா ஈஸா நபி (அலை) பேசியது அதிசயம்?

ஏன் நபியின் இராணுவம் வருவதை அறிந்து, என்றும் பேசாத எறும்புகள் பேசியதாக திருக்குர்ஆன் கூறுகிறதே அது சரி, சுலைமான் நபிக்கு பறவைகளின் மொழிதான் தெரியும். எறும்பு மொழி எப்படி தெரிந்தது? பறவையும் எறும்பும் ஓரினம் என்று அபூ அப்தில்லாஹ் கூறுவாரா? தஜ்ஜால் ஒருவனைக் கொன்று, பின்னர் அவனை உயிர் பெறச் செய்ததாக அபூ அப்தில்லாஹ் நம்புகிறாரே!

திருக்குர்ஆனில் ஈஸா நபி (அலை) அவர்களின் அற்புதம் பற்றித் தெரிந்து கொள்ள திருக்குர்ஆனின் அடிப்படைச் சட்டம் பற்றி தெரிந்திருக்க வேண்டும். இறைவன் படைத்த,

1. எந்த நபியின் அற்புதமும் இயற்கையின் அடிப்படைச் சட்டத்திற்கு உட்பட்டதே. அவ்வாறு செய்வதே இறைவனின் வல்லமைக்கும் ஞானத்திற்கும் எடுத்துக்காட்டாகும்.



2. திருக்குர்ஆனின் பிற கருத்துக்களுக்கு முரண்படாதபடி நாம் திருக்குர்ஆனின் சான்றுகளுக்கு பொருள் கொடுக்க வேண்டும்.
3. நபிமார்களின் அற்புதங்கள் அந்தந்த நபிமார்களின் தனித் தன்மைக்கு ஏற்றவாறு அமைந்திருக்கும்.

**எடுத்துக்காட்டு:**

நபி (ஸல்) அவர்களின் அற்புதம் திருக்குர்ஆன் ஆகும். இது ஒரு நூல் – புத்தகம் ஆகும். உலகில் அன்று முதல் இன்று வரை கோடிக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளுக்கு ஏற்ப பரிசுகளும் அந்த நூல்களுக்கு வழங்கப்படுகிறது. எனவே ஒரு நூல் என்பது அற்புதம் இல்லை. உலகில் பலரால் எழுதக் கூடியதே நூல் ஆகும். இவ்வாறு மனிதரால் செய்யக்கூடிய ஒரு செயல் ஒரு நபிக்குரிய அற்புதம் ஆகும் போது, அந்த நூலைப் போல் ஒரு நூலை எவரும் எழுத முடியாது. இந்த நூலின் காணப்படுவதைப் போன்று ஒரு வசனத்தையோ, அல்லது ஒரு அதிகாரத்தையோ, 10 அதிகாரங்களையோ அல்லது இதுபோன்ற ஒரு நூலையோ எழுதிக் கொண்டு வருமாறு திருக்குர்ஆன் நிராகரிப்பாளர்களிடம் அறைகூவல் விடுக்கிறது. கடந்த 1500 ஆண்டு காலமாக எவராலும் இயலவில்லை. இனிமேலும் முடியாது.

இவ்வாறே இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் தனித்தன்மை, தர்க்க அடிப்படையில் தன் போதனைகளை மக்களுக்கு கூறியது ஆகும். இறைவன் என்றால் பேச வேண்டும்; பேச முடியாதவை இறைவன் இல்லை. அவனை ஏன் வணங்க வேண்டும்? என்ற தர்க்க வாதத்தின் மூலமே சிலை (வணக்கத்தை) உடைத்தார்கள். இதன் அடிப்படையில் பார்க்கும் போது, இன்றைய முஸ்லிம்கள் அல்லாஹ் வஹியை நிறுத்தி விட்டான். அதாவது அவன் இனிமேல் யாருடனும் பேசமாட்டான் என்று நம்புவது, அல்லாஹ்வை சிலையாக, பொய்த் தெய்வமாக நம்புவதாகும்.

ஈஸா (அலை) அவர்களின் தனித்தன்மையாவது அன்னார் உவமை வடிவில் தன் கருத்துக்களைப் போதித்தார்கள். எனவே, அன்னாரின் அற்புதங்களையும் இறைவன் உவமை வடிவில் கூறியுள்ளான். நோய்களைக் குணப்படுத்தியது, பறவையைப் படைத்தது,

குருடர்களைப் பார்க்கச் செய்தது, இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தது அத்தனையும் உவமை வசனங்களாகும்.

சொற்பொருள் தான் கொள்ள வேண்டும் என்று அபூ அப்தில்லாஹ் கூறுவார் என்றால் முஸ்லிம் ஹதீஸில் 5735 ஐப் படித்து பார்த்தால், ஒரு சாதாரண சிறுவன், பிறவிக் குருடையும், தொழு நோயாளியையும், பிற நோய்களையும் குணப்படுத்துவான் என்றும் அச்சிறுவனைக் கொன்றால் அவன் மீண்டும் உயிர்பெற்று வருவான் என்றும் கூறப்பட்டுள்ளதை அபூ அப்தில்லாஹ் எப்படி நம்புகிறார்?

இவர்களுக்கு கடைசியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய எச்சரிக்கையைக் கூறிக்கொள்கிறேன்.

நஸாராக்கள் ஈஸா நபி(அலை) அவர்ளை அளவுக்கு மீறிப் புகழ்ந்து வழி கெட்டது போல் அபூ அப்தில்லாஹ் கூட்டமும் அன்னாரை வரம்பு கடந்து புகழ்ந்து வழி கெடவேண்டாம்.

அவர் எம்முடைய அடியாராகவே விளங்கினார். அவருக்கு நாம் அருள் செய்து அவரை இஸ்ராயீலின் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக ஆக்கினோம். (43:60)

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த வசனத்தில் ஈஸா (அலை) அவர்களை அப்து – அடியார் என்று கூறி அன்னார் இறைவனோ இறைப்பண்புகளாகிய உயிர் கொடுத்தல், படைத்தல் போன்றவற்றை செய்யவோ இல்லை என்று மறுக்கின்றான். இறைவன் அப்து – அடியார் என்ற சொல்லை பல நபிமார்களுகளுக்கும் நல்லடியார்களுக்கும் திருக்குர்அனில் பயன்படுத்தியுள்ளான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மனிதனாகிய நல்லடியார் – நபியாவார். அவரிடம் அம்மனித நபிகளைப் போன்ற மனித பண்புகளே இருந்தன. படைத்தல், உயிர் கொடுத்தல் போன்ற பண்புகள் உவமை வடிவில் ஏனைய நபிமார்களுக்கு இருந்தது (8:25) போல் அவரிடமும் இருந்தன என்று பதில் தருகின்றான்.

இந்த வசனத்தில் அவர் என் அடியாராக விளங்கினார். அவருக்கு நாம் அருள் செய்து அவரை இஸ்ராயீல் சந்ததிக்கு ஓர் உவமையாக (எடுத்துக்காட்டாக) ஆக்கினோம் என்று கூறுகிறான். அதாவது ஈஸா (அலை)



அவர்கள் தந்தையின்றி பிறந்தது, ஒரு நபிக்கு தந்தையாகும் தகுதியை இறைவன் இஸ்ரவேல் மக்களிடம் இருந்து பறித்து விட்டதனைச் சுட்டிக் காட்டுகிறது.

பின்னர் யூதர்களின் தீய செயல்களால் ஈஸா நபி (அலை) அவர்களுக்குப் பிறகு நுபுவ்வத்தின் அருட்கொடையும் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு அது இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறு ஈஸா (அலை) அவர்கள் தந்தையின்றிப் பிறந்தது இஸ்ராயீல் சமுதாயம் நுபுவத்தின் அருளை முற்றாக இழக்கப் போகிறது என்பதை எடுத்துக்காட்டவே இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## 18. இரு ஈஸா நபிமார்களின் இரு வேறு தோற்றங்கள்

**அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

***ஹதீஸ்களிலும் காதியானிகளின் கைவரிசை எனும் தலைப்பில் (பக்கம் 56) நான் ஈஸாவையும், மூஸாவையும் கண்டேன். ஈஸா சிவந்த நிறமும், சுருண்ட கேசமும், விரிவடைந்த நெஞ்சமும் உடையவராக இருந்தார்கள். (புகாரி பாகம் 2; கிதாபு பத் உல்கல்க்)***

***நான் ஒரு தரிசனத்தில் கஃபாவை வலம் வருவது போல் கண்டேன். அப்போது திடீர் என்று ஒருவர் என முன் தோன்றினார். அவர் கோதுமை நிறமும், நீளமான கேசமும் கொண்டிருந்தார். இவர் யார் என கேட்ட போது இவர் இப்னு மர்யம் என்று கூறப்பட்டது. (புகாரி - கிதாபுல் பித்ன்)***

***......ஜஃது என்ற பதத்திற்கு சுருண்ட கேசம் என்பது மட்டும் பொருளல்ல. உறுதியான உடம்பிற்கும் ஜஃது என்று சொல்லலாம். ஆனால் அது தனியாக ஜஃது என்று மட்டும் கூறப்பட்டிருப்பதால் சுருண்ட கேசம் என்று மட்டும் பொருள் கொள்ள முடியாது. ஜஃது என்ற சொல்லுடன் -ஃரு என்ற சொல் இணைக்கப்பட்டு ஜஃத -ஃரு என்று கூறப்பட்டிருந்தால் மட்டுமே சுருண்ட கேசம் என்று மட்டும் பொருள் கொள்ள முடியும். குறிப்பிட்ட அந்த ஹதீஸில் ஜஃதுக்கு முன்னால் சிவந்த மேனி என்றும் ஜஃதுக்குப் பின்னால் அகன்ற நெஞ்சு என்றும் உடலின் அமைப்பைப் பற்றிக்***

*கூறப்பட்டிருப்பதால் மத்தியில் உள்ள ஜஃது என்ற சொல்லுக்கு உறுதியான உடல் என்றே பொருள் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.* என்று அபூ அப்தில்லாஹ் எழுதியுள்ளார்.

**நம் பதில்:**

1. ஒரு வாதத்திற்காக இதனை ஏற்றுக் கொண்டாலும் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் இரு நபிமார்களுடைய தோற்றத்தை மட்டும் குறிப்பிட்டு எழுதவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. முதலாவது ஹதீஸில், ஈஸா நபி (அலை) அவர்களை மூஸா நபி (அலை) அவர்களுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து அந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டவர் மூஸா நபியுடன் தொடர்புள்ள மஸீஹ் என்பது புலனாகிறது. இரண்டாவதாக கூறப்பட்ட மஸீஹ் பிற்காலத்தில் தோன்றுபவர் என்பதற்கு ஆதாரமாவது, அந்த ஹதீஸை தொடர்ந்து வரும் வாசகங்களில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தஜ்ஜாலின் குழப்பம் மிகுந்த காலத்தில் தோன்றுவார் எனக் கூறப்பட்டிருப்பதேயாகும்.

2. .... இப்னு மர்யம் தோன்றும் போது உங்களுடைய நிலைமை எவ்வாறிருக்குமோ? அவர் உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருப்பார். (புகாரி, முஸ்லிம் : நுஸுலிப்னு மர்யம்) எனும் நபிமொழியைக் கூறி உங்களிலிருந்து தோன்றி, உங்களுக்கு இமாமாக இருப்பார் என்று இந்த நபிமொழியில் வந்திருப்பதால் இதில் கூறப்பட்டிருப்பவர் முஸ்லிம்களிலிருந்து தோன்றும் ஒருவர் என்பதை உறுதி செய்கிறது.

3. உங்களுள் உயிருள்ளவர் ஈஸப்னு மர்யமைச் சந்திப்பார். அவர் மஹ்தியாகவும் தீர்ப்பு வழங்குபவராகவும், நீதியை நிலைநாட்டுபவராகவும் விளங்குவார். (முஸ்னத் அஹமதிப்னு ஹம்பல் - பாகம் 2, பக்கம் 411)

4. ஈஸாவை தவிர மஹ்தியில்லை. (இப்னு மாஜா ஷித்தத்துஸ் ஸமான்)

5. இதன் காரணமாகவே இமாம் புகாரி (ரஹ்) அவர்களும் இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களும் தத்தமது ஹதீது தொகுப்புகளில் இப்னு மர்யமின் வருகையைப் பற்றியும் இமாம் மஹ்தியைப் பற்றியும்



தனித்தனியாக வெவ்வேறு அத்தியாயங்கள் அமைத்து குறிப்பிடாமல் ஒன்றாகவே குறிப்பட்டுள்ளார்கள்.

மேலே குறிப்பிட்ட ஐந்து ஆதாரங்களுக்கும் அபூ அப்தில்லாஹ் வழக்கம் போல் பதில் தரவில்லை.

ஜஃது என்ற சொல்லை ஆராயப் புறப்பட்ட அபூ அப்தில்லாஹ் இப்னு மர்யம் ஒரு நபிமொழியில் மூஸா (அலை) அவர்களுடனும் இன்னொரு நபிமொழியில் தஜ்ஜால் மற்றும் கஃபத்துல்லாஹ்வுடனும் வருவதால், ஒருவர் இஸ்ரவேலர்களுக்காக வந்த ஈஸா (அலை) என்றும் மற்றொருவர் பிற்காலத்தில் வரும் தஜ்ஜாலுடனும் கஃபத்துல்லாஹ்வுடன் தொடர்புடையவர் என்றும் பிரித்தறியத் தவறியது ஏன்? ஜஅது என்பதற்கு உறுதியான உடல் என்றே பொருள் கொள்ள வேண்டும் எனக் கூறுவதும் அண்டப்புழுகேயாகும். ஏனெனில் Islamic University Madina -வின் Dr. Mohammad Muhsin Khan ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள Sahih Bukhari Arabic English மொழியாக்கத்தில் பாகம்-4 பக்432-433 ஹதீஸ் எண் 648, 649 இல் ஜஅது என்ற சொல்லுக்கு Curly Hair (சுருண்ட முடி) என்ற மொழி பெயர்த்துள்ளார்கள். தொடர்ந்து அதனை உறுதிப்படுத்தும் வகையில் ஹதீஸ் எண் 650ல் இரண்டு மஸீஹ்களையும் குறிப்பிட்டு ஒன்று ஸப்துஸ் ஸஅர் இன்னொன்று ஜஅது என வந்துள்ளது. அதாவது ஒருவர் நீளமான முடியுடையவரும் இன்னொருவர் சுருண்ட முடியுடையவரும் ஆவார் என்றே கூறப்பட்டுள்ளது. மேலும் தமிழில் வெளிவந்த புகாரி மொழிபெயர்ப்பிலும் ஜஅத் என்ற சொல்லுக்கு சுருள் முடி உடையவர் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (ஆதாரம் : புகாரி - 3438)

## 19. சிலுவை முதல் காஷ்மீர் வரை

## அபூ அப்தில்லாஹ்வின் பிதற்றல்

***அபூ அப்தில்லாஹ் தம் நூலில், சிலுவையில் அறையப்பட்ட ஈஸா (அலை) அவர்கள் மூன்று மணி நேரத்தில் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு உயிர் பிழைத்து காஷ்மீருக்கு சென்று 120 வயது வரை வாழ்ந்து அதன் பின்னரே மரணம் எய்தியதாக கூறுகிறார்கள். காதியானிகள் ஈஸா (அலை) அவர்களின் 33 வருட வாழ்க்கை***

*உலகறிந்த வரலாறாக இருக்க அதன் பின் (காதியானிகளின் கூற்றுப்படி) வாழ்ந்த 87 வருட வரலாறு மறைக்கப்பட்டு விட்டதா? மிர்ஸா குலாம் மூலம் அவரின் சிஷ்ய கோடிகளுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டது போலும்! சூஃபியாக்களை மிஞ்சி விட்டார்கள் காதியானிகள். (பக்கம் 10)*

*காஷ்மீரில் காணப்படும் கல்லறை எனும் தலைப்பில் தப்பித்தோம் பிழைத்தோம் எனக் கதறியவாறு காஷ்மீர் ஓடியிருக்கலாம். நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்திருக்கலாம். அங்கேயே மாண்டிருக்கலாம். காதியானிகள் கூறுவது போல் அவரது கல்லறை ஸ்ரீநகரில் உள்ள கான்யார் வீதியில் காணவும் படலாம். ஈஸா (அலை) என யூத அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டு சிலுவையில் ஏறி பின் விடுபட்டு ஓடி வந்தமையால் இவரே உண்மையான ஈஸா (அலை) என ஒரு சாரார் நம்பியிருக்கலாம். இந்த அடிப்படையில் சில வரலாற்றாசிரியர்கள் ஈஸா (அலை) அவர்களின் கல்லறை காஷ்மீரில் இருப்பதாக எழுதியிருக்கலாம். மார்க்க ஆதாரங்களை இத்தகைய ஊக அடிப்படையிலான சரித்திர ஆதாரங்கள் முறியடிக்க முடியாது. (பக் 14-15)*

*இதுவரை நாம் எடுத்துக்காட்டியுள்ள மறுக்க முடியாத சரித்திர ஆதாரங்களைக் கொண்டு காதியானிகள் (பக் 43) ஈஸா (அலை) தனது 120 வயது வரை இந்த உலகில் வாழ்ந்து மரணித்தார்கள் என்று கூறுவது அப்பட்டமான பொய் என்று நிரூபணமாகிறது.*

*அப்படி வாழ்ந்திருந்தால், பவுலால் தனது பெயர் துஷ்பிரயோகம் பண்ணப்பட்டு தனது போதனைக்கு நேர்மாற்றமாக இறைவனுக்கு இணைவைக்கும் நிலை உண்டாக ஒருபோதும் அனுமதித்திருக்க மாட்டார்கள். அவர்கள் காஷ்மீரில் வாழ்ந்து வந்ததால், பவுலின் சதிச் செயல்களைஅறிந்து கொள்ள முற்படவில்லை என்ற கீழ்தரமான விவாதத்தில் காதியானிகள் இறங்க மாட்டார்கள் என நம்புகிறோம். மேலும் ஈஸா (அலை) அவர்கள் நீ என்னைக் கைப்பற்றிக் கொண்ட பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது என்றே கூறுகிறார்கள் எனவே இந்த உலகில் எந்தப் பகுதியிலும் அவர்கள் வாழவில்லை. எனவே சிலுவைச்*



*சம்பவத்திற்குப் பிறகு ஈஸா (அலை) அவர்கள் இவ்வுலகில் இருக்கவே இல்லை. அல்லாஹ் தன்னளவில் தூல உடலுடன் அவர்களை உயர்த்திக் கொண்டான் என்பதே ஆகும். (பக் 43)*

**நம் பதில்:**

அபூ அப்தில்லாஹ் தம் நூலில் மேலே எடுத்துக்காட்டி இருப்பது போல் ஏறக்குறைய 16 இடங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் 120 வயது வரை வாழ்ந்தார் என்று எழுதியுள்ளார். அன்னாரின் கல்லறை காஷ்மீரில் உள்ளது என்ற தலைப்பில் ஓரிரு இடங்களில் இயேசுவின் கல்லறை காஷ்மீரில் கான்யார் வீதியில் உள்ளது என்றும் எழுதியுள்ளார்.

**முதலாவதாக,** அபூ அப்துல்லாஹ் தன் திறனாய்வுக்கு எடுத்துக்கொண்ட ஈஸா (அலை) அவர்களின் மரணம் எனும் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் (ரஹ்) அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் 120 வயது வரை வாழ்ந்தார் என்று எங்கும் குறிப்பிடவில்லை. அன்னாரது கல்லறை காஷ்மீரில் கான்யார் வீதியில் உள்ளது என்றும் எங்கும் எழுதவில்லை.

இவ்வாறு எழுதப்படாத ஒரு கருத்தை எழுதப்பட்டிருப்பது போல் கற்பனை செய்து கொண்டு வேண்டும் என்றே தமது நூலில் பல பக்கங்களை வீணடித்துள்ளார்.

அவ்விரு கருத்துக்களும் எங்களுக்கு உடன்பாடானவை தான் என்றாலும் அபூ அப்தில்லாஹ் தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நூலில் அக்கருத்துகள் இடம் பெறவில்லை.

**இரண்டாவதாக,** அல்லாஹ் திருக்குர்ஆனில் 5:116-117 வசனத்தில் ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் இரு காலக்கட்டங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளான்.

1) அன்னார் அம்மக்கள் மத்தியில் வாழ்ந்த காலக்கட்டம். 2) அன்னாரது ரூஹ் முழுமையாகக் கைப்பற்றப்பட்டு மரணமடைந்து இறைவனிடம் ரூஹ் உயர்த்தப்பட்டுவிட்டதால் உலகில் இல்லாத காலகட்டம். திருக்குர்ஆனில் ஈஸா நபி (அலை) அவர்கள் தன்னைப் பற்றி (19:34) நான் பிறந்த நாளிலும், இறக்கும் நாளிலும், மீண்டும் எழுப்பப்படும் நாளிலும் என் மீது சாந்தி இருக்கும் என்று கூறுவது இக்கருத்துக்கு வலுவூட்டுகிறது.

**மூன்றாவது,** ஈஸா (அலை) அவர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்து பூமியில் வாழ்வார்கள் எனற ஒரு காலகட்டம் திருக்குர் ஆனில் 5:116-117 வசனத்தில் கூறப்படவில்லை. திருக்குர் ஆனில் கூறப்படாத ஒரு காலகட்டத்தை அபூ அப்தில்லாஹ் ஏற்படுத்திட முனைகிறார்.

முதலாவது காலகட்டமாகிய உலகில் அம்மக்கள் மத்தியில் வாழ்ந்த காலத்தில் அன்னார் சாட்சியாக இருந்தார். இஸ்ரவேல் மக்கள் தன்னையோ தன் தாயையோ வணங்கவில்லை என்று ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) கூறுவார் என்பது குர்ஆன் கூறும் உறுதியான, இறுதியான உண்மையான சான்று. அல்லாஹ்வின் வசனத்தின் மீது ஈமான் கொண்டவன் எவனும் அப்படித்தான் நம்புவான். திருக்குர் ஆன் அன்னார் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்று எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால் கன்ஸுல் உம்மால் எனும் நபிமொழி தொகுப்பில் ஈஸா நபி (அலை) 120 வயது வரை வாழ்ந்தார் என்று கூறப்பட்டுள்ளது. எனவே திருக்குர்ஆனுக்கும் நபிமொழிக்கும் இணக்கமாக நாம் பொருள் கொடுப்பதாக இருந்தால் ஈஸா நபி (அலை) அம்மக்கள் மத்தியில் உயிருடன் வாழ்ந்த காலத்தில் ஷிர்க் ஏற்படவே இல்லை என்று உறுதியாகக் கொள்ளவேண்டும். அதாவது ஈஸா நபி (அலை) பாலஸ்தீனத்தில் இஸ்ரவேலரின் இரு கோத்திரர் மத்தியில் வாழ்ந்த காலத்தில் அம்மக்கள் ஷிர்க்கில் ஈடுபடவில்லை. பின்னர் ஈஸா நபி (அலை) ஹிஜ்ரத் செய்து இஸ்ரவேலர்களின் 10 கோத்திரத்தவர்களை தேடி சிரியா ஆஃப்கான் வழியாக இந்தியா வந்து காஷ்மீரில் வாழ்ந்த காலத்தில் அந்த மக்கள் ஷிர்க்கில் ஈடுபடவில்லை என்பது திருக்குர்ஆனிலிருந்து தெரிய வருகிறது. மார்க்க ஆதாரங்களை யூக அடிப்படையிலான சரித்திர ஆதாரங்கள் முறியடிக்க முடியாது என்று அபூ அப்தில்லா தன் நூலில் (பக்கம் 14-15) எழுதியிருப்பதனை அவருக்கே நினைவூட்டுகிறோம்.

இவ்வாறு ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் முதல் கால கட்டத்தில் எந்தெந்த மக்கள் மத்தியில் வாழ்ந்தார்களோ, அவர்கள் வாமும் காலத்தில் அம்மக்கள் ஷிர்க்கில் ஈடுபடவில்லை என்பது உறுதி.

அபூ அப்தில்லாஹ் தம் நூலில் பக் 43ல் அவர்கள் காஷ்மீரில் வாழ்ந்து வந்ததால் பவுலின் சதிச் செயல்களை அறிந்து கொள்ள முடியவில்லை என்ற கீழ்த்தரமான விவாதத்தில் காதியானிகள்



இறங்கமாட்டார்கள் என்று நம்புகிறோம் என்று எழுதியுள்ள அபூ அப்தில்லாஹ் தம் நூலில் பக்கம் 37ல் ஒரு மனிதனின் உயிர் உறக்கத்தின் நிலையில் கைப்பற்றப்பட்டாலும் அவனைச் சுற்றி நடைபெறுபவைகளை அறியமாட்டான். இந்நிலையில் அவன் அவைகளின் நிமித்தம் குற்றம் சாட்டப்படவும் மாட்டான் என்று எழுதியுள்ளார். அபூ அப்தில்லாஹ் பக்கம் 43ல் எடுத்துக்காட்டியதை, பக்கம் 37ல் எடுத்துக்காட்டியிருப்பதுடன் ஒப்பிட்டுப்பாருங்கள். ஒருவர் இடத்தாலும் காலத்தாலும் மிக மிக தொலைவில் விலகி காணப்படுகிறார். எனவே எங்கோ நெடுந்தொலைவில் நெடுங்காலத்திற்கு முன்னர் நடந்தது தெரியாது (என்று எந்த அஹ்மதியும் கூறவில்லை. இது அபூ அப்தில்லாஹ்வின் கற்பனையாகும்) என்று கூறுவது கீழ்த்தரமான வாதம் என்றால் ஒரு மனிதர் உறங்குகிறார், அவருக்குப் பக்கத்தில் உறங்கும் சமயத்தில் நடப்பது அவருக்கு தெரியாது என்ற அபூ அப்தில்லாஹ்வின் வாதத்தை என்னவென்பது? அதனை கீழ்த்தரத்திலும் கீழ்த்தரமானது என்று கூறலாமா?

ஈஸா நபி (அலை) சிலுவையிலிருந்து காப்பாற்றப்பட்டு, இரு கோத்திரத்தை விட்டும் பிரிந்த பின்னர் அங்கு சீடர்கள் தலைமையில் இஸ்ரவேலர்களும், பவுலின் கீழ் புறஜாதி மக்களும் (இஸ்ரவேல் அல்லாத மக்கள்) பிரிகின்றனர். அவரவர்கள் தத்தமது வழியில் செயல்படுகின்றனர். ஈஸா நபியின் சீடர்களும் இஸ்ரவேலர்களும் ஈஸா நபி காட்டிய வழியில் வாழ்கின்றனர். பவுல் அதற்கு மாற்றமான வழியில் செயல்படுகின்றான். எனவே, ஈஸா நபி (அலை) அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை ஈஸா நபியின் சீடர்களும் இஸ்ரவேலர்களும் வழிகெடவில்லை. புறஜாதி மக்களுக்கு ஈஸா நபி (அலை) அவர்கள் நபியாக அனுப்பப்படாததினால் அவர்கள் பவுலால் வழிகெட்டுப் போனதற்கு ஈஸா நபி (அலை) அவர்கள் எப்படிப் பொறுப்பாவார்? இவ்வாறு, திருக்குர்ஆனில் 5:117-118வது வசனத்தில் ஈஸா நபி (அலை) தன் மக்கள் மத்தியில் இருந்த காலத்தில் அவர்கள் தன்னையும், தன் தாயையும் வணங்கவில்லை என்ற கூற்று உண்மையாகிறது.

அபூ அப்தில்லாஹ் தம் நூலில் 18வது பக்கத்தில் எழுதியுள்ளதற்கு எமது பதில் என்னெவென்றால்: எகிப்தின் முன்னால் முப்தி-உஸ்தாது

அல்லாமா ரஷீத்ரிஸா அவர்கள் தமது அல்மனார் எனும் நூலில் 900 வது பக்கத்தில் ஈஸா நபி இந்தியாவுக்கு ஹிஜ்ரத் சென்றதைப் பற்றியும் இங்கு அவர்கள் மரணமடைந்தது பற்றியும் கீழ்வருமாறு எடுத்துரைக்கிறார்.

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் ஹிஜ்ரத் செய்து இந்தியா சென்றடைந்ததாகவும் அங்கு அவர்கள் மரணமடைந்ததாகவும் கூறப்படுவது பகுத்தறிவுக்கோ, வரலாற்றுச் சான்றுகளுக்கோ முரண்பட்டதல்ல. இந்த மேற்கோளை ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் தமது நூலில் (பக்கம் 71ல்) எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

## 20. ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் ஹிஜ்ரத்

திருக்குர்ஆனில் சலபுஹூ எனும் சொல் 12:42; 7:125; 20:72; 26:50; 5:34 ஆகிய இடங்களில் சிலுவையில் அறைந்து கொல்லுதல் எனும் பொருளில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஈஸா நபி (அலை) அவர்களுடன் வரும் இடமாகிய 4:158 வது வசனத்தில் மா சலபுஹு என்று எதிர்மறைப் பொருளில் வருவதால் ஈஸா நபி சிலுவையில் அறையப்படுவார். ஆனால் கொல்லப்பட மாட்டார் என்ற பொருளைத்தான் தரும். இதனையே 5:110 வசனத்தில் வரும் இஸ்ராயீல் மக்களை நான் தடுத்து நிறுத்தியதையும் எனும் சொற்றொடர் சிலுவையில் கொல்லப்படாமல் அல்லாஹ் காப்பாற்றியதைக் குறிக்கும்.

அடுத்து மஸீஹ் எனும் சொல் மிக மிக நீண்ட பயணம் செய்பவர் எனும் பொருளைத் தரும் என்று பல தப்ஸீர்களிலும், தர்ஜுமாக்களிலும் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 3:45 வசனத்தில் வரும் அல் மஸீஹ் எனும் சொல்லுக்கு 1) தப்ஸீர் இப்னு கஸீர் 2) தப்ஸீருல் ஹமீத் 3) தப்ஸீர் ஜவாஹிருல் குர்ஆன் 4) அன்வாருல் குர்ஆன் 5) மவ்லவி முஹம்மதலி அவர்கள் எழுதிய கமென்டரி 6) பா. தாவூத் –ா எழுதிய விளக்கவுரை.

மஸீஹ் என்னும் சொல் திருக்குர்ஆனில் ஈஸா நபி (அலை) அவர்களைக் குறிக்க 11 இடங்களில் வருகிறது. 3:46; 4:158; 4:172-173; 5:17; 5:72 (இருமுறை); 5:75; 9:30-31. இதில் 3:46 வசனத்தில் வரும் மஸீஹ் என்னும் பெயருக்கு நீண்ட பயணம் செய்பவர் எனும் பொருளை



11 இடங்களில் சுட்டிக் காட்டுவதன் மூலம் அல்லாஹ், அதனை மேலும் உறுதி செய்கிறான்.

திருக்குர்ஆனின் 4:158 வசனத்தில் அவருடைய மரணத்திற்கு முன் அவரிடம் நம்பிக்கை கொள்ளாத ஒரு(கோத்திரத்த)வரும் வேதத்தை உடையவருள் இருக்கமாட்டார் என்று வருகிறது. எனவே, ஈஸா நபி (அலை) 10 கோத்திரத்தாரையும் தேடிச்சென்று அவர்களைக் காண வேண்டும். எனவே, அன்னார் சிரியா, ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியா வந்துள்ளார்.

திருக்குர்ஆனின் 23:50 வசனத்தில், நாம் மர்யமுடைய மகனையும் அவருடைய தாயையும் ஓர் அடையாளமாக்கினோம். அவ்விருவருக்கும் தங்குவதற்கு ஏற்றதும் நீரூற்றுகளைக் கொண்டதுமான ஓர் உயர்ந்த இடத்தில் தஞ்சமளித்தோம். அடைக்கலம் – தஞ்சமளித்தோம் என்னும் சொல் திருக்குர்ஆனில் தன் உயிரையும் உயிரினும் மேலான ஈமானையும் காக்க, ஹிஜ்ரத் செய்து வேறொரு இடத்திற்கு சென்று சேர்தல் எனும் பொருளில் எடுத்தாளப்படுவதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக, அந்த இளைஞர்கள் விசாலமான குகையில் அடைக்கலம் புகுந்த போது... (திருக்குர்ஆன் 18:16) என்ற வசனமும் அவன் உங்களுக்கு (மதீனாவில்) அடைக்கலம் அளித்தான் (8:26) என்ற வசனமும் போதிய சான்றாகும்.

இதேபோன்று, ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களும் அவரது தாயாரும் ஹிஜ்ரத் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

நான் மேலே கூறியவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டு, அதிலிருந்து காப்பாற்றப்பட்டு இஸ்ரவேலர்களின் 10 கோத்திரத்தைத் தேடி மிக நீண்ட பயணம் மேற்கொண்டார் என்றும் இறுதியில் அவர் நீரூற்றுகளைக் கொண்டதும் தங்குவதற்கு ஏற்றதற்கும் உரிய ஓர் உயர்ந்த இடத்தில் அடைக்கலம் அடைந்தார் எனறும் நமக்குத் தெரிகிறது.

இந்த ஹிஜ்ரத்தை அறியாமல் அபூ அப்தில்லாஹ் தம் நூலில் தம் மார்க்க அறிவீனத்தை அம்பலப்படுத்தியுள்ளார். ஹஸ்ரத் ஈஸா நபி (அலை)

அவர்கள் எங்கெங்கு எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது உறுதியாக நமக்கு தெரியாது. அபூ அப்தில்லா எழுதுவதனைப் பாருங்கள். அல்லாஹ் (ஜல்) ஒரு நபியை ஈஸா (அலை) அவர்களை 87 வருடங்கள் விருதா வாழவிட்டு அதன் பின் மரிக்கச் செய்துள்ளான். (நவூதுபில்லாஹ்) (பக்கம் 18)

ஒரு வாதத்திற்காக ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களை 87 வருடங்கள் விருதாவாக அல்லாஹ் வாழவிட்டு அதன் பின் மரிக்கச் செய்தான் என்று வைத்துக் கொள்வோம். அபூ அப்தில்லாவின் ஈமானின் படி கடந்த 2000 வருடங்களாக ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களை அல்லாஹ் (ஜல்) வானத்தில் உயிருடன் வாழவிட்டுள்ளானே! இன்னும் பல ஆயிரம் வருடங்கள் வாழ்ந்து கியாம நாளில் வருவார் என்று அபூ அப்தில்லா நம்புகிறாரே! 87 வருடம் விருதா என்றால் 2000 வருடங்களும் அதற்கு மேலும் வாழ்வது எவ்வளவு பெரிய விருதாவாகும்? உண்மையில் ஈஸா நபி (அலை) 87 ஆண்டுகள் வீணாக கழித்தார்கள் என்று நாம் எங்கும் கூறவில்லையே. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அபூ அப்தில்லா கூறுவதை போன்று தமது பணியை புறக்கணித்துச் செல்லவில்லை. ஹிஜ்ரத் செய்து பிறந்த நாட்டிலிருந்து தம் மக்கள் வாழும் பிற நாட்டிற்கே சென்றார். இறைவன் அவருக்கும் அவரது தாய்க்கும் மிக உயரமான நீருற்றுகள் மிக்க இடத்தில் அடைக்கலம் கொடுத்துள்ளோம் என்று கூறியுள்ளான். (திருக்குர் ஆன் 23:51) இதனை சிறந்த தங்குமிடம் என்று (16:42) இறைவன் கூறுகின்றான். அவரது அருமைச் சீடர் தூய தாமஸ் இந்தியாவிற்கு வந்தார் என்பது மறுக்க முடியாத வரலாற்று ஆதாரமாகும். எனவே இது தொடர்பான அபூ அப்தில்லாஹ்வின் வாதம் அபத்தமானது. நபிமார்கள் பிறந்த மண்ணைத் துறந்து ஹிஜ்ரத் செய்வது புதியதல்ல. வானத்திற்கு சென்றதாகக் கூறப்படுவதே புதிது.

ஈஸா நபி (அலை) அவர்கள் இஸ்ரவேல் சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு தூதராவார். அவர் பிறந்த மண்ணில் 2 கோத்திரங்கள் மட்டும் இருந்தன. ஏனைய 10 கோத்திரங்களும் சிரியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர் பகுதியில் சிதறி வாழ்ந்தனர். இஸ்ரேல் நாடு உருவாகும் முன்பு வரை அவர்கள் அங்கங்கு வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய வழிபாட்டுத்தலங்கள் இன்றும் அங்கங்கு காணப்படுவது அதற்கு



சான்றாகும். நம் கேள்வியாவது, அல்லாஹ் ஒரு நபியை ஒரு சமுதாயத்திற்கு அனுப்பி, அந்த நபி அந்த சமூகத்தின் 2 கோத்திரங்களை மட்டும் சந்தித்து தன் தூதுச் செய்தியை சொல்ல, அவர்கள் அவரைப் பிடித்து சிலுவையில் அறைய முற்பட, அல்லாஹ் ஆள்மாறாட்டம் செய்து, அவரைத் தன்னளவில் உயர்த்திக் கொண்டான் என்று நம்பினால், ஏனைய 10 கோத்திரங்களுக்கும் தூதச் செய்தி சொல்லப்படவில்லையே! அல்லாஹ் தன் திட்டத்தில் தோல்வி அடைந்ததாக ஆகாதா? நவூதுபில்லாஹ். கேவலம் யூதர்களுக்கு பயந்து அல்லாஹ் அவ்வாறு செய்தான் என்றால், நவூதுபில்லாஹ் அல்லாஹ்வின் வல்லமை, ரோ-ம் என்ன ஆயிற்று? அல்லாஹ் தனது திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போய் விட்டானா? நவூதுபில்லாஹ். இதுவா அல்லாஹ்வின் நடைமுறை?

யூனுஸ் நபி (அலை) அவர்கள் தன் மக்களை விட்டு விட்டு, கப்பலில் ஏறிச் சென்ற போது, அவரைப் பிடித்து மீண்டும் தன் சமூக மக்களிடம் அனுப்பவில்லையா? அப்படிப்பட்ட ஆற்றல்மிக்க அல்லாஹ்வின் நடைமுறை என்ன ஆயிற்று? ஒரு நபி தன் பணியை முழுமையாக செய்யாமல், அரைகுறையாக இடையில் விட்டுச் சென்றார் என்று நம்புவதும் அல்லாஹ்வும் அதற்கு உறுதுணை என்று நம்புவதும் (நவூதுபில்லாஹ்) இழிவாகத் தெரியவில்லையா? இப்படி நம்புவதற்குப் பெயர் ஈமானா? யா அல்லாஹ்! நீதான் இவர்களுக்கு நேர்வழி காட்டித் திருத்த வேணடும்.

திருக்குர் ஆனின் 5:116-117 வசனத்தில் ஈஸா நபி தம் மக்களுடன் இருந்த காலம் மற்றும் மரணத்திற்குப் பிறகு மக்களுடன் இல்லாத காலம் ஆகியவையே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மறுமையில் இறைவன் கேட்ட கேள்விக்கு தம்மையும் தமது தாயாரையும் மக்கள் மத்தியில் அவர் வாழ்ந்த காலத்தில் வணங்கவில்லை என்று பதில் கூறுகிறார்.

ஆனால் அபூ அப்தில்லாவோ அன்னார் இன்னும் உயிருடன் (ஆகாசத்திலோ, அண்டத்திலோ, வேறு எங்கோ) இருப்பதாக புளுகுகிறார். எனவே இதனை நாம் ஆகாசப் புளுகு அண்டப்புளுகு என்கிறோம்.

அவர் மீண்டும் இவ்வுலகிற்கு வந்து தன்னையும் தன் தாயையும் மக்கள் இரு தெய்வங்களாக வணங்கிக் கொண்டிருப்பதனைப் பார்ப்பார். உலகில் வாழ்ந்து மரணித்து இறைவனிடம் சென்று, இறைவன் கேட்கும்

கேள்வியாகிய, ஈஸாவே! உன்னையும் உன் தாயையும் இரு தெய்வங்களாக வணங்கும் படி கூறினீரா? என்பதற்கு எப்படி பதில் சொல்வார்? திருக்குர் ஆனின் 5:116-117 வசனத்திற்கு அண்டப்புளுகன் ஆகாசப்புளுகன் அபூ அப்தில்லாஹ் தான் இதற்கு பதில் தரவேண்டும். ஏனெனில் இல்லாத ஒன்றை, நடக்காத ஒன்றை, கற்பனை செய்து கொண்டு, எல்லை மீறி ஆணவம், அகம்பாவம், அறிவின்மை காரணமாக அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு அல்லாஹ்வின் நபிமார்களை அண்டப்புளுகன் ஆகாசப்புளுகன் என்று அவரால் தான் எழுத முடியும். உங்கள் கருத்தின் படி ஈஸா (அலை) மீண்டும் வருவார் என்றால் திருக்குர் ஆன் 5:116-117 வசனத்தில் இறைவன் கேட்ட கேள்விக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) தம் மக்களிடம் காணப்போகும் ஷிர்க்கைப் பற்றி இறைவனிடம் மறுமையில் ஏன் கூறவில்லை? திருக்குர் ஆனில் அது பற்றி இறைவன் ஏன் குறிப்பிடவில்லை? ஒரு வாதத்திற்காக அதே ஈஸா நபி (அலை) வருவதாக வைத்துக் கொண்டால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர் வந்த எல்லாத் தூதர்களும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் வந்தவர்களே! நபி (ஸல்) அவர்கள் மட்டுமே முழு உலகுக்கும் வந்தவர்கள். எனவே அந்த ஈஸா நபி (அலை) முழு உலகுக்கும் நபியாக வரமுடியாது. இஸ்ரவேல் நாட்டுக்குச் சென்று இஸ்ரவேலர்களுக்குப் போதிக்கலாம்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவை சம்பவத்திற்கு முன்பு தம் மக்கள் மத்தியில் வாழ்ந்த போது அவர்கள் ஷிர்க்கில் ஈடுபடவே இல்லை. அன்னார் மக்களை விட்டுப் பிரிந்து, இந்தியாவிற்கு ஹிஜ்ரத் செய்து, அங்கு வாழ்ந்து வந்த தம் மக்கள் மத்தியில் வாழ்ந்த காலத்தில், பவுல் என்பவர் தோன்றி இஸ்ரவேல் அல்லாத புறஜாதி மக்களை ஈஸா நபி (அலை) அவர்களின் போதனைக்கு மாற்றமான தனது கொள்கையில் சேர்த்திருக்கலாம். புறஜாதி மக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வணங்கியதற்கு, ஈஸா (அலை) அவர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு குறுகிய காலமே இவ்வுலகில் வாழ்கிறான். அவனுடைய ஆயுட்காலம் முடிந்தவுடன் அவன் இறந்து விடுகிறான். இது இயற்கை நியதி. இதற்கு ஆதாரம் தர வேண்டிய அவசியம் இல்லை. இதுபோன்று, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஈஸா



நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதற்கு ஆதாரம் தர வேண்டிய அவசியமில்லை. காலமே அவர்களின் இறப்பிற்கு சான்றாக இருக்கிறது. உயிருடன் இருக்கிறார் என கூறுபவர்களே அதற்குரிய ஆதாரம் தர வேண்டும். ஆனாலும் முஸ்லிம்களிடையே உள்ள இது தொடர்பான மூட நம்பிக்கையைப் போக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹை அவர்கள் ஏற்க வேண்டும் என்ற நன்னோக்குடனேயே ஈஸா நபி (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதற்கான ஆதாரங்களை நாம் எடுத்துக் காட்டி வருகிறோம். ஆனால் இந்த மூட நம்பிக்கையை மேலும் வளர்த்து பாமர முஸ்லிம்களை மழுங்கடித்து அவர்கள் நேர்வழி பெறாமல் தடுக்க நினைப்பவர்கள் நாம் எடுத்து வைக்கும் ஆதாரங்களை வெறுமனே மறுத்து வருகின்றனர். இந்த விசயத்தில் ஒற்றுமையுடைய இன்னொரு இதழும் திருக்குர்ஆன் விளக்கம் என்ற போர்வையில் இதையே செய்து வருகிறது. இவர்கள் நாம் காட்டி வரும் ஆதாரங்களை மறுப்பதால் மட்டும் ஈஸா நபி (அலை) அவர்கள் உயிருடன் உள்ளார்கள் என்பது நிரூபணம் ஆகாது. எதிர் கேள்விகளை எழுப்புவதாலும் அவர்களின் வாதம் உண்மையாகி விடாது. மாறாக ஈஸா நபி (அலை) உயிருடன் உள்ளார்கள் என்பதற்கு வலுவான சான்றுகளை திருக்குர்ஆனிலிருந்தும், ஹதீஸ்களிலிருந்தும் தர வேண்டிய நிர்பந்தம் இவர்களுக்கு இப்போது உண்டு. இந்த வி- யத்தில் இவர்களின் ஆதரவாளர்களிடமிருந்து கூட இவர்கள் தப்பிவிட முடியாது.

## 21. ஆதம் நபி மட்டுமன்று மனித இனமும் மண்ணினால் படைக்கப்பட்டதே!

**பக்கம் 26-ல் அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

***36:77; 76:2; 80:19 ஆகிய இறைவசனங்களில் மனிதனை இந்திரியத்திலிருந்து படைத்ததாக அல்லாஹ் கூறுகின்றான். அப்படியாயின், ஆதம் (அலை) அவர்களை மண்ணால் படைத்ததாக எப்படிச் சொல்ல முடியும்? இவ்வசனங்களிலெல்லாம் ஆதத்தை தவிர மற்றவர்களை என்றல்லவா அல்லாஹ் கூறியிருக்க வேண்டும் என்று நாஸ்திகர் ஒருவர் கேட்பதற்கும் இந்தக் காதியானிகள் 3:144 வசனம் பற்றி கேட்பதற்கும் வேறுபாடு உள்ளதாக நமக்குப் புலப்படவில்லை.***

**நம் பதில்:**

1. திருக்குர்ஆன் 3:145 வசனத்தினை முஹம்மது ஒரு தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன்னால் வந்த தூதர்கள் எல்லாம் சென்று விட்டனர் என்று எடுத்துக்காட்டி, நூலாசிரியர் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள், நபி (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய ஈஸா நபி (அலை) உட்பட அனைத்து தூதர்களும் இறந்து விட்டனர் என்று இந்த வசனம் தெரிவிக்கிறது என்று கூறுகிறார்கள். அப்படி இல்லையென்றால், ஈஸா நபி (அலை) உயிரோடு இருந்திருந்தால் ஈஸாவைத் தவிர என்று 3:145 வசனத்தில் சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று நூலாசிரியர் எழுதியுள்ளார்கள். அக்கருத்தினை அபூ அப்தில்லாஹ் கற்பனை நாத்திகர் மூலம் மறுக்கிறார். அவர் எடுத்துக்காட்டும் திருக்குர்ஆனின் 3 வசனங்களும், மனிதனை விந்தினால் படைத்ததாக மட்டும் கூறுகிறது. எப்படி அந்த வசனங்கள் இருக்க வேண்டும் என்றால், நீங்கள் மனிதர்களேயன்றி வேறில்லை. உங்களுக்கு முன்னர் தோன்றிய மனிதர்கள் எல்லாரும் விந்திலிருந்து படைக்கப்பட்டனர் என்று இருந்தால், கற்பனை நாத்திகரின் வாதம் சரி எனலாம். அப்படி இல்லாததினால் அவரது வாதம் தவறாகும். அதாவது 3:145 வசனத்தில், அவருக்கு முன்னர் தோன்றிய தூதர்கள் எல்லாம் என்ற சொற்றொடர் இருப்பது போல், உங்களுக்கு முன்னர் தோன்றிய மனிதர்கள் எல்லாரும் என்ற சொற்றொடர் அவர் காட்டிய 3 வசனங்களில் இல்லாததினால் அபூ அப்தில்லாஹ்வின் வாதம் தவறாகும்.
2. ஆதம் நபி (அலை) மண்ணால் படைக்கப்பட்டது போல், பிற மனிதர்களும் மண்ணால் படைக்கப்பட்டனர் என்ற கருத்து திருக்குர்ஆனின் 18:38; 22:6; 23:13; 35:12; 40:68; 37:12; 30:21 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டுள்ளதால் ஆதம் (அலை) அவர்களைத் தவிர பிற மனிதர்கள் விந்தினால் படைக்கப்பட்டனர் என்று சொல்லத் தேவையில்லை.
3. நான் மேலே காட்டிய 7 வசனங்களில் முதல் 5 வசனங்களில் மனிதன் முதலில் மண்ணாலும் பின்னர் இந்திரியத்தாலும் படைக்கப்



-பட்டதாக அல்லாஹ் கூறுகிறான். எனவே மனித இனப் படைப்பில் மண்ணும் இந்திரியமும் இரத்தக்கட்டியும் அமைந்துள்ளன.

4. கற்பனை நாத்திகர் – அபூ அப்தில்லாஹ் எடுத்துக் காட்டியுள்ள மூன்று வசனங்களிலும் மனிதப் படைப்பினைப் பற்றி மட்டும் கூறவில்லை. மாறாக, இந்திரியத்திலிருந்து மனிதனைப் படைத்துள்ளதாகக் கூறுவதுடன் அவற்றில் வேறு சில கருத்துகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அதையும் காண்போம்.
   - *i)* 36:78 வசனத்தில், அற்பத் துளியிலிருந்து படைக்கப்பட்டவன் அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்த இறைவனை எதிர்த்து வாதம் செய்கிறானா? என்ற கருத்தும்,
   - *ii)* 76:3 வசனத்தில், விந்து என்று வராமல் கலப்பு விந்து என்ற சொல் வந்து, அதிலிருந்து படைத்தது, அவனைச் சோதிப்பதற்காக எனவும்,
   - *iii)* 80:20 வசனத்தில் விந்திலிருந்து படைத்து (முன்னேற்றத்திற் கானவற்றை) அவனுக்கு நிர்ணயித்து, அதற்குரிய வழியை எளிதாக்கினான் என்ற கருத்திலும் வருகிறது.

மேலே எழுதிய திருக்குர்ஆனின் 3 வசனங்களிலும் மனிதன் விந்தினால் படைக்கப்பட்டதன் காரணத்தை அல்லாஹ் கூறி 1) இறைவனை எதிர்த்து வாதம் செய்யக் கூடாது 2) மனிதன் சோதிக்கப்பட இருக்கிறான் 3) மனிதனின் எதிர்கால வாழ்வின் வழி நிர்ணயிக்கப் பட்டிருப்பதனையும் சுட்டிக் காட்டவே அவ்வாறு கூறியுள்ளான்.

மொத்தத்தில் கற்பனை நாத்திகரின் வாதம் பொருளற்றதாகும்.

**பக்கம் 43-ல் அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

***இந்தக் காதியானிகளுக்கு ஈஸா (அலை) அவர்கள் தனது தூல உடலுடன் உயர்த்தப்பட்டது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களின் பகுத்தறிவு இதனை ஒப்புக்கொள்ள மறுக்கிறது என வாதிக்கின்றனர். அதே சமயம் ஈஸா (அலை) அவர்கள் தகப்பன் இல்லாமல் அல்லாஹ்வின் வல்லமையைக் கொண்டு பிறந்தார்கள் என்பதைக் காதியானிகள் ஒப்புக் கொள்கின்றனர். (ஆதாரம் : பக்கம் 20-21)***

**எம் பதில் :**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தகப்பனின்றி பிறந்தார்கள் எனத் திருக்குர்ஆன் கூறுவதால் அதனை ஏற்றுக் கொள்கிறோம். அதே திருக்குர்ஆன் 17:94 வசனத்தின்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உடலுடன் வானிற்கு உயர்த்தப்படுவதை சுப்ஹான் என்ற இறை பண்பையும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு மனித தூதர் என்பதையும் காட்டி மறுப்பதனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உடலுடன் உயர்த்தப்பட்டதாக கூறப்படுவதை மறுக்கிறோம்.

ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்கள் அல்லாஹ்வின் வல்லமையைக் கொண்டு பிறந்தார்கள் என்று திருக்குர்ஆன் எங்கும் கூறவில்லை. அல்லாஹ் கூறாததை அபூ அப்தில்லாஹ் அல்லாஹ்வின் பேரில் இட்டுக்கட்டிக் கூறுகிறார்.

இவ்வாறு திருக்குர்ஆனில் உள்ளதை உள்ளது என்றும், திருக்குர்ஆனில் இல்லாததை இல்லை என்றும் நாங்கள் கூறுவதை அபூ அப்தில்லாஹ் பக்கம் 44 -ல் விதண்டா வாதம் என்றும், அற்பமான உலக ஆதாயம் காதியானிகளை ஆட்கொண்டுள்ளது என்றும் கூறுகிறார். அபூ அப்தில்லாஹ் அல்லாஹ்வின் மீது அச்சம் இருந்தால் இதுபோன்ற பிதற்றல்களை எழுதியிருக்கமாட்டார்.

## 22. தந்தையில்லாப் பிறப்புகள்

**அபூ அப்தில்லாஹ் பக்கம் 44-ல்,** *ஆண் தொடர்பின்றி கர்ப்பம் தரிப்பதை இன்று வரை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. சில பறவை இனத்தில் ஆண் தொடர்பில்லாமல் பெண் பறவைகள் கருத்தரிப்பதை விஞ்ஞானிகள கண்டுபிடித்திருக்கிறார்கள். இதை Parthenogenesis என அழைக்கிறார்கள் என்று எழுதியுள்ளார்.*

**நம் பதில் :**

இறைவன் நாடினால் ஆண் பெண் உடல் உறவின்றி கன்னிப் பெண்ணும் கருவுறுவாள் என்பதற்கு அண்மையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. பெரு நாட்டில் லிமா நகரில் 1939 ஆம்



ஆண்டில் 5 வயது சிறுமி ஒருத்தி ஓர் ஆண் மகனை ஈன்றெடுத்துள்ளாள். 1967 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதியன்று ஐவரிகோஸ்ட் எனும் நாட்டிலுள்ள புவாகே என்னும் நகரில் அமிலன் கோப்பி என்ற 11 வயதுப் பெண் ஒருத்தி ஓர் ஆண் மகனை ஈன்றுள்ளாள். (அப்துர்ரஹீம் எழுதிய நபிமார்கள் வரலாறு முதல் பாகம், பக்கம் 7)

**பெண்ணின் மறுபக்கம் எனும் நூலில் பக்கம் 301 ல் உள நலவியல் நிபுணர் டாக்டர் ாலினி எழுதியது:**

கொமொடோடிராகன், சுறாமீன், பறவைகள் மாதிரியான விலங்குகளில் ஆணோடு புணராமலேயே, ஆண் விந்தணுக்களோடு கலக்காமலேயே பெண்கள் கருவுறுகின்றன. அது எப்படி என்று வியந்தால், பெண்ணின் கருமுட்டையில் தான் பாதி ஜீனோம் இருக்கின்றதே! வழக்கமாக ஒரு சமயத்தில் ஒரே ஒரு கருமுட்டையைத் தான் இந்தப் பெண் உற்பத்தி செய்யும். ஆனால் தொடர்ந்து ஆண் வாசமே இல்லாமல் வாழ நேர்ந்தால் இந்தப் பிராணிகள் இரண்டு கருமுட்டைகளை ஒரே சமயத்தில் தயாரிக்கின்றன. இந்த இரு கரு முட்டைகளும் இணைந்தால் அரை ஜீனோம் + அரை ஜீனோம் = முழு ஜீனோம் என்ற நிலை வந்து விட ஒரு புது உயிர் ஜனித்து விடுகிறது. இப்படி ஆணின் விந்தணு கலப்பில்லாமல் அடுத்த தலைமுறை உருவாவதைத் தான் பார்த்தினோஜெனெஸிஸ் (Parthenogenesis) என்கிறோம்.

**அதே நூல் பக்கம் 33 -ல்,** ஆக, ஆரம்பத்தில் ஆண் என்கிற பாலினமே இல்லை. பிழைப்புத்திறனை அதிகரிக்க பெண்ணிலிருந்து ஆண் என்கிற ஒரு புது திரிபை உருவாக்கின மரபணுக்கள்.

இந்தப் பாலின மாற்றம் ஒவ்வொரு முறை ஒரு புதிய உயிர் உருவாகும்போதும் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. மனிதர்களில் கூட எல்லாக் கருக்களுமே ஆரம்பத்தில் பெண்ணாகத்தான் உருவாகின்றன. ஆறு வாரம் பெண்ணாகக் கருவறை வாசம் புரிந்த பிறகே y குரோமசோம் கொண்ட கருக்கள் டெஸ்டோடிரோனைச் சுரந்து தம்மைத்தாமே ஆணாக மாற்றிக் கொள்கின்றன.

ஆக, ஆண் என்பது அடிப்படையில் ஒரு மாறுபட்ட பெண் என்பதால் ஏவாளிடமிருந்துதான் ஆதாம் உருவானான்.

பெண் தான் மூலம். ஆண் என்பவன் அவளுடைய இன்னொரு அவதாரம்.

**அதே நூல் பக்கம் 26 -ல்,** ஆரம்ப கால உலகில் ஆண் பாலினம் என்ற ஒன்றே இருக்கவில்லை. பூமியில் உயிர் என்ற ஒன்று உருவான காலத்தில் எல்லா உயிர்களுமே பெண் பாலினமாக மட்டுமே இருந்து வந்தன. இந்தப் பெண் நன்கு வளர்ந்து பெரிதானதும் தன்னைத்தானே இரண்டாக வகுத்துக் கொண்டாலே போதும்; அடுத்த தலைமுறை உருவாகி விடும். இப்படி இனப்பெருக்கம் செய்வதுதான் உயிர் உருவான காலத்தில் நடைமுறையாக இருந்தது.

இவ்வாறு ஆண் தொடர்பின்றி பெண் கரு கொள்ள முடியும் என்பதற்கு, '**கி.மு., கி.பி**' எனும் நூலில் '**அந்தப் பெண்**' (பக்கம் 14-15) எனும் தலைப்பில் மதன் இவ்வாறு எழுதுகிறார்:

முதல் 'ஆதிமனிதன்' ஒரு பெண் என்பது விஞ்ஞானப்பூர்வமான உண்மை. சுருக்கமாகச் சொன்னால் முதல் மனிதன் 'ஆதாம்' அல்ல 'ஏவாள்' தான்! அதுவும் அவள் ஐரோப்பிய வெள்ளைக்கார ஏவாளும் இல்லை. ஆப்பிரிக்கக் கறுப்பு ஏவாள்!

சுமார் மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பெண் ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் ஒரு மலைச்சரிவில் நடந்து சென்றாள். மலைக்கு அடிவாரத்தில் கடல்! கடற்கரையை நோக்கி அவள் நடந்து சென்றிருக்க வேண்டும். கடலோரமாகச் செத்துக் கிடந்த ஏதோ பிராணி அவள் பார்வையில் பட்டிருக்க வேண்டும். அதைச் சாப்பிடுவதற்காக அவள் மலைச்சரிவில் இருந்து இறங்கியிருக்கலாம். அல்லது வெறுமனே அங்கே சிறிது நேரம் அமர்ந்து இளைப்பாறி கடலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம். அவள் மனதில் என்ன ஓடியதோ, யாருக்குத் தெரியும்?!

ஒரு நல்ல விசயம். நடந்து சென்ற அவள் தன் காலடிச் சுவடுகளை விட்டுப் போயிருக்கிறாள்! சில ஆண்டுகளுக்கு முன்புதான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்தக் காலடிச் சுவடுகளைக்



கண்டுபிடித்தார்கள். ஆராய்ச்சிகள் நடத்தியதில் அந்தச் சுவடுகள் சுமார் மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று தெரிய வந்து விஞ்ஞான உலகம் பிரமிப்பில் ஆழ்ந்தது! சும்மா இல்லை, சந்திரனில் நீல் ஆம்ஸ்ட்ராங் பதித்த முதல் காலடிக்கு இணையானது அல்லவா அது!

நம்மைப் போலவே கைகளை வீசி சாவதானமாக நடந்த அந்த முதல் பெண்ணிடம் ஒரு விசே- ஜீன் இருந்தது என்றும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். மீட்டோ காண்ட்ரியல் டி.என்.ஏ. என்கிற ஜீன் அது. உலகில் உள்ள அத்தனை மனிதர்களும் உருவாக அடிப்படைக் காரணமான ஆதார சக்தி அந்த ஜீன்தான் என்று விஞ்ஞானிகள் பிற்பாடு அறிவித்தார்கள்! ஆகவே, விஞ்ஞான அடிப்படையில் பார்த்தாலும் முதலில் சக்தியில்லையேல் சிவம் இல்லை.

ஆண் உதவி இல்லாமல் தாங்களாகவே வம்சவிருத்தி செய்து கொள்ளக் கூடிய பெண் உயிரினங்கள் உண்டு! அஃபிட்ஸ் என்கிற 'ஈ' வகை ஓர் ஊதாரணம். இந்த வகை உயிரினங்களில் பெண் தானாக உள்ளுக்குள் கருத்தரித்து, ஒரு மகளைப் பெற்றெடுக்கும். வம்ச வம்சமாக தாய், மகள், தாய், மகள் தான்! ஆணே கிடையாது! ஆனால் அத்தனையும் ஒரே மாதிரி 'க்ளோன்'கள் என்பதால் இதில் பரிணாம வளர்ச்சி என்பதே இல்லாமல் போய்விடுகிறது. இறைவன் சில உயிரினங்களை மட்டும் ஒரு சோதனை முயற்சியாக இப்படிப் படைத்திருக்க வேண்டும்! மனித இனத்திலும் பெண் இந்த வகையில் ஆண் உதவியில்லாமல் கருத்தரித்து பெண்களாகப் பெற்றிருந்தால்...?!
(அந்தப் பெண் - பக்கம் 14,15)

**ஜப்பானில் டோக்கியோ விவசாய பல்கலைக்கழகத்தை** (Tokyo University of Agriculture) சார்ந்த Dr. Tomohiro Kono என்பவர் தலைமையிலான குழு ஒன்று காகுயா (Kaguya) என்ற பெயரிடப்பட்ட தந்தையில்லா எலி ஒன்றை ஆய்வகத்தில் உருவாக்கியதன் மூலம் முதன்முதலாக பாலூட்டிகளிலும் கன்னிப்பிறப்பு (Virgin Birth) சாத்தியம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. (Nature, 22 April 2004)

**பிரிட்டிஷ் கவுன்சிலின் அறிவியல் ஆலோசகரான** Dr. Aarathy Prasad என்பவர் கன்னிப்பிறப்பு குறித்து அறிவியல் ஆராய்ச்சி

மேற்கொள்கிறார். அவர் தமது Like a Virgin என்ற நூலில் பாலிலா இனப்பெருக்கம் (Sexless Reproduction) மனிதனிடத்தில் ஏற்பட முடியும் என்பதை விஞ்ஞானப்பூர்வமாக விளக்கியுள்ளார். மேலும் அவர் 1.1.2009 அன்று BBC Radio 4 வானொலியில் The Quest for Virgin Birth என்ற தலைப்பில் வழங்கிய உரையில் ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களிடத்தில் கன்னிப்பிறப்பு நிகழ்ந்தது எவ்வாறு சாத்தியமாயிற்று என்பதற்கான அறிவியல் விளக்கத்தை வழங்கினார்.

எனவே பறவைகளில் மட்டுமல்ல. பாலூட்டிகளிலும் ஆண் தொடர்பின்றி கர்ப்பம் தரிப்பது சாத்தியம் என்பதை விஞ்ஞானிகள் இன்று நிரூபித்திருக்கிறார்கள் என்பதையும் மனித வரக்கத்தில் அதற்கான சாத்தியம் உள்ளது என்பதை விஞ்ஞானிகள் இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதையும் அபூ அப்தில்லாஹ் அறிந்து கொள்ளட்டும்.

## 23. அபூ அப்தில்லாஹ்விற்கு நபிமார்களின் வரலாறு தெரியவில்லை

**அபூ அப்தில்லாஹ் 14 வது பக்கத்தில் எழுதுகிறார்:**

*காதியானிகள் சொல்வதுபோல் உண்மையான ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டிருந்து உயிரோடு இறக்கப்பட்டிருந்தால்,*

* *அந்நிலையில் அவர்களை விட்டு விட்டு அவர்களின் சீடர்கள் பிரிந்து சென்றிருப்பார்களா?*
* *ஈன்றெடுத்த தாயும், தன் உண்மை சீடர்களும் அறியாமல் ஈஸா (அலை) காஷ்மீருக்கு ஓடி ஒளிந்துகொண்டார்களா?*
* *பெற்ற தாயையும் உற்ற சீடர்களையும் மறந்து தனக்குற்ற நபித்துவப் பணியையும் புறக்கணித்து ஒன்றல்ல, இரண்டல்ல நூற்றியிருபது வயது வரை வாழ்ந்திருப்பார்களா?*
* *ஈஸா (அலை) உண்மை இறைத்தூதர், மிர்ஸா குலாம் அஹ்மதைப் போல் போலி நபி அல்ல, சிந்திக்க வேண்டுகிறோம்.*
* *காஷ்மீருக்கு ஓட வேண்டிய அவசியம் என்ன?*
* *நபி கோழையாவார்களா?*



**எம் பதில்:**

அபூ அப்தில்லாஹ்வுக்கு திருக்குர்ஆன் ஞானமும் நபிமார்களின் வரலாறும் அறவே தெரியவில்லை என்பதை பக்கம் 14 -ல் உள்ள அவரது கேள்விகள் அம்பலப்படுத்துகின்றன!

திருக்குர்ஆன் 5:22-25 வசனங்களில், மூஸா (அலை) தம் சமுதாயத்தை நோக்கி, என் சமுதாயமே! அல்லாஹ் உங்களுக்கு விதித்துள்ள புனித பூமியில் நுழையுங்கள். மேலும் புற முதுகு காட்டாதீர்கள் என்று கூற,

அதற்கு அவர்கள் மூஸாவே! கொடிய ஆற்றல் மிக்கவர்கள் அதில் இருக்கின்றார்கள். அவர்கள் இதில் இருக்கின்ற வரை நாங்கள் அதில் நுழையமாட்டோம். எனவே நீரும் உமது இறைவனும் சென்று (அவர்களுடன்) போரிடுங்கள். நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறோம் என்று கூறினார்கள்.

மூஸா நபி (அலை) அவர்களின் சீடர்களின் நிலையைப் பாருங்கள்! திருக்குர்ஆன் 23:51 வது வசனத்தில்,

நாம் மர்யமுடைய மகனையும் அவருடைய தாயையும் ஓர் அடையாளமாக்கினோம். அவ்விருவருக்கும் தங்குவதற்கு ஏற்றதும் நீரூற்றுகளைக் கொண்டதுமான ஓர் உயர்ந்த இடத்தில் தஞ்சம் - அடைக்கலம் அளித்தோம்.

ஆவய்னா ஹுமா - இச்சொல் திருக்குர்ஆனில் ஈமானையும் உயிரையும் காக்க ஹிஜ்ரத் செய்து வேறொரு இடத்தில் தஞ்சம் புகுதல் எனும் பொருளில் வருவதைக் காணலாம். குகையில் இளைஞர்கள் அடைக்கலம் புகுந்ததையும், முஸ்லிம்கள் மதீனாவில் அடைக்கலம் புகுந்ததையும் திருக்குர்ஆன் கூறுகிற போது இச்சொல்லையே பயன்படுத்துகிறது.

எனவே, ஈசா நபி (அலை) அவர்களும், மர்யம் (அலை) அவர்களும் அல்லாஹ்வின் கட்டளைப்படி, காஷ்மீரில் அடைக்கலம் புகுந்தனர் என்பது தெளிவாகிறது.

திருக்குர்ஆன் 8:6; 9:40 ஆகிய வசனங்களில் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு (ஹிஜ்ரத்) செய்கிறார் என்று வருகிறது. அபூ அப்தில்லாஹ் நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஓட வேண்டிய அவசியம் என்ன? என்றும் நபி கோழையாவார்களா? என்றும் எண்ணுவாரா?

திருக்குர்ஆன் 21:88 -ல் மீனுடையவர் (யூனுஸ் நபி) கோபித்துக் கொண்டு சமுதாயத்தை விட்டு விட்டு கப்பலில் ஏறிச் செல்கிறார். எனவே அவர் நபியில்லை என்று அபூ அப்தில்லாஹ் கருதுவாரா?

திருக்குர்ஆன் 27:11-ல் மூஸா நபி (அலை) தன் கைத்தடியைப் பாம்பெனக் கண்டு பின்வாங்கிச் செல்கிறார். இறைவன் மூஸாவே! நீர் அஞ்ச வேண்டாம் எனக் கூறினான். திருக்குர்ஆன் 20:67-68 ல் சூனியக்காரர்களின் கயிறுகளும் கம்புகளும் மூஸா நபியின் கண்களுக்கு பாம்பாகக் காட்சியளிக்கிறது. மூஸா நபி (அலை) தன் மனதிற்குள் ஓர் அச்சத்தை உணர்ந்தார் என்று வருவதால், அபூ அப்தில்லாஹ் மூஸா நபியை கோழை என்றும் நபியில்லை என்றும் நம்புவாரா?

## 24. அகக்கண்ணும் புறக்கண்ணும்

**பக்கம் 58 -ல், அபூ அப்தில்லாஹ்,** ***மிஃராஜில் நபி (ஸல்) அவர்கள், ஈஸா (அலை) அவர்களைக் கண்களால் கண்டது மிர்ஸா குலாமால் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. கண்களால் பார்ப்பதென்றால் தூல உடலுடன் தான் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜுக்குச் சென்றிருக்க வேண்டும். கனவுக் காட்சியைக் கண்களால் கண்டதாக எந்த அறிவீனனும் சொல்லமாட்டான் என்று எழுதியுள்ளார்.***

**நம் பதில் :**

1) யூசுஃப் நபி (அலை) அவர்கள், பதினொரு நட்சத்திரங்களையும் சூரியனையும், சந்திரனையும் நான் கண்டேன். அவை எனக்கு ஸஜ்தா செய்யக் கண்டேன் என்றும், சிறைக் கைதிகளும் மதுரசம் பிழியக் கண்டேன் என்றும், தலையில் ரொட்டியைச் சுமந்திருக்க அதைப் பறவை சாப்பிடக் கண்டேன் என்றும், எகிப்திய அரசனும் கொழுத்த ஏழு மாடுகளை மெலிந்த ஏழு மாடுகள் தின்பதையும், பசுமையான ஏழு கதிர்களையும்



காய்ந்த ஏழு கதிர்களையும் கண்டதாகவும் (12வது அதிகாரம்) காண்கிறோம். அவர்கள் எக்கண்களால் கண்டனர்? அக்கண்கள் கண்ட காட்சிக்கு தூல உடல் இருந்ததா?

2) திருக்குர்ஆன் 37:103ல் என் அருமை மகனே! நான் உன்னை அறுப்பது போல் கனவில் கண்டேன். நீ என்ன கருதுகிறாய்? என்பதைச் சிந்தித்து கூறு என்று (இப்ராஹீம் நபி இஸ்மாயீல் நபியிடம்) கேட்டார்.

என் தந்தையே! உங்களுக்குக் கட்டளையிட்டதைச் செய்யுங்கள்... என்று பதிலளித்தார்.

இறைவன் தன் கட்டளையைக் கனவின் மூலம் ஒரு நபிக்குக் காட்ட, அதனை அவர் காண்கிறார். அதன்படி செயல்படுகிறார் என்றால் எந்தக் கண்களால் அவர்கள் கண்டார்கள்?

அப்படியென்றால், அபூ அப்தில்லாஹ்வின் கூற்றின்படி, ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை), ஹஸ்ரத் யூசுப் நபி (அலை), ஹஸ்ரத் இஸ்மாயில் நபி (அலை) போன்றோரை அறிவீனன் என்று அபூ அப்தில்லாஹ் கருதுகிறாரா? கண்களால் கண்டேன் என்று சொன்னால் அதற்கு புறக்கண் தான் என்று நம்புவதும் பேசுவதும் அகக்கண் குருடர்களின் அறிவீனமான பேச்சாகும்.

## 25. உலகளாவிய கிலாஃபத் 72 பிரிவுகளுக்கும் ஏன் இல்லை?

**அபூ அப்தில்லாஹ் 4வது பக்கத்தில்,**

***காதியானிகளின் தலைமைப் பீடமும் அது வாரி வழங்கும் செல்வங்களையும் பெற்று சுகபோகம் அனுபவிப்பவர்களும், குர்ஆன் ஹதீஸ் ஆகியவற்றின் அடிப்படையில் எழும் நம் விளக்கங்களை ஏற்று, உணர்ந்து, வருந்தி, திருந்தி, சத்திய வழிக்கு வர வேண்டும் என்பதே நமது நோக்கமும் பேரவாவும். எனினும் வருவார்கள் என்ற நம்பிக்கையில்லை என்று எழுதியுள்ளார்.***

**நம் பதில்:**

திருக்குர்ஆன் 24:56வது வசனம், அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின்

முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும்.... அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான்.

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 273-ல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் நாடும் வரை (என்) நுபுவ்வத் நிலைத்திருக்கும். பிறகு அல்லாஹ் அதனை எடுத்துக் கொள்வான். பிறகு, நுபுவ்வத் வழியில் கிலாஃபத் ஏற்படும். அல்லாஹ் நாடும் வரை கிலாஃபத் நீடிக்கும். பிறகு அல்லாஹ் அதனையும் எடுத்துக் கொள்வான். பிறகு கொடுங்கோல் ஆட்சி ஏற்படும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதனையும் எடுத்துக் கொள்வான். பின்னர் சர்வாதிகார ஆட்சி ஏற்படும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பின்னர் அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் ஏற்படும். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதியாகி விட்டார்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் வழங்கிய வாக்குறுதியின்படியும், நபி (ஸல்) அவர்கள் கூறிய முன்னறிவிப்பின்படியும் இன்றைய முஸ்லிம் உலகில், உலகம் தழுவிய அளவில் நுபுவ்வத் வழியில் அமைந்த கிலாஃபத் – ஒரு நபி வந்து அவருக்குப் பின்னர் கலீஃபாக்கள் வருவது – அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் மட்டுமே உள்ளது.

ஏனைய 72 பிரிவுகளிலும் உலக அளவிலோ, இந்திய அளவிலோ இயலா விட்டாலும் தமிழகம் அளவில் ஒரு தலைமையின் கீழ் ஏனைய முஸ்லிம் பிரிவுகள் ஒன்றுபட முடியுமா? முடிந்தால் செய்து காட்டுங்கள். கனவில் கூட அப்படி ஒரு காட்சியைக் காண முடியாது.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை பொய் நபி எனக் கூறும் பெயர் தாங்கி முஸ்லிம் அறிஞர்களிடம் ஒரு வேண்டுகோள்,

நபிமொழி புகாரி ஹதீஸ் எண் 7084 & 3606

நீ முஸ்லிம்களின் ஜமாஅத்தையும் அவர்களது தலைவரையும் இறுகப் பற்றிக் கொள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்



பதிலளித்தார்கள். அதற்கு நான் (நபித்தோழர்) ஒரு ஜமாஅத்தோ ஒரு தலைவரோ இல்லையென்றால் என்ன செய்வது? என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், அந்தப் பிரிவுகள் அனைத்தையும் விட்டு (விலகி) ஒதுங்கி விடு. ஒரு மரத்தின் வேர் பாகத்தை பற்களால் கவ்விப் பிடித்திருக்க நேர்ந்து அதே நிலையில் மரணம் உன்னை தழுவிக் கொண்டாலும் சரி. (எந்தப் பிரிவினரோடும் சேர்ந்து விடாதே) என்று பதிலளித்தார்.

அபூ அப்தில்லாஹ் என்ன செய்யப் போகிறார்?

திருக்குர்ஆனிலிருந்து ஒரு பொய் நபியின் இலக்கணத்தை எடுத்துக் காட்டி, அதற்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பொருந்துவதாகவோ, அல்லது ஒரு உண்மை நபியின் இலக்கணத்தை எடுத்துக் காட்டி, அதற்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பொருந்தவில்லை என்றோ நிரூபித்துக் காட்டுங்கள்.

இவ்வாறு செய்யாதவரை அன்னாரை பொய் நபி எனக் கூறும் உரிமையோ தகுதியோ எவருக்கும் இல்லை. எனவே, அபூ அப்தில்லாஹ் திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் நாம் தந்துள்ள உண்மையான விளக்கத்தை ஏற்று, உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு வருவாரா? வருவார் என நம்புகிறோம். (இன்-ஷா அல்லாஹ்)

## 26. எல்லா நபிமார்களை விட எல்லா வகையிலும் சிறந்தவர் நபிகள் நாயகமே (ஸல்)!

**அபூ அப்தில்லாஹ் பக்கம் 28-ல்,** ***‘தூதர்களில் சிலரைச் சிலரை விட மேன்மையாக்கி இருக்கிறோம்... என்று தான் அல்லாஹ் நவின்றுள்ளானே அல்லாமல் நபி (ஸல்) அவர்களை மற்ற எல்லா நபிமார்களையும் விட எல்லா விசயங்களிலும் உயர்த்தி இருப்பதாகச் சொல்லவில்லை’ என்று எழுதி, ஈஸா (அலை) தகப்பனின்றி பிறந்தது, வானிற்கு உயர்த்தப்பட்டது போன்றவை நபி (ஸல்) அவர்களுக்கு இல்லை என்றும் எழுதியுள்ளார்.***

**நம் பதில்:**

1. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் இமாம் ஆவார்கள். (முஸ்லிம் விளக்கம் எண். 278)

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: (பைத்துல் மக்தஸில்) இறைத் தூதர்களில் ஒரு குழுவினர் இருந்தனர்..... அப்போது (ஒரு) தொழுகையின் நேரம் வந்து விடவே இறைத்தூதர்களுக்கு நான் தலைமை தாங்கி தொழுகை நடத்தினேன்.

2. நபிமார்களின் நாயகர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என இப்னு கஸீர் கூறுகிறார்.

பைத்துல் மக்தஸில் எல்லா நபிமார்களும் கூடினர். அப்பள்ளியில் நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள். இது அவர்கள் அனைத்து நபிமார்களின் தன்னிகரற்ற தலைவர் என்பதைக் காட்டுகிறது என்று கூறுகிறார். (17:1 வசனத்தின் தப்ஸீர் இப்னு கஸீரின் விளக்கம்)

3. எல்லா நபிமார்களையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலானவர் என்பதையே மிஃராஜ் பயணம் காட்டுகிறது.

நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஒவ்வொரு வானத்தையும் கடந்து 7 வானத்தையும் தாண்டி, சித்ரதுல் முன்தஹா வரை சென்று இறைவனுடன் உரையாடி வந்துள்ளார்கள்.

உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களும் தத்தமது தகுதிகளுக்கு ஏற்ப 7 வானங்களில் தான் உள்ளனர். ஆனால் நபி (ஸல்) அவர்களோ அனைத்து நபிமார்களின் ஆத்மீக பதவிகளாகிய 7 வானத்தையும் தாண்டி சித்ரதுல் முன்தஹா சென்றுள்ளார்கள். பூமியில் நின்று ஒருவர் வானத்தைப் பார்த்தால் 7 வானங்களிலும் அனைத்து நபிமார்கள் இருப்பதையும் அவர்களையும் தாண்டி இறுதி எல்லையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இருப்பதையும் காணலாம். இப்பதவி நுபுவ்வத்தின் இறுதிப் பதவியாகும்.



4. காத்தம் எனும் சொல்லை அடுத்து நபிமார்கள் எனும் பன்மைச் சொல் வந்தால் – நபிமார்களுள் காத்தம் என்று வந்தால் அரபி மொழி வழக்கிற்கேற்ப அதற்கு நபிமார்களுள் மிகச் சிறந்தவர் என்றே பொருளாகும். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே காத்தமுன்னபிய்யீன் – நபிமார்களில் மிகச் சிறந்தவர் எனக் கூறுகிறான். இந்த பட்டம் வேறு எந்த நபிக்கும் தரப்படவில்லை.

5. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு முன்னர் வந்த எல்லா நபிமார்களுக்கும் இல்லாத 5 சிறப்புகள் எனக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. (புகாரி, முஸ்லிம், நஸாயீ)

i) ஒவ்வொரு நபியும் அவர்களின் கூட்டத்தினருக்கு மட்டுமே சொந்தமாக அனுப்பப்பட்டிருந்தனர். நானோ கறுப்பர், சிவப்பர் ஆகியோர் (மனித இனம்) அடங்கலுக்கும் அனுப்பப்பட்டுள்ளேன். ii) போரில் கிடைத்த பொருள்கள் எனக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன. எனக்கு முன்னர் அவை எவருக்குமே ஆகுமாக்கப்படவில்லை. iii) எனக்கு பூமி முழுதும் துப்புரவாகவும் தொழுமிடமாகவும் ஆக்கி வைக்கப்பட்டுள்ளன. எனவே எவரேனும் தொழுகை நேரத்தை அடைந்து விடின் அவர் எங்கிருப்பினும் சரியே தொழுது கொள்ளவும். iv) ஒரு மாதப் பயணத் தூரத்திற்கிடையில் எதிரிகள் இருப்பினும் அவர்கள் எனக்கு அஞ்சி நடுங்கும் அளவுக்கு எனக்கு இறைவன் உதவி நல்கியுள்ளான். v) சிபாரிசு செய்யும் முதல் உரிமை.

6. திருக்குர்ஆன் 17:80 –ல் இதனால் உம்முடைய இறைவன் உம்மை புகழுக்குரிய இடத்திற்கு (மகாமே மஹ்மூத்) உயர்த்தக் கூடும். இந்தப் பதவி வேறு எந்த நபிக்கும் இறைவன் வழங்கவில்லை.

7. திருக்குர்ஆன் 108:2 –ல் (நபியே) நிச்சயமாக நாம் உமக்கு (அல்கவ்ஸர்) மிகுதி(யான நன்மை) யினை வழங்கியுள்ளோம். இச்சிறப்பு வேறு எந்த நபிக்கும் வழங்கப்படவில்லை.

8. மறுமையில் சொர்க்கத்திற்கு பரிந்துரைக்கும் முதல் உரிமை நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உண்டு. (முஸ்லிம் ஹதீஸ் எண். 330)

9. இறைத் தூதர்களிலே மிகுதியான மக்கள் பின்பற்றப்படுவதும் நானே. (முஸ்லிம் ஹதீஸ் எண். 330)

10. என் அடியார்களே! என்று அழைப்பதற்குரிய தனது உரிமையை அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே வழங்கியுள்ளான். (39:54)

11. வேதங்கள் பெற்ற நபிமார்களுள் முழு மனித இனத்திற்கும், கியாமத் வரை முழுமையான இறுதியான வேதம் பெற்றவர் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே.

12. நபி (ஸல்) அவர்கள் நான் மறுமை நாளில் மக்களின் தலைவன் ஆவேன் என்று கூறியுள்ளார். (புகாரி 3340)

ஆதம் நபி (அலை), நூஹ் நபி (அலை), இப்ராஹீம் நபி (அலை), மூஸா நபி (அலை), ஈஸா நபி (அலை) ஆகியோரிடம் சென்று மக்கள் தங்களுக்காக பரிந்துரை செய்யும்படி வேண்டி பரிந்துரை கிடைக்கவில்லை. இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பரிந்துரைக்காக வருகிறார்கள். நபி (ஸல்) அவர்கள் இறுதி பரிந்துரை செய்ய இறைவனும் அவர்களின் பரிந்துரையை ஏற்றுக் கொள்கிறான்.

(அல் ஹதீஸ் 2ம் பாகம் பக்கம் 630-631)

13. (கப்ருகளிலிருந்து) எழுப்பப்படும் பொழுது நான்தான் மனிதர்களில் முதல்வனாக வெளிப்படுவேன். அவர்கள் இறைவன்பால் செல்லும்போது நான் தான் அவர்களுக்கு முன்னோடியாக இருப்பேன். அன்றி அவர்கள் நம்பிக்கை இழக்கும் போது நான் அவர்களுக்கு நன்மாராயம் (நற்செய்தி கூறுவேன். அன்று என் கையில் புகழின் கொடி இருக்கும். என் இறைவனிடம் ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகளில் மிகவும் சிறப்புள்ளவன் நான் தான்.

(ஆதாரம் : திர்மிதி, அறிவிப்பாளர் : அனஸ் (ரலி).

14. மறுமை நாளில் நான் நபிமார்களுக்கெல்லாம் தலைவனாகவும் அவர்களின் பேச்சாளனாகவும் இருப்பேன். (ஆதாரம் : திர்மிதி)

15. மறுமை நாளில் நான் சுவனபதியின் வாசலை அடைந்து அதனைத் திறக்குமாறு கோருவேன். அப்போது அதன் காவலர், நீர் யார் என்று என்னை வினவுவார். அதற்கு நான் முஹம்மது (ஸல்) என்பேன். அப்போது அவர் தங்களுக்கு முன்னர் எவருக்கும் வாசலைத் திறக்க வேண்டாம் என்றும், தங்களுக்கே அதனைத் திறக்க வேண்டும் என்றும் நான்



கட்டளையிடப்பட்டுள்ளேன் எனக் கூறுவார் என அண்ணலார் நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். (அறிவிப்பாளர் : அனஸ் (ரலி). ஆதாரம் : முஸ்லிம்)

16. அனைத்துலகுக்கும் அருட்கொடை (21:108) யாக வந்த ஒரே ஒரு நபி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள்.

இவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களையும் விட எல்லா வகையிலும் சிறந்தவர் என்று எடுத்துக் காட்டுகின்றன.

## 27. அதிபர் பூட்டோவின் மரணம் பற்றி, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் முன்னறிவிப்பும் அதிபர் ஜியாவின் அழிவு குறித்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னறிவிப்பும்

**அபூ அப்தில்லாஹ் பக்கம் 6-ல் எழுதுகிறார்:**

***இந்த நூல் வெளியாகும் இந்த காலக்கட்டத்தில் உலகில் அல்லாஹ்வின் நாட்டப்படி இடம்பெறும் சில சம்பவங்களை, தங்களின் சாதனைகளாகக் காதியானிகள் தம்பட்டம் அடித்து வருகின்றனர். குறிப்பாக பாகிஸ்தான் அதிபர் ஜியாவுல் ஹக் அவர்கள் விமான விபத்தில் பலியானது, தங்கள் தலைவரின் முபாஹலாவினால் தான் என்று பறைசாற்றி வருகின்றனர். முன்னால் பாகிஸ்தான் அதிபர் காதியானித் தலைவரின் முபாஹலாவை ஏற்று, அவரோடு முபாஹலா செய்யாத நிலையிலேயே, முபாஹலாவினால் பலியாகி விட்டார் என்று காதியானிகள் பிரச்சாரம் செய்வது அவர்களின் அறிவு சூன்யத்தையே படம் பிடித்துக் காட்டுகின்றது.***

**நம் பதில்:**

Tadhkirah, page 113-114

“With Regard to the death of a certain person, Allah revealed to me through the value of the letters of the alphabet that the date was comprised in the words of the revelation (Arabic) He is a dog and he will die according to the value of the letters in the word dog, which amounts to fifty-two this means that his age will not exceed fifty-two years and that he will die within the course of his fifty second year (Izala Auham pp 186-187)

இந்நூல் இலண்டனில் 1976ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் ஆவார். இந்த இல்ஹாம் 1891ம் ஆண்டு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு வந்தது.

அதாவது, இந்திய – பாகிஸ்தானின் காஷ்மீர் பிரச்சனை ஐ.நா. சபையில் எழுந்த போது பூட்டோ, ஐ.நா. சபையில் இந்திய நாய்கள் குரைக்கின்றன என்று கூறினார். இதனால் இந்திய நாடு கொந்தளித்தது. பத்திரிகைகள் நாயின் படத்தை வரைந்து அதில் பூட்டோ என்று எழுதி, அந்த நாய் குரைப்பது போல் கார்ட்டூன்கள் வரைந்தன.

திருவிதாங்கூரில் நூற்றுக்கணக்கான நாய்களின் வயிற்றில் பூட்டோ என்று எழுதி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு நாய் என்னும் பெயரால் உலகம் அறிந்த நபர் பூட்டோ ஆவார்.

ஜியா ஆட்சிக்கு வந்து, பூட்டோ மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விசாரணை நடத்தி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.

அவர் தூக்கிலிடப்பட்ட போது அவருக்கு வயது 52. நான் மேலே எடுத்துக் காட்டிய இல்ஹாம் பாகிஸ்தானில் பரவிய போது, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிரி அமைப்புகள், அதிபர் ஜியாவிடம் கெஞ்சிக் கூத்தாடி, பூட்டோவின் 52 வது பிறந்த நாளுக்கு முன்னதாகவோ, பின்னதாகவோ அவரை தூக்கிலிடக் கெஞ்சினர். ஆனால் ஜியா மறுத்து விட்டார். அந்த இல்ஹாமின்படி அவர் தூக்கிலிடப்பட்டார்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு 1891ம் ஆண்டில் இறங்கிய இல்ஹாம், பூட்டோ தூக்கிலிடப்பட்ட 1979 ஆம் ஆண்டு நிறைவேறியது.

பூட்டோவுக்கு இந்த இழிநிலை ஏன்?

அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக பூட்டோ, காதியானிகள் முஸ்லிம்கள் அல்லாத சிறுபான்மையினர் என்ற தீர்மானத்தை, பூட்டோ அதிபராக இருந்த போது பாகிஸ்தான் சட்டசபையில் நிறைவேற்றினார்.



அஹ்மதிகளுக்கு எதிராக, போலீஸ், இராணுவம் முன்னிலையில், அஹ்மதி அல்லாத ஆலிம்களின் தூண்டுதலின் பேரில் கொலை, கொள்ளை, தீ வைப்பு போன்ற அராஜகங்கள் நிறைவேறின.

பூட்டோ தூக்கிலடப்பட்டதில் எங்களுக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை.

ஆனால், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு வந்த ஓர் இல்ஹாம் நிறைவேறி, அன்னாரும், அவரது ஜமாஅத்தும் உண்மை என்று உலகில் நிரூபிக்கப்பட்டதில் எங்களுக்கு மகிழ்ச்சி தான். அடுத்து,

பாகிஸ்தான் அதிபராக இருந்து, விமான விபத்தில் தூள் தூளாக சிதறிய ஜியா பற்றி, 5.5.1985-ல் மேலப்பாளையம் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு பிரசுரம் வெளியிட்டது. இது ஜியாவின் மரணத்திற்கு 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஜியா அதிபராக இருந்த போது வெளியிட்டதாகும். இதோ அந்த பிரசுரம்:

## அழிவின் விளிம்பில் அதிபர் ஜியா

இஸ்லாமிய உலகு இன்று ஒரு பேரபாயத்தை எதிர்நோக்கி இருக்கின்றது. இதுபோன்றதொரு அபாயம் இதற்கு முன் ஏற்பட்டிருந்ததாக இஸ்லாமிய வரலாற்றில் இல்லை. இன்று இஸ்லாத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து ரஷ்யாவிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ உருவானது அன்று. அந்த ஆபத்து இஸ்லாமியக் குடியரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் நாட்டிலிருந்து தான் ஏற்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் உயிர் அதன் கலிமா ஆகும். லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி – அதாவது வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர எவருமில்லை முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய தூதராவார்கள் என்ற திருவசனமே கலிமா எனப்படுகிறது. இஸ்லாத்தின் அடிப்படையே இந்த கலிமா ஆகும். இஸ்லாமிய மார்க்கத்தின் சின்னமும் இதுவே ஆகும்.

இந்த புனித கலிமாவை அழிக்குமாறு பாகிஸ்தான் அதிபர் ஜியாவுல் ஹக் உத்தரவிட்டிருக்கிறார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக அஹ்மதிய்யா மஸ்ஜிதுகளில் எழுதப்பட்டுள்ள திருக்கலிமாவை அழிக்க அதிபர் ஜியா உத்தரவிட்டுள்ளார். கலிமா அது யாரால் எழுதப்பட்டிருந்தாலும் அதை அழிக்க எந்த முஸ்லிமும் துணியமாட்டான். ஆனால் ஜியா துணிந்திருக்கிறார். அதுமட்டுமல்ல பாகிஸ்தான் காவல்துறையைச் சார்ந்தவர்கள் கலிமாவை நாங்கள் அழிக்கமாட்டோம் என்று கூறிவிட்ட காரணத்தால், ஜியா பிறரின் உதவியை நாடி இருக்கின்றார். இஸ்லாமிய குடியரசு என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒரு நாட்டில் இன்று பிறரால் கலிமா அழிக்கப்படுகிறது.

லாயிலாஹ இல்லல்லாஹ் – வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று எந்த ஏகத்துவ கோட்பாட்டை உலகில் நிலைநிறுத்துவதற்காக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்தம் சஹாபாக்களும் சொல்லொணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளானார்களோ, அந்த கலிமா இன்று இஸ்லாமிய குடியரசு என்னும் பெயரால் அழிக்கப்படுகிறது.

இஸ்லாம் மனித உரிமைக்கும், கருத்துச் சுதந்திரத்திற்கும் பெரும் மதிப்பளிக்கின்ற ஒரு உயரிய மார்க்கமாகும். நாகரிகம் அவ்வளவாக வளர்ந்திராத காலகட்டத்திலேயே இஸ்லாம் மனித உரிமை பற்றி பிரகடனம் செய்திருக்கிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின்போது ஆற்றிய சொற்பொழிவு இதனை எடுத்துக் காட்டுகின்றது.

இஸ்லாமியக் குடியரசு என தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள பாகிஸ்தான் அரசு அந்த மாநபி (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளையை மீறி செயல்படுகிறதென்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக அல்ல. மாறாக, அந்த மாநபி (ஸல்) அவர்களுக்கு எதிராகவே செயல்படுகிறது என்பதே பொருள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு முரணாக செயல்படும் எந்த அரசும் இஸ்லாமிய அரசாக இருக்க முடியாது! அதற்கு ஆதரவு தரும் எவரும் அந்த ரஸூலின் உம்மத்தாக – சமுதாயமாக இருக்க முடியாது.



மனித உரிமைக்கு பெரும் மதிப்பளிக்கின்ற ஒரு மார்க்கத்தின் பெயரால் அதற்கு குழிதோண்டுகின்ற ஓர் அரசு அந்த மார்க்கத்தை உலக அரங்கில் அவமானப்படுத்துகிறது என்றே கூற வேண்டும். இவ்வாறு இஸ்லாத்திற்கு இழிவைத் தேடி தருகின்ற இத்தகைய அரசுகள் மாற வேண்டும் அல்லது அழிய வேண்டும் என்பதே மார்க்கத்தில் உண்மையான பற்றுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

அஹ்மதி முஸ்லிம்கள் கலிமா சொல்வதை விட்டுவிடவில்லை என்றால் அவர்கள் அதற்கு மதிப்பளிப்பதிலிருந்து விலகிக் கொள்ள வில்லை என்றால் அவர்கள் பாகிஸ்தானில் தண்டனைக்குரிய குற்றவாளியாக்கப்படுகின்றனர். அதிபர் ஜியா அஹ்மதிய்யா மஸ்ஜிதுகளிலுள்ள கலிமாவை அழிக்க உத்தரவிட்டதிலிருந்து அஹ்மதி முஸ்லிம்கள் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்னும் கலிமாவை சட்டைகளிலும், தொப்பிகளிலும், சைக்கிள்களிலும், இதர வாகனங்களிலும் பாட்ஜுகளாக அணிய ஆரம்பித்துள்ளனர். இதற்காக அவர்கள் மூன்றாண்டுகள் வரை சிறை தண்டனை கொடுக்கப்பட்டு பல சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

இறையியக்கங்களுக்கு எதிராகச் செயல்பட்ட எந்த அரசும் அது எவ்வளவு பலமிக்கதாக இருந்தாலும் வெற்றி பெற்றதில்லை என்பது திருக்குர்ஆனும் வரலாறும் எடுத்துக்காட்டும் உண்மையாகும். புனிதக் கலிமாவை காத்திட அனைத்தையும் தியாகம் செய்ய அஹ்மதிகள் தயாராக இருக்கின்றனர். இதிலிருந்து ஒரு அங்குலம்கூட அவர்கள் பின்வாங்க மாட்டார்கள்.

புனித கலிமாவை அழிக்க உத்தரவிட்டுள்ள அதிபர் ஜியா அழிவது உறுதி. உண்மை இஸ்லாமான அஹ்மதிய்யத்திற்கு எதிராக செயல்பட்டு நாசமடைந்த அதிபர் பூட்டோவைப் போல் இவரும் நாசமடைவது உறுதி. இது இறைவனால் எழுதப்பட்டு விட்டது. இது நடந்தே தீரும். இதனை உலகிலுள்ள எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. **அதிபர் ஜியாவின் நாசம் வெகு விரைவில், என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இறைவனால் அறிவிக்கப்பட்டு விட்டது.** உண்மையைத் தேடுபவர்களுக்கு அவரது நாசத்தில் அத்தாட்சி இருக்கிறது.

அடுத்து 5.9.1988 -ல் மேலப்பாளையம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக மற்றுமொரு பிரசுரம் வெளியிடப்பட்டது. அதில் அப்போதைய கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், முபாஹலாவுக்கு அழைப்பு விடுத்த செய்தி பற்றிய விபரம்:

**உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தினை அழிக்க நினைப்போர் ஜியாவைப் போல் அழிவது உறுதி. நல்லவர்களே! உண்மையை உணர முன்வாருங்கள்! கொடிய பகைவர்களே! முபாஹலாவுக்கு முன்வாருங்கள்!**

(நபியே!) உமக்கு உண்மையான ஞானம் கிடைத்த பின்னர் அது பற்றி எவரேனும் (வீணாக) விவாதம் செய்தால் (அவர்களிடம் இவ்வாறு) நீர் கூறுவீராக! வாருங்கள்! நாம் எங்களுடைய பிள்ளைகளையும், உங்களுடைய பிள்ளைகளையும், எங்களுடைய பெண்களையும், உங்களுடைய பெண்களையும், எங்களுடைய மக்களையும், உங்களுடைய மக்களையும் அழைத்து சத்தியம் செய்து பொய்யர்கள் மீது இறைவனின் சாபம் உண்டாவதாக! என வேண்டுவோம். (திருக்குர்ஆன் 3:62)

எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இக்காலத்தின் தூதரையும், அவருடைய ஜமாஅத்தினையும் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக எதிரிகள் மறுத்தும், வெறுத்தும், அழிக்க முயன்றும் வருகின்றனர். பலமுறை அழகிய அறிவுரைகள் கூறியும், இந்த எதிரிகள் திருந்தவில்லை; எனவே திருக்குர்ஆனின் போதனையின்படி உண்மையாளர்களுக்கு இறைவனின் பேரருளும், பொய்யர்களுக்கு அல்லாஹ்வின் ஆற்றல்மிகு தண்டனையும் கிடைக்கவும் அதன் மூலம் நடுநிலையாளர்கள் உண்மையையும், பொய்யையும் பிரித்துணரவும் வேண்டி அனைத்துலக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்நாளைய ஆத்மீகத் தலைவர் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முபாஹலாவுக்கு முன்வருமாறு முழு உலகுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்கள். (இலண்டன் 10.6.88; ஜங் – லாகூர் 10.6.88; ஹைதர் ராவல்பிண்டி 22.6.88)



**அந்த முபாஹலாவில் அவர்கள் கீழ்க்கண்டவாறு வேண்டி இருந்தார்கள்:**

எங்களின் இறைவா! உனது பார்வையில் எங்கள் பிரிவினரில் யார் பொய்யர்களாகவும் இட்டுகட்டிப் பேசுகிறவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்களை ஏளனத்திற்கு ஆளாக்கி உனது தண்டனைகளுக்கும் ஆளாக்குவாயாக! இந்த தண்டனைகளும் ஆபத்துகளும் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவையல்ல; மாறாக முழுக்க முழுக்க அல்லாஹ்வினால் இறக்கப்பட்டவை. அவனுடைய குத்ரத்தின் கைகளே இவ்வாறு செய்கின்றன என உலகம் உணரும் வகையில் உனது தண்டனைகளை வெளிப்படுத்துவாயாக!

இந்த முபாஹலாவில் பங்கு பெறும் எங்களுள் எவருடைய தந்திரமோ, வஞ்சகமோ, சதியோ இதில் இல்லை என உலகம் புரிந்து கொள்ளும் வகையில் எங்கள் இரு பிரிவினரில் யார் பொய்யர்களோ அவர்களின் மீது உனது தண்டனை இறங்கட்டும். அது முழுக்க முழுக்க உனது கோபத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவே இருக்க வேண்டும். அப்பொழுது தான் எது உண்மை, எது பொய் என்பதையும், அநியாயக்காரர்கள் யார்? அநீதிக்கு ஆளானவர்கள் யார்? என்பதையும் உலகம் புரியும்.

எங்கள் இறைவா! தக்வா என்னும் இறை அச்சத்தின் விதையை தங்களின் இதயத்தில் வைத்திருப்பவர்களுக்கும் உண்மையை உணர வேண்டுமென்ற ஆவலுடையவர்களுக்கும் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாத வகையில் உண்மையைக் காண்பதற்கும், உண்மை யார் பக்கம் உள்ளது என்பதை உணருவதற்கும், உனது உதவி யாருக்கு கிடைக்கிறது? என்பதை தெரிந்து கொள்வதற்கும் இதனை ஒரு வழியாக ஆக்குவாயாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

இதன் பின்னர் அனைத்துலக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் இலண்டனில் 1.7.88 அன்று நிகழ்த்திய ஜுமுஆ குத்பாவில் பாகிஸ்தான் அதிபர் ஜியாவுல் ஹக்கைக் குறித்து கீழ்வருமாறு கூறினார்கள்:

பாகிஸ்தான் அதிபரைப் பொறுத்தவரை.... அவர் இந்த முபாஹலாவை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மறுப்போர்களின் தலைவர்களுக்கு தலைவராக விளங்குவதால் அஹ்மதியர்களுக்கு இழைக்கப்படும் எல்லா துன்புறுத்தல்களுக்கும் அவர் தான் பொறுப்பாளி ஆவார். அப்படிப்பட்டவர் இந்த முபாஹலாவை நாவால் ஏற்க வேண்டுமென்ற அவசியமில்லை. (அஹ்மதிகளுக்கு எதிராக) அநீதி இழைப்பதையும், அநியாயம் புரிவதையும் நிறுத்தாமல் இருப்பது, அவர் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகும். எனவே, இறைவனுக்கு எதிராக நிற்கவும், நீதியைக் கொலை செய்யவும் அவருக்கு எந்த அளவுக்கு துணிவிருக்கிறது என்பதற்கு காலம் பதில் சொல்லும். (குத்பா ஜுமுஆ 1.7.88)

இந்த அழைப்பிற்குப் பின்னரும் அதிபர் ஜியா அஹ்மதிகளுக்கு எதிராக அநீதி இழைத்தும், அத்துமீறியும் செயல்பட்டு வந்ததனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள், 22.7.88 அன்று இலண்டனில் நடைபெற்ற 6000 அஹ்மதிகள் கலந்து கொண்ட ஒரு மாநாட்டில், ஒரு வருடத்திற்குள் பொய்யர்கள் மீது இறைவனின் கோபம் இறங்கட்டும். அதனால் உண்மையாளர்கள் யார்? பொய்யர்கள் யார்? என்பதை உலகம் புரிந்து கொள்ளும் என துஆ செய்தார்கள். (ஆசியன் ஹெரால்ட் – இலண்டன் 9.8.88)

மேற்கண்டவைகளிலிருந்து 17.8.88 அன்று பாகிஸ்தானில் நிகழ்ந்த அதிபர் ஜியாவுல் ஹக்கின் பரிதாபகரமான முடிவு இறைவன் இருப்பதற்கும், அஹ்மதிய்யா இயக்கத்தின் தலைவர் எல்லா அஹ்மதிகளின் சார்பாகவும் செய்த துஆவினை இறைவன் ஏற்றுக் கொண்டான் என்பதற்கும் ஓர் அரிய சான்றாக விளங்குவதுடன் அஹ்மதிய்யத்தின் உண்மைக்கு இது ஒரு ஒளிமிக்க சான்றாகவும் திகழ்கின்றது.

அதிபர் ஜியா அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளில் முழுமையாக



ஈடுபடத் தொடங்கிய போது நாங்கள் 5.5.85-ல் ஜியாவை எச்சரித்து, "அழிவின் விளிம்பில் அதிபர் ஜியா" என்ற தலைப்பில் வெளியிட்ட பிரசுரத்தின் இறுதிப் பகுதியினை கீழே தருகின்றோம்.

புனித கலிமாவை அழிக்க உத்தரவிட்டுள்ள அதிபர் ஜியா அழிவது உறுதி. உண்மை இஸ்லாமான அஹ்மதிய்யத்திற்கு எதிராக செயல்பட்டு நாசமடைந்த அதிபர் பூட்டோவைப் போல் இவரும் நாசமடைவது உறுதி. இது இறைவனால் எழுதப்பட்டு விட்டது. இது நடந்தே தீரும். இதனை உலகின் எந்த சக்தியாலும் தடுத்த நிறுத்த முடியாது. அதிபர் ஜியாவின் நாசம் வெகுவிரைவில் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இறைவனால் அறிவிக்கப்பட்டு விட்டது. உண்மையைத் தேடுபவர்களுக்கு அவரது நாசத்தில் அத்தாட்சி இருக்கிறது.

முஸ்லிம்களுக்கும், ஏனையவர்களுக்கும், நல்லவர்களுக்கும், பகைவர்களுக்கும் ஓர் இறுதி அறிவுரை:

எல்லாம் வல்ல இறைவனால் அனுப்பப்பட்டவரும், ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களால் நபி என முன்னறிவிக்கப் பட்டவருமான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களையும், அவர்களின் ஜமாஅத்தினையும் மூட ஆலிம்களின் சொல்லுக்குப் பலியாகி உண்மை என உணராமல் இருக்கும் நல்லவர்களே! நீங்கள் நடுநிலை உள்ளத்துடன் இன்றே இதுபற்றி சிந்தித்து எங்களுடன் தொடர்பு கொண்டு உண்மையை உணருமாறு அல்லாஹ்வின் பெயரால் வேண்டுகிறோம். இறைவன் உங்களுக்கு வழிகாட்டுவானாக!

பிடிவாதமாக உண்மையை உணர மறுப்பதுடன் எங்களை வெறுக்கவும், எங்களை அழிக்கவும் விரும்புகின்ற எதிரிகளே! நீங்கள் உண்மையாளர்கள் என்றால் இந்த முபாஹலாவை ஏற்றுக் கொண்டு இறைவனிடத்தில் யார் பொய்யர்களோ அவர்களை அழிக்குமாறு துஆ செய்ய முன்வாருங்கள்.

இதன் பின்னரும், உண்மையை உணர முயலாமல், முபாஹலாவிற்கு முன் வராமல் எதிர்ப்பு வேலைகளில் நிலைத்திருந்தால்,

இறைவனின் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு உங்களுக்கு எதிராகத்தான் அமையும் என்பது உறுதி. உறுதி.

## 28. கடந்த கால பொய் நபிமார்களுக்கு முகவரி உண்டா?

**அபூ அப்தில்லாஹ் பக்கம் 41-ல் மைக்கேல் ஹார்ட் கூறுகிறார் எனும் தலைப்பில் எழுதுகிறார்.**

இதில் அவர் எடுத்து வைக்கும் வாதம், அவர் திறனாய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள நூலில் இல்லை. காதியான் நண்பர்கள் கூறிய வாதத்தைப் பற்றிக் கூறியுள்ளார். இதுவும் அபூ அப்தில்லாஹ் திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட நூலின் எல்லையைத் தாண்டிச் சென்றுள்ளதைக் காட்டுகிறது.

அதில் அபூ அப்தில்லாஹ் கூறுவதனைச் சுருக்கமாக கீழே தந்துள்ளேன்.

*காதியானிகள் இன்று ஓரளவு வளர்ந்து உலகின் பல பகுதிகளில் பரவியிருப்பதை ஆதாரமாகக் காட்டி, அவர்கள் தாம் சத்தியத்தில் இருப்பதாக கூறுகின்றனர். ஈஸா (அலை) அவர்களின் யதார்த்த இஸ்லாம் பவுலால் திரிக்கப்பட்டு கிறித்தவ மதமாக உலகில் பரவி பிறரை விட அதிக எண்ணிக்கையிலும், பல துறைகளில் சாதனைப் படைத்தும் வருவதால், அவர்களைச் சத்தியத்தில் இருப்பதாக விழம்ப காதியானிகள் முன் வருவார்களா?*

**நம் பதில்:**

உலகில் இறைவன் தன் உண்மையான நபிமார்களுக்கு மட்டும் தான், காலம் கடந்தும், நாட்டின் எல்லைகளைத் தாண்டியும் கண்ணியத்தையும், கௌரவத்தையும் கொடுப்பான் என்பதை விளங்கிக் கொள்கிறோம். ஈஸா நபி (அலை) அவர்கள் கடவுளாக்கப்பட்டும் அவர்களின் கொள்கைகள் திரிக்கப்பட்டும் போன நிலையிலும் கூட ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் அன்னார் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் மதிக்கப்படுவது அன்னார் ஓர் உண்மையான நபி என்பதனாலாகும்.



மறுபக்கம், உலகில் ஒரு பொய் நபிக்கு ஒரு நூற்றாண்டைக் கடந்தும் ஒரு ஜமாஅத்தும் அந்நபிக்குப் பின்னர் கலீஃபாக்களும் தோன்றி 200 நாடுகளில் 20 கோடி மக்களைக் கொண்ட வளர்ச்சியும் இருந்தது என்ற ஒரேயொரு சான்றை அபூ அப்தில்லாஹ் தருவார் என்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொய் என ஏற்றுக் கொள்கிறோம். உலகில் யாராவது முடிந்தால் சான்றைக் கொண்டு வாருங்கள்.

## அபூ அப்தில்லாஹ்வின் நிதி நெருக்கடியும், வசூல் ராஜாக்களும்

**பக்கம் 6 -ல் அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

*நிதி நெருக்கடி காரணமாக முன்பு அறிவித்தது போல் அனைத்தையும் ஒரே நூலாக வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம். இந்நூலும் ஒரு சில கண்ணியவான்களின் பொருளாதார உதவிகள் மூலமே சாத்தியமாகின்றது.*

**நம் பதில்:**

அபூ அப்தில்லாஹ் அவர்கள் நிதி வி-யத்தில் நீதியுடன் நடப்பதாகத் தெரிகிறது. அல்லாஹ் நன்கறிவான். ஆனால் இஸ்லாத்தில் சில அமைப்புகள் வசூல் எனும் பெயரில் வீடு வீடாக, தெருத் தெருவாக, கடை வீதி, கடை வீதியாக கையேந்தி, மக்களின் இரத்தத்தை உறிஞ்சி, பிழைப்பு நடத்துகின்றன. இவர்கள் மக்களிடம் வசூல் செய்யும் பணத்திற்கு ரசீது கொடுப்பதில்லை. வரவு செலவு கணக்கை மக்கள் மன்றத்தில் காட்டுவதில்லை. ஆலிம்களுள் பெரும்பாலார் ரமலானில் தராவீஹ் தொழ வைக்க விலைவாசியைக் காட்டி, பேரம் பேசி, பல்லாயிரம் ரூபாய்களை கூலியாக வாங்குகின்றனர். அல்லாஹ்வின் வசனத்தை அற்ப விலைக்கு விற்கக்கூடாது என்பதற்காக, அதனை மிகப்பெரிய விலைக்கு விற்று, வயிறு வளர்க்கின்றார்கள் போலும்!

இன்னும் சிலர் மார்க்க சொற்பொழிவிற்காக பயான்கள், சிறப்புப் பயான்கள், பெண்கள் பயான்கள் என்னும் பேரில் வசூல் செய்து வாழ்க்கை நடத்துகிறார்கள். அபூ அப்தில்லாஹ்வைப் போன்றோர் குர்ஆன் ஹதீஸுக்கு மாற்றமான கருத்துகள் அடங்கிய ஆகாசப் புளுகு

போன்ற நூல்கள் எழுதி, விற்று வளமான வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கும் பிற முஸ்லிம் அமைப்புகளுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

திருக்குர்ஆனில் எல்லாம் இருக்கிறது. அதில் இல்லாதது எதுவும் இல்லை என்றால்,

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி வந்த ஒரு உம்மத்தி நபி இல்லை. அதாவது அவர் பொய் நபி என்று நம்புகிறார்கள் என்றால், ஒரு பொய் நபியின் இலக்கணத்தை காட்டி அதற்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பொருந்துகிறார்கள் என்று நிரூபித்துக் காட்டுங்கள். முடியாவிட்டால் திருக்குர்ஆனின் ஒரு உண்மை நபியின் இலக்கணத்தைக் காட்டி அதற்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் (அலை) அவர்கள் பொருந்தவில்லை என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். அவர்களின் நிதி நெருக்கடிக்கு அன்பளிப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

இந்த அறைகூவலுக்கு முன்வருவோர் உலகில் யாரேனும் உண்டா?

## 29. இரு வேறு ஈஸா நபிமார்கள்

**பக்கம் 53ல் அபூ அப்தில்லாஹ் எழுதுகிறார்:**

***ஈஸா (அலை) அவர்கள், அல்லாஹ்வின் உத்தரவு கொண்டு குஷ்டரோகிகளையும், கடும் வியாதியஸ்தர்களையும் சுகப்படுத்தியது, இறந்தவர்களை உயிர்ப்பித்தது, இப்படிப்பட்ட தனிச்சிறப்புகளை உடையவர்களாக ஈஸா (அலை) இருந்தார்கள்.***

**நம் பதில்:**

ஈஸா நபி (அலை) முதலில் வந்த போது செய்த அற்புதங்களை அபூ அப்தில்லாஹ் கூறியுள்ளார். ஈஸாவின் இரண்டாவது வருகையின் போது அவர் சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார்; ஜிஸ்யா வரியை நீக்குவார்; செல்வங்களை வாரி வாரி வழங்குவார்; நீதியை நிலைநாட்டுவார்; தீர்ப்பு வழங்குவார்; தஜ்ஜாலைக் கொல்வார் என்று நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளது.



நம் கேள்வியாவது, முதலில் வந்த போது செய்த செயல்கள் அவர் இரண்டாவது வரும் போது செய்வார் என்று ஏன் கூறப்படவில்லை? இரண்டாவது வருகையில் செய்யும் செயல்கள் முதல் வருகையில் ஏன் சொல்லப்படவில்லை? இவ்விரண்டும் தனித்தனியாகவும், வெவ்வேறாகவும் உள்ளனவே! ஏன்?

ஈஸா நபி (அலை) அவர்களுக்கு மட்டும் கொடுத்த அந்த அற்புதங்களை அவர் இரண்டாவது வரும் போதும் செய்வார் என்று ஏன் கூறவில்லை? அப்போது உலகில் யாரும் இறக்கமாட்டார்கள் என்பதாலா? அல்லது குருடர்கள், தொழுநோயாளிகள் யாரும் இருக்க மாட்டார்கள் என்பதாலா? அல்லது பறவைகளைப் படைப்பதற்கு களிமண் இருக்காது என்பதினாலா? அல்லது பறவைகள் போதிய அளவுக்கு இருந்ததினால் இனி பறவைகளைப் படைக்க வேண்டிய தேவை இல்லை என்பதனாலா? அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு அவர் முன்பு படைத்தார். ஆனால் இரண்டாவது வருகையின் போது அல்லாஹ் அனுமதி கொடுக்க மறுத்து விட்டதனால் அவ்வாறு செய்யவில்லையா? ஈசா நபி (அலை) அவர்கள் செய்த அற்புதங்கள் அனைத்தும் உவமை வடிவில் அமைந்தவை என்பதை அபூ அப்தில்லாஹ் உணரத் தவறி விட்டார்.

அடுத்து ஈசா நபி (அலை) மீண்டும் வரும் போது செய்வார் என்று கூறப்படும், பன்றியைக் கொல்வார் என்ற செயலை முதல் வருகையின் போது அவர் ஏன் செய்யவில்லை? பன்றிகள் அக்காலத்தில் இல்லை என்பதினாலா?

முதல் வருகையின் போது ஈசா நபி (அலை) ஏன் செல்வங்களை வாரி வாரி வழங்கவில்லை? ஈசா நபி (அலை) அவர்களிடம் செல்வம் இல்லை என்பதாலா? அல்லது எல்லாரும் செல்வர்களாக இருந்ததினால் வாரி வழங்க வேண்டிய தேவை இல்லை என்பதாலா? இச்செயல்கள் எல்லாம் உவமை வடிவில் அமைந்தவை என்பதை அபூ அப்தில்லாஹ் உணரத் தவறி விட்டார். அது மட்டும் இல்லை. முதல் வருகையில் நீதியை நிலைநாட்டித் தீர்ப்பு வழங்காதது ஏன்? அக்காலத்தில் அவை சரியாக இருந்தன என்பதினாலா? அல்லது ஈஸா நபியால் அப்போது செய்ய முடியாது என்பதாலா? நவூதுபில்லாஹ். முதலில் வந்த போது தஜ்ஜாலைக்

கொல்லவில்லையே! ஏன்? அவன் அப்போது இல்லை என்பதினாலா? அல்லது ஈஸா நபியால் கொல்ல முடியாது என்பதினாலா? நவூதுபில்லாஹ்.


இருவேறு ஈசா நபி என்பதால், இரு வேறு நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன என்பதையாவது அபூ அப்தில்லாஹ் உணர்ந்தால் போதும்.

மேலும், முதலில் வந்தவர் இஸ்ரவேலர் சமுதாயத்திற்கு மட்டும் வந்தவர். அவர் முழு உலகுக்கும் நபியாக வர முடியாது.

இரண்டாவது வரக்கூடியவர் முழு உலகுக்கும், நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி வரும் உம்மத்தி நபி என்பதால் இரு வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளன. இதுவே உண்மை.

* * * * *

**ஹஸ்ரத் மஸீஹ் ஈசப்னு மர்யம் (அலை) அவர்கள்
பாலஸ்தீனத்திலிருந்து காஷ்மீருக்கு
ஹிஜ்ரத் செய்த பாதை**




*முன் அட்டைப்படம்: காஷ்மீர் - ஸ்ரீநகரிலுள்ள கான்யார் வீதியில் காணப்படும் ஹஸ்ரத் மஸீஹ் ஈசப்னு மர்யம் (அலை) அவர்களின் கல்லறை*



**ஹஸ்ரத் மஸீஹ் ஈசப்னு மர்யம் (அலை) அவர்கள் பற்றிய ஆய்வு நூல்கள்:**

1. *இந்தியாவில் இயேசு*
2. *ஈஸா (அலை) அவர்களின் மரணம்*
3. *இயேசு மரித்தது எங்கே?*
4. *சிலுவையில் மரணம்*
5. *Jesus in India*
6. *Where did Jesus die?*
7. *Christianity : A Journey from facts to fiction*
8. *A Man that is called Jesus*